www.tamilarangam.net

# எரிமலை

ஓகஸ்ட் 2003



போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும் - சமாதான முயற்சிகளில் சமபலம் பேணலும்



சமாதானத்துக்கான கரங்கள் அடிப்பவனைத் தடுப்பதற்குத்தான் உயர வேண்டுமே தவிர அடிக்கப்படுபவனைப் பிடிப்பதில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## காலமாற்றம் தந்த காட்சி




சிறீலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரசபை வளாகத்தினுள் பறக்கும் தமிழீழத் தேசியக்கொடி

www.tamilarangam.net

# எரிமலை

## உள்ளே...

### கட்டுரைகள்


மணலாற்றில் மீள்குடியேற்றம் நடக்குமா? பக்கம் - 11


### அணையாத தீபங்கள்


லெப். கேணல் ராதா பக்கம் - 42


### உண்மைப் பதிவு


இத்திக்கண்டல் தயார் - மணலாறு விஜயன் பக்கம் -16


### கவிதை


எழுதாத உன் கவிதை - நாதினி பக்கம் - 12

ஆர்த்தெழும் - அலையிசை பக்கம் - 14

ஆதிலட்சுமி சிவகுமாரின் கவிதைகள் பக்கம் - 20

நேசராச்சியம் - மலைமகள் பக்கம் - 26

மௌனமாய்ப் பேசும் குரல் - யோ.புரட்சி பக்கம் - 34

உள்ளத்துணர்வு - உயிரவன் பக்கம் - 38

எப்போது விடியும் என் இரவு - செந்தணல் பக்கம் - 39


### சிறுகதை


முடிவு - யோகவதி பக்கம் - 24

பூனைகளின் சொர்க்கம் - எமிலிசோலா தமிழில் சு.மகேந்திரன் பக்கம் - 30

மைதிலி -அ. காந்தா பக்கம் - 32

தென்னம்பிள்ளை - தமிழவள் பக்கம் - 36

விடிவு - கலைச்செல்வி - சுரேந்திரன் பக்கம் - 40

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட - சுழிபுரம்.த. பிரபாகரன் பக்கம் - 46


### தொகுப்பு


நினைவுக்குறிப்பு.... பக்கம் - 50

மீள்பார்வை பக்கம் - 51

பதிவுகள்...... பக்கம் - 52



**04** சமாதானத்துக்கான கரங்கள் அடிப்பவனைத் தடுப்பதிற்தான் உயர வேண்டுமே தவிர அடிக்கப்படுபவனைப் பிடிப்பதிலல்ல





**08** போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும் - சமாதான முயற்சிகளில் சமபலம் பேணலும்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கின்றது




"உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கையில் தங்கியிருக்கவில்லை; எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கின்றது. நீதியும் நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது; நாம் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும்; தளராத உறுதி பெற்றவர்களாக இருக்கவேண்டும்"

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

இருபத்தியிரண்டாம் ஆண்டு
ஓகஸ்ட்
2003

திருவள்ளுவர் ஆண்டு 2034

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com
www.erimalai.com

# தலைவாசல்

## ஞானம் பெறவேண்டிய வேளையிது

தமிழ் மக்கள் மீண்டும் அனுபவங்களை மீட்டுப்பார்க்க வேண்டிய கட்டம் தோன்றியுள்ளது. கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாகப் பெற்றுவந்த வரலாற்றுண்மைகள் எத்தகைய பாடங்களைத் தந்தன என்பது மீண்டும் இப்பொழுது ஞாபகப்பரப்பில் வந்துநிற்கிறது.

பேச்சுவார்த்தைகள் மிகுந்த நம்பிக்கையளிப்பனவாகத் தொடங்கிப் பிறகு, நம்பிக்கையீனங்களிலேயே முடிவடைந்திருக்கின்றன. பேச்சுவார்த்தையைத் தொடங்கும்போது எப்பொழுதும் சிங்களத் தரப்பினர் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து எல்லாவற்றையும் தருவதாகவே சொல்வார்கள். எல்லாவற்றையும் தருவதாகச் சொல்லித் தொடங்கும் பேச்சுவார்த்தைகள் எவற்றையுமே தரமுடியாதென்ற பதிலாகமாறி மெல்ல மெல்ல முடிவுக்கு வந்துவிடும்.

இந்தத் தடவை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின்போதும் இத்தகைய வாக்குறுதிகளின் குவியல் தமிழ்மக்களின் முன் வைக்கப்பட்டன. பேச்சுவார்த்தை நகர்வுகளின் போது அவர்களுடைய வாக்குறுதிகளுக்கான பெறுமானங்களை அவர்களே நிறுவமுடியாமல் தடுமாறுவதை அவதானிக்கலாம். வெறும் வாக்குறுதிகளின் மறைவில் தொடர்ந்து எந்தத் தந்திரோபாயங்களையும், காய்நகர்த்தல்களையும் நடத்தமுடியாதென்ற அவர்களுடைய அனுபவத்தையே அவர்கள் மறந்திருப்பதுதான் இதில் மிகுந்த வேடிக்கையானது.

எப்போதும் தமக்குப் பாதுகாப்பளிப்பதாகச் சிங்களத்தரப்பினர் நம்பிக்கை கொள்ளுமளவுக்கு அவர்களிடம் ஒரு அரசியல் சட்டமூலம் இருக்கிறது. தமிழ்மக்களுடைய உரிமையை வழங்கமுடியாமற் தடுப்பதிலும் தமிழர்களை ஒடுக்குவதற்கும் அந்தச் சட்டமூலம், அந்த அரசியற் சாசனம் அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. சிங்களத்தரப்பின் மூத்த அரசியலாளர்கள் வகுத்த தந்திரோபாயம் இது.

ஆனால் அவர்கள் பெருமைப்பட்டுக்கொள்ளும் இந்தத் தந்திரோபாய அரசியற் சாசனம்தான் இன்றைக்கு வெளியாரின் தலையீடுகளை அதிகளவிற்கு முழு இலங்கைக்கும் கொண்டுவந்திருக்கிறது. தமிழர்களுடைய உரிமையைத் தடுக்கும்போது அவர்களுக்குத் தெரிவதில்லை தங்களுடைய உரிமையையும் சேர்த்து வெளியுலகத்திற்குத் தாரைவார்க்கிறோம் என்று.

வெளியுலகம் வகுத்து வைத்திருக்கும் தந்திரோபாயமான உரிமைகளுக்கான சட்டங்கள் உள்நாட்டு உரிமைமறுப்பாளர்களைச் சிறைப்பிடிக்கும் அளவுக்கு இன்று அவை வலுப்பெற்றிருக்கின்றன. இந்த யதார்த்தத்தை ஒடுக்குமுறை செய்யும் தரப்புப் புரிந்துகொள்ள வேண்டும். இதைப்புரியாததால்தான் இன்றைய வெளியார் தலையீட்டின் நெருக்குவாரம் அதிகரித்திருக்கிறது.

இதைப்புரிந்து கொள்ளக்கூடிய மனவிரிவும் அரசியல் அறிவும் இல்லாத ஒரு யதார்த்தம் தொடர்ந்து பெருகி வந்தால் சிங்களவர் முழு இலங்கையையும் தாரைவார்த்து யார் யாரோவுக்கெல்லாம் கொடுத்துவிட வேண்டியே வரும்.

தமிழருக்குரிய உரிமையையே வழங்க அஞ்சுபவர்கள், தமிழீழம் என்ற சொல்லைக் கண்டே திகிலடைவோர் முழு இலங்கையையும் வேறு யாருக்கோ கொடுக்கத் துணிந்திருப்பதுதான் வேடிக்கையானது. இந்த இடத்தில் கூடுதலாகச் சிந்திக்கும் பொறுப்பு சிங்களத் தரப்பிற்கேயிருக்கிறது.

தமிழர் தரப்பு மெய்யாகவே சமாதானத்திற்கும், இந்தத் தேசத்திற்கும், சுயமரியாதைக்குமாகச் சிந்தித்தும், செயற்பட்டும் வருகிறது. அதனாலேயே இடையீடுகளுக்கப்பாலான மெய்யான புரிந்துணர்வுகளுக்கும், மேலான சமாதானத்திற்குமாகவே அது பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானத்துக்கான கரங்கள் அடிப்பவனைத் தடுப்பதிற்தான் உயர வேண்டுமே தவிர அடிக்கப்படுபவனைப் பிடிப்பதிலல்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒடுக்கப்படும் ஓர் இனம் நீதி நியாயத்தை நிலைநாட்டுவதற்காகவும் குறைந்த பட்சம் அடிப்படை மனித உரிமைகளை அனுபவிப்பதற்காகவும் அதிகவிலை கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே இன்றைய சர்வதேச ஒழுங்கின் யதார்த்தமாய் உள்ளது.

இருபெரும் சிங்கள அரசியற் கட்சிகளினதும் உள்நாட்டு அரசியல் நிலவரப்படி சமாதானத்திற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவானதென்பதே உண்மை. இருபெரும் கட்சிகளையும் பொறுத்தவரை சமாதானம் என்பது நிதி பெறுவதற்கான ஒரு ஆயுதம் அல்லது பதவியிலிருப்பதற் கான ஒரு வழி அல்லது தமிழர்களை ஏமாற்றுவதற்கான ஒரு மார்க்கம். எனவே சமாதானத்தைக் குழப்பினால் அல்லது சமாதானத்தை எந்தக் கட்சியாவது குழப்பினால் இலங்கைக்கு நிதியுதவி இல்லையென்ற அழுத்தத்தையும் அதற்கு நிகரான வற்புறுத்தல்களையும் சர்வதேச சமூகம் மேற்கொள்ளுமிடத்து இவ்விரு கட்சிகளும் சமாதானத்திற்கெதிராகச் செயற்படும் வாய்ப்புகள் குறைவடையும்.

இவ்விருபெரும் கட்சிகளும் தமது உள்நாட்டு அரசியலை அதிகம் வெளிநாடுகளைப் பயன்படுத்துவதன் மூலமே செய்கிறார்கள். கொழும்பு எப்பொழுதும் இந்தவகையில் வெளிநாடுகளைக் கவர்ந்து தமிழருக்கெதிரானதொரு அரசியல் வியூகத்தை வடிவமைக்கிறது. அப்படிப் பார்க்குமிடத்து இது விடயத்தில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பு அதிகமென்பதே உண்மை.

இந்த வகையில் வெளிநாடுகளை கொழும்பு கையாண்டவிதம் பற்றிய ஒருசில உதாரணங்களைப் பார்ப்பது அவசியம். இருபெரும் கட்சிகளாகிய ஐ.தே. கவும், சு.கவும் ஏறக்குறைய சமபலம் பெற்றிருப்பது இத்தகைய கையாளலை அதிகம் இலகுவாக்கி விடுகிறது. இத்தகைய கையாளல்களின்போது வெளிநாடுகள் கொழும்பைத் திருப்திப்படுத்த எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இறுதியில் பலியாவது ஈழத்தமிழர்கள்தான். இவ்விரண்டையும் இணைத்த சில உதாரணங்களை மட்டும் நோக்குவோம்.

1942 ஆம் ஆண்டு உருவான அரசியல் யாப்பு தமிழரின் முழு எதிர்ப்பிற்கு உள்ளாகிய ஒன்று. ஆனால் கட்டுநாயக்கா விமானத்தளத்தையும் திருகோணமலை துறைமுகத்தையும் பிரித்தானியர் தமக்குத் தளமாகப் பெறும் நோக்கத்துடன் சிங்களத் தலைவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அந்த யாப்பை வடிவமைத்தனர். பிரித்தானியருக்குத் தளம் கொடுத்து தமிழருக்கெதிரான யாப்பு உருவாக்கப்பட்டுவிட்டது.

ஆனால் 1956ஆம் ஆண்டு பதவிக்கு வந்த திரு. பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி தளத்தை அகற்றிவிட்டு அந்த யாப்பைப் பேணியது. அத்துடன் அந்த யாப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கென இருந்த ஒரு சிறிய ஏற்பாடாகிய 29 ஆவது சரத்தைக்கூட எந்தவகையிலும் பொருட்படுதாமல் அதனை மீறி தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியது.

இதிலுள்ள துயரமான விடயம் என்னவென்றால் முதலில் பிரித்தானியருக்கு தளம் கொடுத்து தமிழருக்கெதிரான யாப்பைப் பெற்றுவிட்டு பின்பு தளத்தை நீக்கியபோது அந்தப் பிழையான யாப்பை அப்படியே பேணமுடிந்ததுடன் மேலும் அந்த யாப்பை மீறியும் தமிருக்கெதிரான சட்டத்தைக் கொண்டு வந்தனர். இந்த இடத்தில் வெளிநாட்டைப் பயன்டுத்தி தமிழர்கள் பாதிக்கப்பட்டவிதம் ஒரு தெளிவான உதாரணமாகும்.

சோல்பரி யாப்பை உருவாக்கிய சோல்பரி பிற்காலத்தல் திரு.சி. சுந்தரலிங்கத்திற்கு எழுதிய கடிதங்களில் தான் திரு. D.S சேனநாயக்காவை நம்பியே அந்த யாப்பை உருவாக்கியதாகவும் தான் அதில் தமிழருக்கு தவறிழைத்து விட்டதாகவும் அதில் ஒப்புக்கொண்டுள்ளார். இக்கடிதங்கள் 1961 ஆம் ஆண்டு சுந்தரிலிங்கத்தால் வெளியிடப்பட்ட அவரது நூலொன்றில் உள்ளன. பின்பு பேராசிரியர் பாமரால் எழுதப்பட்ட பிளவுபட்ட இலங்கை என்று பொருள்படும் நூலிற்கு எழுதிய முன்னுரையில் தான் இந்த யாப்பை உருவாக்கியதில் விட்ட தவறுபற்றி ஒருவகை ஒப்புதல் செய்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஆனால் இந்தத் தவறுகளில் பலியானதும் தொடர்ந்து பாதிக்கப்படுவதும் சோல்பரியுமல்ல பிரித்தானியாவுமல்ல தமிழர்கள்தான்.

அடுத்து 1987 ஆம் ஆண்டு திரு. J.R ஜெயவர்த்தனா இந்தியாவை அழைத்து தமிழர் விரும்பாத ஒப்பந்தத்தைச் செய்தார். ஒருபுறம் அவர் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாக ஓரளவு காட்டிக்கொண்டபோதும் அவரின் ஏனைய அமைச்சர்கள் பலர் ஒப்பந்தத்தை எதிர்ப்பதான இன்னொரு நிலைப்பாட்டை எடுத்தனர். இதில் J.R தான் கையாலாகாமல் நிற்பது போன்ற ஒரு நிலைப்பாட்டை வெளிக்காட்டிக்கொள்ள அவரது பிரதான அமைச்சர்களுள் ஒருவரான திரு. லலித் அத்துலத்முதலி ஒப்பந்தத்தை மீறி இந்தியாவின் விருப்பத்தையும் மீறி விடுதலைப்புலிகளின் முன்னணிப் போராளிகளைக் கைதுசெய்து கொழும்பிற்கு எடுத்துச்செல்ல முற்பட்டபோது ஒப்பந்தம் முறிந்தது வேறுவிடயம். இவ்வாறு இந்தியாவுடன் தாங்களே ஒப்பந்தம் செய்து இறுதியில் தாங்களே ஒப்பந்தத்தையும் மீறி இந்தியாவையும் சிக்கலிற்குள் மாட்டி விட்டார்கள். இறுதியில் தமிழருக்கெதிரான ஒரு பெரும் யுத்தத்தினை இந்தியாவின் மூலம் நடாத்தினர். இதிலும் கொழும்பு ஒரு வெளிநாட்டை தனக்குச் சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டது. கொழும்பின் இக்கையாளல்களில் பாதிப்பிற்குள்ளானது தமிழ்மக்களே.

இப்போது திரு.ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அதிகம் சர்வதேச சமூகத்தை தன்பால் கவர்ந்து தன் அரசியல் இலாபங்களை தேட முயல்கிறது. இதிலும் தமிழர்களே பகடைகளாக வைக்கப்பட்டிருகின்றனர். நிதி பெறச் சமாதானம் என்பதே இப்போதைய அரசாங்கத்தின் கொள்கை. பொதுவாக நிதி வழங்கும் நாடுகள் பிரதமர் திரு. ரணில விக்கிரசிங்காவின் இந்த சமாதான கோசத்தை அதிகம் கவர்ச்சிகரமாக நோக்குகின்றனர். அத்துடன் ரணில் அரசாங்கம் நிதி வழங்கும் நாடுகளிற்கு அதிகம் மனதிற்குகந்த அரசாங்கமுமாகும். இப்பின்னணியில் ரணில் விக்கிரமசிங்கவின் பலம் சர்வதேச அரங்கில் அதிகம் வலுவாக உள்ளது. உள்நாட்டில் நாடாளுமன்றக்களத்தில் இவ்அரசியல் களத்தில் பெரும் பலமற்றிருக்கும் ரணில் இலங்கைக்கு நிதி பெற்றுக்கொடுக்கக்கூடிய ஒரு காமதேனுவாக காட்சியளிப்பதால் உள்டநாட்டரசியலிலும் அவர் தவிர்க்கமுடியாத சக்தியாக உள்ளார்.

அப்படியென்றால் ரணிலின் பலம் வெளிநாட்டு நிதியாலும் உதவி வழங்கும் நாடுகளாலும் ஏனைய முக்கிய உலக நாடுகளாலுமே நிலைநிறுத்தப்படுகிறது. இந்நிலையில் ரணிலை வீழ்த்த வேண்டுமென்றால் அவரை சர்வதேச வலைப்பின்னலிலிருந்து அறுப்பதன் மூலமே வீழ்த்த வேண்டும் என்பதே ஜனாதிபதியாக இருக்கும் திருமதி. சந்திரிகாவினதும் அவரது கட்சியினரதும் கொள்கை.

1950 களில் மத்தியில் ஐ.தே.கவை வீழ்த்துவதற்கு பண்டாரநாயக்கா வகுத்த பிரதான கொள்கை என்னவென்றால் ஐ.தே. கவின் பலம் மேற்குலக ஆதரவென்றும் அந்த ஆதரவினை அறுத்து வீழ்த்தினால் ஐ.தே.க வீழும் என்பதுமே. அவ்வாறு அறுத்ததன் மூலம்தான் அவர் ஐ.தே.கவை வீழ்த்தினார். சு.கவும் இப்போது அப்படித்தான் சிந்திக்கின்றது. அதாவது நிதி வழங்கும் நாடுகளின் ஆதரவையும் மேலும் மேற்குலக நாடுகளின் அனுசரனையையும் அறுப்பதன் மூலம் ரணிலை வீழ்த்தலாம் என்பதே.

பனிப்போர் நிலவிய காலத்தில் ஐ.தே.கவை மேற்படி முறையில் வீழ்த்துவது பண்டாரநாயக்காவிற்கு சாத்தியப்பட்டது. ஆனால் இப்போது பனிப்போர் இல்லாத சூழலில் நிதியுதவி வழங்கும் நாடுகளின் ஆதரவையும் மேற்குலகின் ஆதரவையும் அறுத்துவிடக்கூடியது சாத்தியப்படக்கூடியதல்ல. ஆனால் சமாதானத்தை உடைப்பதன் மூலம் மேற்படி நிதி வழங்கலை வீழ்த்தி ரணிலை வீழ்த்தலாம் என்பதே சு.கவின் கணிப்பீடு. அப்படியென்றால் ரணிலை வீழ்த்துவதற்காக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு மார்க்கத்தை தேடக்கூடிய ஒரேயொரு இடம் இனப்பிரச்சினைதான்.

இதில் இருபெரும் கட்சிகளின் இலக்கு தமது அரசியல் ஆதிக்கத்திற்கான போட்டியை நடாத்துவதற்கான களமாக இனப்பிரச்சினையை பயன்படுத்துகின்றனர் என்பதுதான். இதில் இருகட்சியினரும் சமாதானம் பற்றிப் பேசினாலென்ன சண்டை பற்றிப் பேசினாலென்ன தமது அரசியல் ஆதிக்கத்திற்கான ஒரு மூலவளமாக இனப்பிரச்சினையைக் கையாள்கின்றனர் என்பதுதான், இதில் தமிழரை பலியிடுகின்றனர் என்பதுதான்.

இதில் கவனிக்கவேண்டிய பிரதானவிடயம் என்னவென்றால் இருபெரும் கட்சிகளும் ஏறக்குறைய சமபலம் பெற்றுள்ளனர். ஆதலால் ஒன்றையொன்று சாட்டியும் ஒன்றுக்கெதிராக நடந்தும் அவற்றால் வெளியுலகின் ஆதரவைப் பெறமுடிகிறது என்பதுதான் யதார்த்தமாக உள்ளது. அவர்கள் வெளியுலகின் ஆதரவைப் பெறும் ஒவ்வொரு கட்டத்திலும் எவ்வளவு தூரம் தமிழர்களை பாதிக்கமுடியுமோ அவ்வளவு தூரம் அதைப்பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இவ்வாறான பயன்படுத்தல்களின் போதெல்லாம் அப்பட்டமாக ஏமாற்றுக்கள் என தெரியவரும் போதிலும் கூட அரசியல் யாப்பை சாட்டாகச் சொல்லி தம் ஏமாற்று நாடகத்தை அவர்கள் அரங்கேற்றி விடுகின்றார்கள். அதாவது சோல்பரி யாப்பு தமிழருக்கு பாதமாகி பின்பு தமிழர்கள் அதற்கெதிராக போராடியபோது அந்த யாப்பில் காணப்பட்ட மிகச்சிறிய அனுகூலங்களைக்கூட அடுத்த கட்ட சிங்களத் தலைவர்கள் மீறியதுடன் பின்பு மொத்தத்தில் அந்த யாப்பை விடவும் மேலும் கடினமான இன்னொரு யாப்பை உருவாக்கினார்கள்.

சோல்பரி யாப்பில் இருந்த செனற்சபை சிறுபான்மையினர்களின் நலன் பொருட்டு குறைந்த பட்சம் குரலெழுப்பும் ஒரு அரங்கமாகவாவது இருக்கக்கூடாது என்பதற்காக 1970 ஆம் ஆண்டு அந்த செனற் சபையை ஒழித்துவிட்டனர். அத்துடன் 1972 ஆம் ஆண்டு யாப்பு முற்றிலும் தமிழரின் நலன்களை வலிமையாகப் பாதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழரின் தலைமைகளின் நிராகரிப்புக்கள் சிறிதும் பொருட்படுத்தாது அந்த யாப்பை அமுல்படுத்தினர். அடுத்த 1978 ஆம் ஆண்டு இன்னொரு யாப்பை கொண்டுவந்தனர். அது அதிகம் நெகிழ்ச்சியற்றதாயும் மாற்றங்களுக்கு விட்டுக்கொடாததாயும் தமிழரின் நலன்களுக்கு பாதகமாயும் உருவாக்கப்பட்டது. இதனையும் தமிழர்கள் முழுஅளவில் எதிர்த்தனர். இவ்வாறு தமிழர்களுக்கு எதிராக பெரும் இனப்பெரும்பான்மையைப் பயன்படுத்தி ஒவ்வொரு முறையும் மேலும் மேலும் பாதகமான யாப்புக்களை உருவாக்கினர். அந்த யாப்புகளிற்கும் அவற்றினால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒடுக்குமுறைக்கும் எதிராகவே தமிழ்மக்கள் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

எந்த யாப்புகள் தமழ்மக்களிற்கெதிராக வலுவுடன் வளர்ந்தனவோ இவ் எந்த யாப்புகளை தமிழர்கள் பிழையென்று ஏற்க மறுத்தார்களோ அந்த யாப்புகள் அனைத்தினதும் திரட்சியாக இருப்பதே 1978 ஆம் ஆண்டு யாப்பு. எந்த பிழையான யாப்பிற்கெதிராக தமிழர்கள் மென்வழியில் போராடநேர்ந்ததோ பின்பு ஆயுதம் தாங்கி போராட போராட நேர்ந்ததோ அந்தப் பிழையான யாப்பையே முன்னிறுத்தி யாப்பிற்கும் சட்டத்திற்கும் உட்பட்ட அணுகுமுறையென்று கூறி தமிழ்மக்களை அவற்றிற்கும் கட்டுப்படுமாறும் கோரி அவ் வாறு கட்டுப்படுவதேயே சமாதானமென்று விபரிக்கிறார்கள்.

இப்படியொரு பிழையான விளக்கத்தை அவர்கள் வெளிநாடுகளுக்கு இலகுவாக முன்வைக்கிறார்கள். எந்த யாப்பு தமிழருக்கெதிரானதோ அந்த யாப்பிற்கு உட்பட்ட தமிழர்கள் எவ்வாறு தீர்வுகாண முடியும். அதாவது இங்கு யாப்பைப்பற்றி பேசுவதெல்லாம் சர்வதேச சமூகத்திற்கு கண்ணைத்தூவும் ஒரு நடவடிக்கைதான். இந்த இடத்தில் இருபெரும் அரசியல் கட்சிகளும் தமக்குள் போட்டியிட்டு சாதிப்பது ஒரு விடயத்தைத்தான் . அது தமிழர்களைப் பலியிடுவதுதான். அதாவது ஒருவரையொருவர் சாட்டி இருவரும் சர்வதேச சமூகத்தையும் தமிழரையும் ஏமாற்றி இறுதியில் தமிழரை பலியெடுத்துவிடுகிறார்கள்.

இந்த இருபெரும் கட்சிகளும் ஒருவரையொருவர் சாட்டி இறுதியில் பலியிடுவது தமிழரையே. இத்தகைய போக்கிற்கு சர்வதேச சமூகமும் துணைபோகப் போகிறதா என்பதே கேள்வி. அதாவது சர்வதேச சமூகம் சமாதானத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் அவர்கள் அழுத்தம் கொடுக்கவேண்டியது இருபெரும் சிங்களக்கட்சிகள் மீதேயன்றி தமிழர்பக்கமல்ல. அதாவது நிதி விடயத்திலும் இராணுவ விடயங்களிலும் கொழும்பிற்கு இவ் இருபெரும் கட்சிகளுக்கு உதவ முடியாதென்ற நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் எடுக்குமானால் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் ஒன்றையொன்று சாட்ட முடியாது. இருபெரும் கட்சிகளையும் தமிழ்மக்களின் உரிமைபற்றி ஒரே முடிவிற்கு வரவைக்கக்கூடிய வல்லமை இலங்கையின் இன்றைய நிலையில் சர்வதேச சமூகத்திற்கு உண்டு. ஏனெனில் வெளிநாட்டு நிதி இவ்இராணுவ உதவியின்றி எந்தவொரு கட்சியாலும் இலங்கையை நிருவகிக்கமுடியாது.

நிலைமை இப்படியிருக்கும் போது பிரச்சினை தமிழ்மக்கள் போராட்டத்தை கைவிடுவதென்பதல்ல. பிரச்சினையைத் தீர்த்தால் போராட்டம் தானே தேவையற்றதாகிவிடும். நோயாளிக்கு மருந்து கொடுப்பதற்குப் பதலாக நோயைப்பற்றி வாய்திறவாதே என்ற சொல்லுவதல்ல தீர்வு.

இப்பின்னணியில் சிங்கள ஆட்சியாளர்கள் யாரையும் நம்பமுடியாத நிலையில்தான் தமிழர்கள் உள்ளனர். ஏனெனில் கடந்த கால வரலாற்று அனுபவம் அவ்வாறனதே. ஒரு பத்தி எழுத்தாளர் கூறியதுபோல "நெகிழாத சிங்களயாப்பிற்குள் தமிழரை நெகிழுமாறு கேட்பதல்ல தீர்வு" மொத்தத்தில் சிங்கள ஆட்சியாளர்களின் முழுநீள தந்திரமான வரலாற்றையும் அவர்களின் சமாதானத்தின் மீதான விசுவாசம் இன்மையையும் கருத்திற்கெடுத்துக்கொண்டே சர்வதேச சமூகம் தமிழர்களை நோக்கவேண்டும். மாறாக சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் சிங்கள இனவாதத்தை பலப்படுத்தக்கூடிய வகையில் அமையுமானால் அது யாருக்கும் நன்மை பயக்கப் போவதில்லை.

**மு.திருநாவுக்கரசு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும்

அண்மையில் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய கருத்துரைகளின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் திருமலை கிண்ணியாவிலுள்ள தமது முகாமை அகற்ற மறுத்துவிட்டதாகவும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கோரிக்கையை நிராகரிப்பது ஒரு பாரதூரமான விசயமாகவே கருதப்பட வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.


சிறீலங்கா படையினரால் இப்போர் நிறுத்த காலத்தில் பலவிதமான யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுவருவதனை நாம் அறிவோம். அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளை மீண்டும் போரில் இறங்க வைக்கும் வகையில் விடுதலைப்புலிகளின் மரணத்திற்கு காரணமாக அமைதல், பெண்போராளிகளை மானபங்கப்படுத்தல், போராளிகளை கைதுசெய்தல் போன்ற சினமூட்டும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர். எனினும், தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுமைகாத்து போர்நிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கவும் ஆயுதப்படையினரின் மேல்மட்டத்தினரும் சிறுவர்களைப் படையில் சேர்த்தல், பலவந்தமாக நிதி சேகரித்தல், அரசியல்வாதிகளை கொலைசெய்தல் போன்ற யுத்த நிறுத்த மீறல்களில் விடுதலைப்புலிகள் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டிவருகின்றனர். விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் எவையும் இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு ஆற்றிவரும் சேவை அளப்பெரியதாகும். இக்குழு உரிய நேரத்தில உரிய இடத்திற்கு சென்று உரிய நடவடிக்கையெடுப்பதன் மூலம் எவ்வளவோ இரத்தக்களரிகளை தடுத்து நிறுத்தியிருக்கிறது. அதுமட்டுமின்றி இந்தப்போர் காரணமாக தினமும் ஏற்பட்டுவந்த உயிரிழப்புகளும் பொருளழிவுகள் கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கை மூலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் ஒப்பற்ற சேவைகளுக்கு நன்றியுடையவர்களாக இருப்பர்.

இவ்வேளையில், அவர்களின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்கவேண்டியவர்களாயும் உள்ளனர். தமிழ் மக்களினதும் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் பெருமதிப்பிற்கும், அன்பிற்குமுரிய போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் சில சந்தர்ப்பங்களில் இராணுவ கண்ணோட்டத்துடன் பிரச்சினைகளை அணுகுவது போன்ற ஒரு தோற்றப்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# - சமாதான முயற்சிகளில் சமபலம் பேணலும்

இடையிடையே எழுகின்றது என்பதனை நாம் மறுக்க முடியாது. இராணுவ மேலான்மையின் பக்கம் நின்று ஒருபிரச்சினையை அணுகுவதன் மூலம் ஒரு நியாயபூர்வ முடிவுக்கு வருவதென்பது மிகவும் கடினமான காரியமாகும்.

திருமலை- கிண்ணியாவிலுள்ள விடுதலைப்புலிகள் முகாம் அமைந்துள்ள பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசம் என்பது நீண்ட காலத்திற்கு முன்பே வரைபடம் மூலம் சகல தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்நாட்களிலிருந்து இன்றுவரை அதற்கான ஆட்சேபம் எதுவும் எழுப்பப்படவில்லை. ஆனால், இன்று அது இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசம் என்றும் இங்குள்ள விடுதலைப்புலிகளின் முகாம் அகற்றப்படவேண்டும் என்றும் சிறிலங்கா இராணுவத்தினர் கூறிவருகின்றனர். இராணுவத்தினரின் இக்கூற்றுக்கு விடுதலைப்புலிகள் ஏற்கனவே மறுப்புத் தெரிவித்துவிட்டனர். இந்நிலையில்த்தான் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் இம்முகாமை அகற்றும்படி விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

எங்கென்றாலும் சரி சமாதான முயற்சிகள் இருதரப்பினருக்குமிடையே நிகழும் போது இருதரப்பினரிடமும் சமபலம் பேணப்படல் வேண்டும். சமபலம் பேணப்படாவிடத்தில் கூடியபலம் கொண்டவர்களின் பக்கம் தீர்வு சாயவோ அல்லது சமதான முயற்சிகள் குழம்பவோ கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஒரு சமபலத்தின் அடிப்படையிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தன. ஆனால், போர்நிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்பு ஆயுதப்படையினரின் ஒவ்வொரு நடவடிக்கையும் தங்கள் மேலாதிக்கத்தை நிலை நாட்டும் முகமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. போர்நிறுத்த காலங்களுக்கு முற்பட்ட காலங்களில் இவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் எவ்வாறு நடந்து கொண்டனரோ அதேபாணியிலான சம்பவங்களை தற்சமயம் அடிக்கடி மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவங்களுக்கு அவர்கள் கூறும் நிரூபிக்கப்படாத நிரூபிக்கப்பட முடியாத காரணங்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் ஏற்றுக்கொள்கின்றனர் போலவே தோன்றுகின்றது.

குறிப்பாக சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் கப்பல் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் உண்மையை கண்டறிய முடியாது கடற்படையினர் பல திசைதிருப்பல்களை மேற்கொண்டனர். கடற்படையினர் திட்டமிட்டு பல விசயங்களை மறைத்தனர். அதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முக்கியமானது முதலில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினருக்கு காட்டப்பட்ட இடம் சிறீலங்காவின் கடல் எல்லைக்குள் உட்பட்ட பிரதேசமாகும். ஆனால், அங்கு எதுவித தடயமும் கிடைக்கவில்லை. ஆனால், விடுதலைப்புலிகள் துல்லியமாக சர்வதேசக் கடற்பரப்பில் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட இடத்தை குறிப்பிட்ட பின்பு கடல் கொந்தழிப்பு என்ற காரணம் சொல்லி அவ்விடத்திற்கு கடற்படையினர் கண்காணிப்புக்குழுவினரை கூட்டிச்செல்ல மறுத்துவிட்டனர்.

இதிலிருந்து கடற்படையினர் எவ்வாறு உண்மைகளை மறைத்தனர் என்பது தெரியவருகின்றது. ஆனால், போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் அறிக்கையோ கடற்படையினரை நேரடியாக குற்றஞ்சுமத்த தவறிவிட்டது.

இப்படியான விசயங்களில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு இராணுவத்தினரின் மேலாதிக்க கண்ணோட்டத்திற்குள் இழுபடாது இருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும்.

இன்று ஆயுதப்படையினர் பல புதிய இராணுவ முகாம்களை அமைத்து வருகின்றனர். பல புதிய காவலரண்களை நிறுவி வருகின்றனர். இராணுவ சூனியப்பிரதேசத்திற்குள் காவலரண்களை முன்நகர்த்தி வருவதனை விடுதலைப்புலிகளின் வடபகுதி கட்டளைத்தளபதி கேணல். தீபன் அவர்கள் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலக்சன் அவர்களுக்கு நேரிலேயே காண்பித்திருந்தார்.

இதுமட்டுமன்றி, வெளிநாடுகளிலிருந்து யுத்தக்கப்பல்கள் முதல் பெருமளவு ஆயுதத் தளபாடங்கள் வரை அரசபடையினருக்கென கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுப்பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இராணுவத்தினருக்கென ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் சிறீலங்கா அரச படைகள் வெகுதீவிரமாக நவீனமயப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டு வருகின்றது. இதேவேளையில், விடுதலைப் புலிகளின் முகாம்கள் அகற்றப்பட வேண்டும் அல்லது பின்நகர்த்தப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றது.

கடற்புலிகளின் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாக இடையூறுகள் மேற்கொள்ளப்படுகின்றன. விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்துகள் தொடர்பாக கடற்படையினரால் அடாவடித்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது, போர்நிறுத்த காலத்தை பாவித்து விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரச படைகளைப்பலப்படுத்திக் கொண்டு விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் நோக்கமானது ஒரு சுத்த இராணுவ மேலாதிக்கத்தை நிலை நிறுத்தும் நோக்கிலிருந்து எழும் ஒரு கண்ணோட்டமாகும். இக்கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே இராணுவத்தினரால் கிண்ணியாவிலுள்ள விடுதலைப்புலிகளின் முகாம் அகற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது.

இன்னொரு விதத்தில் சொல்லப் போனால் இன்றைய இராணுவ சமநிலை அழிக்கப்பட்டு அரச படைகளின் கை மேலோங்க வேண்டுமென்பதே ஆகும். சமாதான முயற்சிகள் இடம்பெறும் போது ஒரு தரப்பு மேலாதிக்க நிலையை எட்டுமானால் தீர்வை அந்த தரப்பு தனக்கு சாதகமான வழியிலேயே இழுகக் முயலும். இந்நிலையில் சமாதான முயற்சிகளோ குழம்பும் நிலை கூட தோன்றலாம்.

எனவே, கிண்ணியா முகாம் அகற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை வெளிப்படையில் இருதரப்பினருக்குமிடையே எழக்கூடிய மோதல்களைத் தவிர்க்கும் ஒரு நடவடிக்கை போன்று தோன்றினாலும் அடிப்படையில் இராணுவ மேலாதிக்க கண்ணோட்டத்தின் பின்னால் இழுபடும் நிலைமையை உருவாக்கும் என்பதே உண்மையாகும்.

**நா.யோகேந்திரநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மணலாற்றில் மீள் குடியேற்றம் நடக்குமா?

**தி. தவபாலன்**

தமிழர் தாயகப் பகுதியில் நிரந்தரமாக தமிழ்மக்கள் மீளக்குடியமர முடியாத ஒருபகுதியுள்ளது. அது எதுவென்றால் மணலாறு ஆகும். 1989ல் வெலிஓயா என சிறப்புப் பிரதேசமாக சிறீலங்கா அரசு பிரகடனம் செய்து அதற்கான பிரதேசத்தை முல்லைத்தீவு தண்ணீரூற்றுச் சந்திவரை வரைபு செய்தது. ஒதியமலை, கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருணாட்டுக்கேணி உட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் 1984ல் இரவோடு இரவாக 24மணி நேரத்தில் சிறீலங்கா அரசபடைகளால் விரட்டப்பட்டு அங்கு சிங்களக் குடியேற்றம் அமைக்கப்பட்டது. 1991ல், சிறீலங்கா படையினர் மேற்கொண்ட மின்னல் நடவடிக்கையில் ஆக்கிரமித்து முன்னரணை அமைத்த பகுதிகளில் முன்னரண்களுடன் கூட சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. கஜபாபுர, ரணபாபுர, ஜானகபுர, கல்யாணபுர உள்ளிட்ட சிங்களக்குடியேற்றங்கள் அங்கு இருந்தன. இவற்றில் கஜபாபுர, ரணபாபுர தவிர்ந்த சிங்களக்குடியேற்றங்களில் சிங்களக்குடியேற்றவாசிகள் வாழுகின்றனர்.

தமிழ் மக்களுக்கு ஆவணங்கள் வழியாக சொந்தமான நிலங்கள் அவை. அத்துடன் தமிழர்களின் பண்ணைகளும் அங்கிருந்தன.
சிங்களக்குடியேற்றங்களுக்காக அங்கிருந்து விரட்டப்பட் தமிழ் மக்கள் இன்னும் இடம்பெயர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்கள் தங்கள் சொந்த இடங்களுகக்கு மீளச் செல்ல முடியாதவர்களாக உள்ளனர்.

அண்மையில் இக்கிராம மக்கள் தங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்த போது அவர்களின் விபரங்களைத்தர முல்லைத்தீவு அரச அதிபரிடம் சிறீலங்கா அரசு கேட்டது. விபரங்கள் அரச அதிபரினால் அனுப்பட்டன. ஆனால், இதுவரையில் அவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. தமிழர் தாயகம் இணைந்ததாக இருக்கக் கூடாது என்பதற்காக வடக்கு கிழக்கு என அதனை தனியாக வைத்திருக்கும் நோக்கில் மணலாறு சிங்களக்குடியேற்றம் இராணுவத்துணையோடு அமைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்ததுக்குரிய அப்பகுதி அனுராதபுரம் - பதவியா உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சிங்களக்குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களுடைய தாய் நிலப்பகுதிக்கு செல்லமுடியாது தமிழ்மக்கள் இடம்பெயர் வாழ்வில் அவலப்படுகின்றனர்.

சிறீலங்கா இராணுவத்தினரின் முன்னரண்களால் வளைக்கபபட்டுள்ள மணலாறுக்கு தமிழ் மக்கள் மீளச்சென்று குடியமர அரசு அனுமதிக்குமா? தமிழ் மக்களின் நிலங்கள் சிங்கள குடியேற்றவாசிகளின் ஆதிக்கத்திற்குள் இருக்கையில் அங்கு தமிழ் மக்கள் எப்படி மீளக்குடியமர்வது என்ற பிரச்சினை இருக்கிறது. அல்லது சிங்களக் குடியேற்றவாசிகளிடையே வாழவேண்டிய நிலையிருக்கிறது.

புரிந்துணர்வு உடன்பாட்டில் இந்த மக்கள்மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது இடமளிக்கப்படிருக்கிறதா என்பதும் கேள்விக்குரிய விடயமே.

மணலாறை விட்டு இடம்பெயர்ந்த ஒரு தலைமுறை தம் தாய்நிலம் அறியாது இன்னும் இரவல் நிலங்களில் வாழும் அவலம் நிலவுகின்றது.

எப்படி, எப்போது தமது இடம்பெயர்வு அவலம் தீரும் என்று புரியாது அம்மக்கள் தவிக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுதாத உன் கவிதை

நாதினி

"எழுதாத என் கவியை
எழுதுங்களேன்"
எனும் உன் கவிதை
எழுதப்பட்டு விட்டது.

உப்பு வெளியில்
உருகிய உங்கள்
உடல்கள் மீது
எமது வீரர்கள்
எழுதாத உன் கவியை
எழுதி விட்டார்கள்.

துரிகையால் வரையப்பட்ட
ஓவியங்களாய் நாம்
உங்களைப் பார்க்கவில்லை.
காவலரண்களின் முன்னே
வித்துடல்களாய் நீங்கள்...
எம்மை ஏறி மிதித்து – அவர்
ஏளனம் செய்த மண்ணில்

இப்போது
எமது தேசியக்கொடி பறந்து,
எழுதாத உன் கவிதை
எழுதப்பட்டு விட்டது.

அன்று அவர்
விதையான வீரர்மேல்
ஷெல் மழை பொழிந்த போதும்
உறுதியை நாம் இழக்கவில்லை
உரமேற்றிக் கொண்டோம்
எழுதாத உன் கவியை எழுதுவதற்காகவே.

நீல வரிப்புலிகள் தரையிறக்க,
கறுப்பு வரிப்புலிகள் ஆட்டி தகர்க்க,
பச்சை வரிப்புலிகள் இடம்பிடிக்க,
புலிக் கொடி ஏற்றப்பட்ட ஆனையிறவு
இன்று
சிங்காரமாய் சிலிர்க்கிறது.

உன் துப்பாக்கி முனையை விட
உனது பேனா கூர்மையானதால்,
எழுதாது போன உன் கவியை
எழுதுவதற்காக
இவர் உயிரைக் கோலாக்கி
உதிரத்தை மையாக்கினார்.
எழுதாத உன் கவியை எழுதிவிட்டு
எம் செல்வக் குழந்தைகள்
உன்னிடமே வந்து விட்டனர்.

அவர் எழுதிய கவிதையைப் பார்.
ஏராளம் ஏராளமாய்
உனது எண்ணங்கள்
எழுதப்படப்போகும்
உன் கவிதைத் தொடர்ச்சி
இனி இடைவிடாது எழுதப்படும்.
எங்கள் கைக்கு வந்த
உந்தன் பேனாவுக்கு
இனி ஓய்வே இல்லை

*1991 இல் ஆ. க. வெ. சமரின்போது 'எழுதாத என் கவிதை...' என்ற தன் இறுதிக் கவிதையை கப்டன் வானதி எழுதிக் கொண்டிருந்த போது அவர் அருகில் இருந்த போராளி நாதினி. 2000 ஆண்டில் ஆனையிறவுத் தளம் மீட்கப்பட்ட சில நிமிடங்களில் எழுதிய கவிதை. இதுவே இவரின் முதல் கவிதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வையகமே காத்திரு!

எங்களின் ஆற்றலும்
ஆளுமையின் வீச்சும் – பொங்கும்
வீரியப் பரப்பளவும்
அண்ணன் தந்தவை.
தலைவன் என்ற பெரு நெருப்பின்
சிறு பொறிகள் நாங்கள்.
பொறியின் செயல் வேகம்
அதனூடே ஊற்றாய்
பாய்கின்ற ஈகம்
கணிக்க அலகில்லை.
திசையறிந்து பொறிபறந்து
ஸிந்த பகைப் பரப்போ
எண்ணுக் கணக்கில்லை.
சிறு பொறியின் வீச்செல்லை புரியவில்லை
என்றுலகின் வாய்ச்சொல்லை
காதுணரும் பொழுதினிலே
அண்ணனவன் மூச்செல்லை
துளியேனும் புலப்படுமா?
பேச்சறியாச் செயல் வடிவின்
ஊற்றறியப் பார்த்திருக்கும்
வையகமே! கொஞ்சம் காத்திரு!
எங்கள் வல்லமையின் விழியசைவும்– அவர்
கரங்களின் மொழி விரியும் – தினம்
உள்ளத்தே ஊற்றெடுக்கும்
சிந்தனையின் அகலிப்பும்
பிரித்தறிந்து பொருள் புரிய
முடியாத புதிர்கள்.
தான் விரும்பி ஒரு பொழுதில்
அவர் வாயுரைக்கும் வரை
வையகமே காத்திரு.

தமிழவள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்





வடிவங்கள் மாறும்
முகில்களின் யாத்திரைகளோ,
காற்றுரசி உயரும்
அலைகளின் வேகங்களோ,
பரவையில் மூசி எறிக்கும்
ஆதவனின் தாக்கங்களையோ,
அவர்கள் கணக்கெடுத்துக் கொள்வதில்லை.
"அவர்கள் நோக்கு ஒன்றுதான்"

குளியத்துள் உறைந்து
எல்லைகளற்று விரிந்து
சமுத்திரங்களோடு, கண்டங்களையும்
இணைக்கும் இந்து மகா கடலின்
ஓர் மூலையில்
நம்பிக்கை பெருகிய
ஒளி முகங்கள்
அவர்களின் வரவுகளிற்காய்
காத்திருக்கும்.

இலைகளிற்கு கலங்களே
ஒளி முகங்கள்
குறிப் பெடுத்துக் கொள்ளும்
வினாடிகளில்...
அவர்கள் அதிர்வுகளோடு
வெளிச்சமாகி இருப்பார்கள்.

மௌனமாக ஒளி முகங்கள்.
தமக்குள் குமுறிக் கொள்ளும்.
என்றுமே துலங்க முடியா
கரிய உருக்களாக
ஆழியின் ஆழத்துள் உறைந்து போன
நிஜங்களை சுமந்து
நாளும் அலைகள் ஆர்த்தெழும்....

# ஆர்த்தெழும்

**அலையிசை**



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் அகத்தின் பாடலிது





சூடு கட்டி
குஞ்சு பொரிக்கும்
கனவுகளிடை மலர்ந்த
உயிர் காணாமல் போன
தூக்கங்களோடு
உருவினை நினைத்திருக்கும்
என் அகத்தின் பாடலிது.

சன்னதங்கள் உருப்பெற்று
சத்தங்கள் ஓயாது எதிரொலிக்கும்
ஓர் பொழுதில்
உயிர் மறைந்து போனது.

அந்த நாளில் புதினத்தை
அறிமுகப்படுத்திய தாள்களில் - எல்லாம்
அவர்களைப் பற்றிய
தரவுகளே அதிகமாகின.

அகவைகள் மிகையொலி வேகத்தில்
மூப்பெய்த
அவர்கள் சிறகு விரித்திருந்தார்கள்.
தமக்கான நோக்குகளில்
ஒளி பொருந்தியிருந்தார்கள்.

உயிரின் செயல்கள்
அவர்கள் மனங்களிடை
பத்திரப்படுத்தப்பட்டுள்ளது.

மௌனமாக என்
மன இடுக்குகளில்
பதியப்பட்டுள்ளன உயிரின்
உணர்வுகளோடு ஒன்றிப்போக
வாழ்வு நகர்கிறது.

இமைப்பொழுதிலும்
ரணமாகும் உயிரின்
நிதர்சனத்தை
என் அகம் பாடலாக- என்றுமே
இசைத்துக் கொள்ளும்.

**அலையிசை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இத்திக்கண்டல் தயார்



மணலாறு விஜயன்




## உண்மைப்பதிவு 2

அடம்பனூடாக உயிலங்குளம் நோக்கிச் செல்லும் பிரதான வீதி. திருத்தப்பணியைக் கண்டு நீண்டகாலமாதலால் ஓணானின் முதுகு போலக்கிடந்தது. அடம்பனிலிருந்து இரண்டு மைல்கள் நடந்தால் சிறிய வீதியொன்று அதிலிருந்து பிரிந்து செல்லும். அது நேராக இத்திக்கண்டலுக்குள் நுழையும்.

இரண்டு குளம், குளத்தின் அணைக்கட்டின் வழியே செல்லும் வீதியும் கிராமத்தின் முகப்பில் அமைந்த அடைக்கலமாதா ஆலயம், பச்சை வயல் வெளிகளும் குளத்து நீரையும் நெற்பயிரையும் தொட்டு வரும் மென் காத்தும் இத்திக்கண்டல் கிராமத்துக்குள் வருவோரை வரவேற்றுநிற்கும்.

மறுபுறம் கறுக்காய்குளத்தினூடாக வந்தால் கிராமத்தின் நுழைவாயிலில் இந்து ஆலயம் வருவோரை வரவேற்கும். இத்திக்கண்டல் விடுதலையை நேசிப்பவர்களுக்கு அடைக்கலம் தருமென்பதை அக்கிராமத்திற்குள் நுழைந்த பின்பே அறிந்து கொண்டோம். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெளிகளும், வெளிகளில் இடையிடையே சிறிது மந்துக்காடுகளும் போராளிகளை மறைத்துக் காத்த வரலாறு சுவையானது.

ஐந்து பேர் கொண்ட அணியாக மன்னர் குளம் நுழைகின்றோம். காடுதான் எங்களின் கவசம். காடென்றால் பரப்புக்கடந்தானிலிருந்து மடுக்கரை வரையிலான காடுதான் பெருங்காடு பரப்புக்கடந்தான் கிராமம் அடிக்கடி இராணுவத்தினரால் சுற்றி வளைப்புக்குட்படும்.

காட்டுக்குள் எமது பாசறையை அமைத்திருந்தாலும் இராணுவம் அதற்குள் நுழைந்து எம்மைத் தாக்கிவிடுமோ என்ற ஐயம் நாளுக்கு நாள் அதிகரித்தது. பலபோராளிகளை விடுதலைக்குத் தந்த இத்திக்கண்டல் கிராமம். எமக்குப் பாதுகாப்புத் தருமென்ற நம்பிக்கையோடு கிராமத்துக்குள் அடியெடுத்து வைத்தோம்.

குழுமாட்டுக் கும்பல் போல் மாற்று இயக்கங்கள் மலிந்து கிடந்த காலம். ஆனால் இத்திக்கண்டல் கிராமம் மட்டும் எமக்குப் பின்னால் தம்மை அர்ப்பணித்து நின்றது. இத்தனைக்கும் இத்திக்கண்டல் வயல் வெளிகளின் மத்தியில் அமைந்த ஒரு கிராமம். இராணுவம் சுற்றி வளைத்தால் எந்த இடத்தாலும் தப்பிவிட முடியாது. பாதுகாப்பான பெரும் காட்டைவிட்டு இக்கிராமத்தை பாதுகாப்பானது என நினைத்தோம் என்றால் இக்கிராமத்தின் விடுதலைப் பற்றும் புரியும்.

நம்பிக்கையடிகளைப் பதிக்கின்றோம். குளக்கட்டு அடைக்கலமாதாகோயில்.... சவரிப்பிள்ளையின் வீட்டு முற்றத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துளிர்த்து நிற்கும் வேப்பமரம், நாலைந்து தென்னைமரம். கிணற்றடியைச் சுற்றியுள்ள வாழைத் தோப்பு. குளிர்ச்சிக்குக் குறைவற்ற வீடு. சவரிப்பிள்ளைக்கு இரண்டு பெண்களும், எட்டு ஆண்களுமாக பத்துப் பிள்ளைகள். அவரது மனைவி அருள்மணி இத்தனை பேரையும் எப்படி ஆளாக்கினாள்



என்பது விந்தையானதுதான். இவர்களின் இரண்டாவது மகன் யோகன். வாகானா உடல் கட்டு, பார்பவரைக் கவரும் சிரிப்பு. ஆனாலும் ஒருகால் அவனுக்கு இயல்பாக நடக்க உதவுவதில்லை. மன்னாரில் எமது விடுதலைப் பணிக்குத் துணையாய் நின்றவர்களில் முதல் மனிதன் யோகன்தான். யோகனின் பணியை 1984 இன் ஆரம்பப் பகுதியில்தான் பெறத் தொடங்கினோம்.

நண்பனாய் வந்து சென்ற ராஜேசின் தொடர்புதான் இவனுக்கு முதல் கிடைத்தது. ஆனால் சில மாதங்களுக்குள்ளேயே இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பூசாவுக்கு அனுப்பப்பட்டான். பத்துமாதங்கள் சிறைவாழ்க்கை முடித்து கிராமத்துக்குத் திரும்பினான். இக்கால இடைவெளியில் பாதுகாப்புக் கருதி யோகனின் வீட்டுக்குச் செல்வதைத் தவிர்த்திருந்தோம். யோகனின் விடுதலைக்குப்பின் அவ்வீடு எம்மை வரவேற்குமா? இந்த ஐயப்பாட்டுடன் மீண்டும் வீட்டுக்குச் சென்றோம்.

பசுமாடுகள் வீட்டுக் கடப்புக்குள் அசைபோட்டுக்கொண்டு கிடந்தன. அவைகூட எம்மை நேசித்தன. என்றும் போல யோகனின் வீடு எங்களை மகிழ்வோட வரவேற்றுது. அருள்மணியம்மா மீண்டும் சமையலை பதினைந்து பேருக்காய் மாற்றிக் கொண்டாள். எங்கள் ஐவரையும் தம்பிள்ளைகளாகவே கருதினாள்.

பகல் முழுவதும் அங்கேயே எமது பொழுது மறைந்தாலும் இரவு வேளைகளில் பாதுகாப்புக் கருதி பரப்புக்கட்ந்தானுக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டோம். மன்னாரில் பொருளாதாரப் பண்ணையின் முழுப்பொறுப்பையும் யோகனிடமே ஒப்படைத்தோம்.

உழவியந்திரத்தை பயன்படுத்தும் திறமை இவனிடம் மிகுதியாக இருந்தது. லெப்.கேணல் விக்ரர் யோகனைத் தலைவர் என்றே அழைப்பார். இதனால் நாமும் தலைவர் என்று அழைப்பதையே வழக்கமாக்கிக் கொண்டோம்.

யோகனின் உழவியந்திரம் நாள் முழுவதும் எங்களுக்காகவே இயங்கியது. பண்ணை வயல் முழுவதையும் அவனே உழுவான் ஒருநாள்கூட கணக்குப் பார்த்தது கிடையாது. அதற்கு மேலாக எமது உழவியந்திரம் வேலையின்றி நின்றால் அதனை எடுத்துக்கொண்டு இயக்கத்துக்கு வருமானம் சேர்க்கும் பணியில் இறங்கிவிடுவான்.

கீரிசுட்டான் பாலம்பிட்டி போன்ற கிராமங்களுக்கு வீதியமைக்க வேண்டியிருந்தது. "தலைவர் ரோட் ஒன்று போடோனும் என்ன மாதிரி?" என்று கேட்டதுதான் தாமதம் "எல்லாம் சரி இந்த நிமிடமே தொடங்கலாம் என்று சொன்னவன் பணியை உடனே தொடங்கிவிட்டான். கிராமத்திலுள்ள ஏனைய உழவியந்திரங்களையும் ஒன்று சேர்த்து எதிர்பார்த்ததைவிட விரைவாகவே வீதியைப் போட்டு முடித்தான். பகலில் இத்திக்கண்டலில் நின்றாலும் இரவு பரப்புக்கடந்தான் காட்டுக்கு வந்துவிடுவோம்.

அப்பொழுதெல்லாம் யோகனும் சில இளைஞர்களை அழைத்துக்கொண்டு காட்டுக்கு வந்துவிடுவான். எங்களை பாதுகாக்க வேண்டுமென்பதில் அதிக கவனம் கொண்டிருந்தான். காட்டிற்கு வந்ததும் முகாமுக்குள் எங்களோடு படுத்திருந்து காவல் புரியமாட்டான். தான் கூட்டிக்கொண்டு வந்தவர்களுடன் முன்னுக்குச் சென்று படுத்துக்கொள்வான். இராணுவத்தினர் வந்தால் தங்களைத் தாண்டியே எம்மிடம் செல்ல வேண்டிவரும். அதற்கிடையில் நாம் தப்பி விடலாம் என்பது அவனது கருத்து. இரவிலே சில நாட்கள் உழவியந்திரங்களைக் கொண்டு வேலைக்குச் சென்றாலும் இராணுவச் சுற்றிவளைப்பு எங்கேனும் நடந்தால் அதுபற்றி எங்களுக்குத் தகவல் அனுப்பிவிடுவான். சில சமயங்கள் கூடுதலான போராளிகள் வந்துவிட்டால் "தலைவர் மேலதிகமாய் கொஞ்சப் பார்சல் வேண்டும்" எனச் சொன்னால் போதும் நம்பியிருக்கலாம் குறிப்பிட்ட நேரத்துக்குள் குறிப்பிட்ட சாப்பாட்டுடன் வந்து சேருவான்.

இராணுவத்தைத் தாக்குவதற்குத் திட்டமிட்டபோது யோகனையும் வைத்தே திட்டமிடுவோம். தாக்குமிடம், தூரம், தாக்கும் முறை எல்லாமே அவனுக்குத் தெரிந்திருப்பதே அதற்குக் காரணமாய் இருந்தது. தாக்குதலுக்குரிய இடத்தில் சிலதினங்கள் காத்திருக்க வேண்டி ஏற்படின் சாப்பாடு கொண்டுவருவது, தகவல் கொண்டு வருவது எனும் பெரும்பணி அவனிடமே. எல்லாவற்றுக்கும் மேலாக தாக்குதல் திட்டமிட்டபடி நடந்தால் மறுநிமிடமே எங்களை ஏற்றிச் செல்ல வாகனம் வந்து நிற்கும். இரகசியம் காப்பதில் எங்களையும் மீறி நின்றான்.

1986ம் ஆண்டு ஐப்பசித் திங்கள், 13ம் நாள் ஈழவிடுதலைப்போரில் சாதனை படைத்த நாள். முதன்முதல் இராணுவத்தினர் உயிருடன் பிடிபட்டநாள் அடம்பனில் இராணுவத்தினருடன் கடும் சண்டை நடந்துகொண்டிருந்தது. லெப்.கேணல் விக்ரரின் குரல் வோக்கிடோக்கியில் கம்பீரமாக ஒலித்துக்கொண்டிருந்தது. யோகனின் உழவியந்திரம் உறுமிக்கொண்டே பின்னால் நின்றது. தள்ளாடி இராணுவமுகாமிலிருந்து எறிகணைகள் வந்து விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சை நடாத்திக்கொண்டிருந்தன. இவற்றுக்கு நடுவே ஒரு போராளியின் துணிவுக்கு நிகராய்.... வெறுங்கையுடன் எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற தியாக உணர்வுடன் நின்று கொண்டிருந்தான். இராணுவத்தின் சடலங்கள் கைப்பற்றப்பட்டன. உயிருடன் பலர் பிடிக்கப்பட்டனர். ஆயுதங்கள் அள்ளப்பட்டன. நாங்கள் சிலர் எவருக்கும் தெரியாமல் விக்ரரின் உடலை ஒரு வானில் கொண்டுவந்து ஏற்றுகின்றோம். போராளிகள் எல்லோரும் விக்ரர் களத்தில் நிற்பதாகவே கருதி உக்கிரமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். யோகன் விக்ரரின் உடல் ஏற்றப்படுவதை கண்டுவிட்டான். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முகத்தில் எந்த உணர்வையும் காட்டிக்கொள்ளவில்லை. வார்த்தைகளை அடக்கி மௌனித்துநின்றான். ஏனைய போராளிகளுக்கு இது தெரிந்து அவர்கள் சண்டையில் தளர்ந்து விடக்கூடாதென்பதில் நிதானமாக இருந்தான். உழவியந்திரம் மின்னலாய்ப் பறந்தது. விமானத்திலிருந்து கலிபர் தாக்குதல் நடத்தும் ஹெலிகொப்டர் அவன் கண்ணுக்கு தெரியவில்லை. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் எமது போராளிகளின் உயிர்தான். இதுபோல் எத்தனை சம்பவங்கள்.

1987ம் ஆண்டு, தைத்திங்கள், 16ம் நாள் மன்னார் - மதவாச்சி வீதியில் 9ம் கட்டைக்கும் 10ம் கட்டைக்கும் இடையே தாக்குதலுக்காக நிலையெடுத்துக் கிடந்தோம். தாக்குதல் களமும், இடமும் யோகனுக்குத்தெரியும். அவனது உழவியந்திரம் தயாராகவே நின்றது. தென்னாபிரிக்காவில் தயாரிக்கப்பட்ட பவள் கவச வாகனத்தில் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். காடுகளற்ற வெளியான பிரதேசம். தாக்குவதும் தப்பிச் செல்வதும் விரைவாக நடக்க வேண்டும் தாக்குதல் ஆரம்பமாகியது. பவள் கண்ணி வெடியில் சிக்கி தூக்கி வீசப்படுகின்றது. சில நிமிடச் சண்டைதான். இராணுவத்தினர் இறந்தவர்களையும் இழுத்துக்கொண்டு தப்பி ஓடினர். யோகன் உழவியந்திரத்துடன் களத்தில் நின்றான். தான் கூட்டி வந்த இளைஞர் அணியுடன் 'பவள்' வாகனத்தை உழவுயந்திரத்தில் ஏற்றினான். பவளை ஏற்றுவதென்பது முடியாத காரியம் ஆனால் அதனை நிறைவேற்றிக் காட்டினான் யோகன்.

உழவுவியந்திரம் பறந்தது. மறைவுக்கு ஒரு மரங்கூட இல்லாத 25 மைல் வெளிப்பிரதேசத்தில் தன்னந்தனியே உழவியந்திரத்தைச் செலுத்திச் சென்றான். அந்த அபாரத் துணிவு இன்னும் நெஞ்சில் நிற்கிறது.

1987ம் ஆண்டு, சித்திரைத் திங்கள், 5ம் நாள் மாவீரன் அர்ச்சுனாவின் 31ம் நாள் நினைவை அடம்பன் மக்கள் விழாவாகக் கொண்டாடினர். அன்றிரவு இராணுவம் அடம்பனைச் சுற்றிவளைத்திருந்தது. ஆனால், மக்கள் எவரும் இதை அறியவில்லை. நாம் கூட அன்றிரவு அங்கிருந்துதான் வெளியேறி இத்திக் கண்டலுக்குச் சென்றோம்.

அதிகாலையில் சரமாரியான துப்பாக்கிச் சூடு. அடம்பன் கிராமம் துடித்தது. நாற்பத்தாறு பொதுமக்களைச் சுட்டுப் பொசுக்கிவிட்டு அங்கிருந்து வெளியேறியது சிங்களப்படை. சம்பவம் நடந்த இடத்துக்குச் செல்ல எல்லோரும் அஞ்சினர். ஆனால் யோகன் தன் உழவுயந்திரத்துடன் மக்களின் உடலை உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான். மக்களையும் மண்ணையும் நேசித்த யோகனின் பணியினை எப்படி மறக்கமுடியும்? அதே ஆண்டு அதே மாதம் "ஒப்பரேசன் ஜாங்செப்" என்ற பெயரில் இராணுவம் அடம்பனைச் சுற்றி வளைத்தது இந்த அணியை தாக்க பதுங்கிக் கிடந்த எம்மை தள்ளாடியிலிருந்து பின்புறமாக இராணுவத்தினர் வந்து தாக்கிவிடக் கூடாதென்று கருதி வெளியானபாதையொன்றில் காவல் நின்றான் யோகன். எதிர்பார்த்ததுபோல் இராணுவம் அப்பாதையால் வந்தது. யோகன் கைக்குண்டை வெடிக்க வைத்து தகவல் தெரிவித்தான். எங்களைக் காப்பதில் இதுபோன்ற பல துணிகர செயல்களை அவன் செய்தான். சுற்றிவளைப்பு நடவடிக்கை கிராமங் கிராமமாக நடைபெற்றுக் கொண்டு வந்ததால் இத்திக் கண்டலிலிருந்து நாம் வெளியேறி பரப்புக்கடந்தான் காட்டினை அடைந்தோம். இந்தநேரம் பாழடைந்த வீடொன்றில் நாம் கைவிட்டு வந்த நான்கு வெடிமருந்துப் பொதிகளையும் ஒரு மோட்டார் சைக்கிளையும் இராணுவத்தின் கண்களில் படாமல் எடுத்துக்கொண்டு வந்தான். இதற்கு மேலாய் நாம் தங்கியிருந்த இடங்களில் தடையங்கள் ஏதுமின்றி அனைத்தையும் எரித்துவிட்டான். இத்திக்கண்டல் கிராமமும் இவ்இராணுவ நடவடிக்கைக்குட்பட்டது. காட்டிக்கொடுக்க இக்கிராமத்தில் யாரும் இருக்காததால் கிராமமும், யோகன் வீடும் தப்பியது.

இந்திய இராணுவம் எம்மண்ணில் காலடி எடுத்து வைத்த காலம் இக்காலம். தமிழீழம் பெரும் துயரங்களை சுமந்த காலம் 1987ம் ஆண்டு, புரட்டாதித் திங்கள், 19ம் நாள் திலீபன் உண்ணாவிரதமிருந்த ஐந்து நாட்கள் நகர்ந்திருந்தது. தமிழீழமெங்கும் மக்கள் போராட்டம். மன்னாரில் அடம்பன் சிங்களப்படை முகாமுக்கு முன்னே வீதிமறியல் போராட்டத்துக்கு மக்கள் திரண்டனர். "திலீபன் கோரிக்கையை நிறைவேற்று, திலீபனின் உயிரைக் காப்பாற்று" என மக்கள் முழக்கமிட்டனர். சிங்களப் படையை முகாமுக்கு வெளியே வரவிடுவதில்லையென்பது மக்களின் முடிவு. ஆனால் சிங்களப்படை முகாமின் தளபதி சில சிப்பாய்களையும் ஏற்றிய ஜீப் வண்டியுடன் மக்களை நோக்கி வந்தான். அப்போது யோகனின் குரல் ஓங்கி ஒலித்தது. "அசையாதீங்கடா, நமக்கு மேலே அவன் விரும்பினா ஜீப்பை விடட்டும். எங்களைத்தான் அவன் கொல்லலாம், எங்கள் போராட்டத்தினை அவன் ஒடுக்க முடியாது. திலீபன் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென அகிம்சை போராட்டம்தான் நடத்திறம் ஒருவரும் அசையாதீங்க".

ஜீப் வண்டி ஓரங்குலம் கூட நகரவில்லை. சில நிமிடங்களில் தள்ளாடி முகாமிலிருந்து சிங்களப்படையின் பவள் கவச வண்டியொன்று மக்கள் முன் வந்து நின்றது. இந்தியப்படையின் பொய்முகத்தைப் புரியாத மக்கள் அவர்களின் துணை தங்கள் பக்கம்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதை நினைத்து ஆவேசத்தைக் காட்ட முனைந்தனர்.

"திலீபன் கோரிக்கையை நிறைற்றேு, திலீபன் உயிரைக் காப்பாற்று" கோசங்கள் முழங்கின. "நாங்கள் யாரென்று இவர்களுக்குக் காட்ட வேண்டும், அசையாதீங்கடா விழுந்து படுங்கடா" யோகன் மக்களை நிலைப்படுத்திக் கொண்டிருந்தான். நிலைமை மோசமானது. சிங்களப் படையதிகாரி திணறினான். வேறு வழியின்றி இந்தியப்படைத் தலைமையகத்துடன் தொடர்புகொண்டால் சில நிமிடங்கள்தான். இந்தியப் படைகளின் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி டிலோணின் ஜீப் வண்டியும், இந்தியச் சிப்பாய்களை ஏற்றிய றக் வண்டியும் வந்துநின்றது. ஜீப்புக்குள் இருந்தவாறே டிலோன் யோகனை உற்றுநோக்கினான். பின்னர் கீழே இறங்கிவந்து எல்லோரும் கலைந்து செல்லுங்கள் விரைவில், விரைவில் என ஆங்கிலத்தில் கத்தினான். மற்ற சிப்பாய்கள் துப்பாக்கியுடன் மக்கள் முன் பாய்ந்து வந்தனர். அங்கு ஒரு பதட்டம் ஏற்படத் தொடங்கியது.

"திலீபனின் கோரிக்கையை நிறைவேற்று, திலீபனின் உயிரைக் காப்பாற்று" மக்கள் உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் மல்க உரத்துக் கத்தினர்.

டிலோனின் முகம் சிவப்பேறியது. "போறீங்களா இல்லையா" டிலோன் மீண்டும் கத்தினான். சிப்பாய்கள் சுடுகுழலில் குண்டை ஏற்றினர். யோகன் இந்த உலகை மறந்தான். றக்வண்டியில் முன்னால் பாய்ந்து ஏறினான். சேட்டின் வட்டின்களைக் கழற்றிவிட்டு சுடுங்கோ நாங்கள் சாகிறதுக்கு அஞ்சேல்லை என்று உறுமினான். சில நிமிடம் டிலோன் யோகனையே உற்று நோக்கினான். அதன் பின் ஜீப்பும் றக் வண்டியும் மன்னாரை நோக்கி விரைந்தன. சிங்களப் படையின் பவுஞம் திரும்பிற்று. அங்கு நின்ற சிங்களப் பொலீசார் மீது மக்கள் பாய்ந்தனர். பொலீசார் முகாமை நோக்கி ஓட்டம் பிடித்தனர். 1987ம் ஆண்டு புரட்டாதி, 22ம் நாள் வீட்டு முற்றத்தில் லெப்.கேணல் ராதா, லெப். கேணல் விக்ரர், மேஜர்.அசோக், லெப்.கோபால் ஆகியோரின் வீரக்கதைகளைக் கூறிக் கொண்டிருந்தான் யோகன். நாளை பட்டித் தோட்டத்தில் தொடங்கி மன்னார் தீவுக்குள் நுழையப்போகும் ஊர்வலம் பற்றிய சிந்தனைகளும் அவனின் மனதில் ஓங்கி நின்றது. இதனால் முகில்முறிச்சான் குளத்திலிருந்த தனது நண்பனின் வீட்டுக்கு எழுந்து நடந்தான். சின்னவன் அவனது நெருங்கிய நண்பன். நாளை நடைபெறப்போகும் போராட்டம் பற்றி அவனுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினான். "ஆமிக்காரனுக்கு அடம்பனைப் பற்றி அண்டைக்கு நல்லாய் விளங்கியிருக்கும் என்றான் சின்னவன்"

"நடக்கப்போற போராட்டம் அடம்பனைவிட சூடாய் இருக்கும் பார்" என்ற யோகன். அடம்பனில துவக்கு நீட்டினவன் பட்டித் தோட்டத்தில சுட்டுப் போடுவான் என்று சொல்லு" எனச் சின்னவன் கூறினான். "ஏன்ரா சின்னவா சுட்டு நான் விழுந்து செத்திட்டா என்னைத் தூக்கமாட்டியா?........

இருவரும் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். 23ம் திகதி அதிகாலை தனது உழவியந்திரத்தின் முன்னால் புலிக்கொடியை கட்டிக் கொண்டிருந்தான் யோகன்.

"என்ன தலைவர் என்ன மாதிரி" எனக் கேட்டோம் "இத்திக்கண்டல் தயார்" என்று பதில் வந்தது. மாணவர்கள் மக்கள் மன்னாரில் என்றும் காணா மக்கள் வெள்ளம் கரைபுரண்டது "திலீபனின் கோரிக்கையை நிறைவேற்று, திலீபனின் உயிரைக் காப்பாற்று" கோசம் முழங்கியது.

ஊர்வலம் தொடங்கியது. காலை ஒன்பது மணி. விடுதலை உணர்வின் பேரலைகள் பட்டித் தோட்ட இந்தியப் படைமுகாமை மோதி ஆர்ப்பரித்தது. துப்பாக்கி ஏந்திய சிப்பாய்கள் நிரைகட்டி நின்றனர். "எல்லோரும் உட்காருங்கோ ஒருவரும் ஓடக்கூடாது என மக்களை வழிநடத்தினான் யோகன்"

மக்கள் முழக்கம் வானைப் பிழந்தது. பொறுப்பதிகாரி டிலோன் முகாமுக்கு வெளியே வந்தான்.

முகத்தில் சினம் பொங்குவது தெரிந்தது. சுற்றிலும் ஒருதடவை நோட்டம் விட்டான். புலிக் கொடிகள் ஆங்காங்கு பறந்தன. "திலீபனின் கோரிக்கையை நிறைவேற்று. திலீபனின் உயிரைக் காப்பாற்று" யோகன் ஆவேசத்துடன் கோசமிட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென பெண்களுக்குள் நுழைந்த சிப்பாய்கள் தம் சேட்டைகளைத் தொடங்கினர். மாணவர்கள் பலர் துப்பாக்கி பிடியினால் தாக்கப்பட்டு விழுந்தனர். "எதுக்காக அடிக்கிறியள் நாங்கள் ஓடுவமென்றா நினைக்கிறயள்? தமிழீழத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? போகப் போகத் தெரியப் போறியள்" என உணர்ச்சியின் எல்லைக்குச் சென்றது யோகனின் நிலை.

திடீரென தடியடியொன்று யோகன்மேல் விழுந்தது. மீண்டும் மக்கள் மத்தியில் அமளிதுமளி.

டிலோன் அருகிலிருந்த சிப்பாயிடம் துப்பாக்கியை வாங்கினான். யோகனைக் குறிவைத்து அதுநீண்டது. டுமீல்.........

யோகனின் அருகில் நின்ற அவனது தம்பி யோகண்ணா என அலறிய ஒலி மக்கள் வெள்ளத்தை உலுப்பியது. சின்னவன் ஓடி வந்தான்.

ரெயில் தண்டவாளத்தில் வீழ்ந்துகிடந்த நண்பனைத் தூக்கினான். யோகனைக் காப்பாற்றி விடலாமென்ற ஆசையில் அவனைச் சுமந்த வாகனம் புயலாய்ப் பறந்தது.

ஆனால்.................

யோகனின் தலை அவனது தம்பியின் மடியில் சரிந்தது. நெஞ்சை அடைத்து வெடித்த கண்ணீரைத் துடைக்க மறந்து நின்றான் சின்னவன்.

திலீபனுக்காய், இம் மண்ணுக்காய், எம் வீரர்களுக்காய் உயிர்கொடுத்த உத்தமன் யோகன். அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் இன்னும் ஈழத்தில் வாழ்கின்றனர். அவனின் தியாக வரலாறு சொல்ல இத்திக்கண்டல் கிராமம் காத்திருக்கின்றது................

மன்னார் மண்ணில்
ஒரு தியாகத்தின் கதையை சொல்லி முடித்த அந்த மூத்த போராளியிடமிருந்து கண்கலங்க நெஞ்சு கனக்க விடைபெற்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எனக்குள் இருக்கும் "நான்"

அது
அடிக்கடி என்னைப் புடம் போடும்
என்னை நெருங்கும்
எதேச்சாதிகாரங்களைப் பொசுக்கும்
என் கண்ணீரைத் துடைக்கும்
தீய எண்ணங்கள்
தோன்றிடில் தீய்க்கும்
என் ஆத்மாவை
அசௌகரியப் படுத்துபவற்றை அழிக்கும்
என் உயிரை உருக்கும்
உணர்வைப் பெருக்கும்
என் அகலங்களை
ஆழப்படுத்தும்
எப்போதும் என்னோடு இருக்கும் நான்
என் சுவாசங்களைச்
சுத்தப்படுத்தும்.

## உன்னுடைய உறவு

கண்சிமிட்டும் தாரகைகள்
கண்களை திறக்காத நாய்க்குட்டி.
கலப்படமற்ற சுத்தமான காற்று
குவிந்த நிலவு
கூட்டித் தெளித்த முற்றம்
வீட்டுத் திண்ணையிலே
வாழ்க்கையை இரை மீட்கும் ஆச்சி
சிணுங்கிச் சிணுங்கிச்
செல்லமாய் அழுகின்ற சிறுமி.
தென்னம் வட்டுக்குள்
தேகம் மறைத்து விட்டு
குரலாலே மட்டும் என்னைக்
கூவி அழைக்கின்ற புள்ளிக்குயில்
அந்தரங்கமாய்
என்னோடு மட்டும் பேசிக் கொள்கின்ற
கவிதைகள்.
நண்பனைப் போல்
நல்லாசானைப் போல்
நல்லது எடுத்துரைக்கும் புத்தகங்கள்.

## வானமும் தீச்சுவாலைகளும்

அழுத்தித்துடைத்த முகமாய்
அந்திவானம்.
தலைச்சுமையோடும் மனச்சுமையோடும்
நாட்கூலிகள்.
அதில் சிலருக்கு
வயிற்றுச் சுமையும்.
பாதங்களில் சேற்றுப் பொருக்கு...
மனதுகளில்
சோற்றுப் பருக்கைகளுக்கான ஏக்கம்.
வியர்வைத்துளிகள்
வயலில் வடிந்து போக
உப்பு மட்டும்
உடலில் ஒட்டிக்கிடக்கிறது
கரங்களில்
அருவி வெட்டும் கத்திகளின் பளபளப்பு
ஆனால்
வாழ்க்கை முழுவதும் இருள்.
வயிற்றுக் குகைகளுக்குள்
தீச் சுவாலைகள்
இவை
வான் நோக்கி ஒருநாள்
விழுதெறியும்
அப்போது இந்த
அந்திவாணம் போலவே
கீழ்வானமும் சிவக்கும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் கவிதை

ஆதிலட்சுமி சிவகுமார் அவர்களின்
என் கவிதை எனும் கவிதைத்தொகுப்பில்
இருந்து சில கவிதைகள்



## அடக்கப்பட்டவளின் உரிமைக்குரல்

அலையடிக்காத சமுத்திரம் போன்று நான்
அமைதியாயிருந்தேன்
என முகத்துக்கு மேலே
வானம் விரிந்து கிடந்தது.
நிலவு சிரித்தது;
நட்சத்திரங்கள் கண் சிமிட்டின
என் வாசலில் வந்து நின்று
வசந்தம் சாமரை வீசிற்று.
எனக்குள்ளே
உல்லாசங்கள் உலாவந்தன
திரள் திரளாய் மிதக்கின்ற முகில்களாய்
என கனவுகளும் மிதந்தன.
பூக்கள் புன்னகை சிந்தின
புழுதி குடித்த என்
பொன்னுடலம் புளுகிற்று
நேற்று நண்பகற்பொழுதில்
என் மீது தெறித்து விழுந்ததொரு
உதிரத்துளி
பச்சைமண்ணின் மீதுபட்டுத்
தெறித்து விழுந்த அந்தத்துளியின்
உஷ்ணம் என்னை உசுப்பிற்று
என்னுள்ளே ஆயிரமாய்
அதிர்வலைகள் பரவ...
என் நரம்பு நாண்களில்
புதியதோர் உணர்ச்சி...
இப்போதெல்லாம்....
என்னுள்ளிருந்து ஒரு குரல் ஓங்கி
ஒலித்துக் கொண்டிருக்கிறது.

## என் இறைமைகளுக்காய் ஊழியென எழுவேன்

நிலவு
நிர்வாணமாக நீந்திக்கொண்டிருக்கிறது.
நிழல் பூசி
தம்மை உருமறைப்புச் செய்தபடி
நீள்தவம் செய்கின்றன கற்பக தருக்கள்
கனத்த மௌனத்தைச் சுமந்து
காற்று விரைகிறது
உள்ளே...
நினைவுகளின் சுழற்சியில்
எதிரொலிக்கிறது என் முகம்
தாவிக்குதிக்கின்ற அலைகளிலே
மூழ்கிப் போகின்ற ஒளிக்கீற்றாய்
கரைந்து போகிறதென் வாழ்வியக்கம்.
காலம் என் தலையில் தினமும்
துயரமாய் விடிகிறது
நினைவுகளை எரிக்கமுடியாதபடி
ஏக்கம் நெருங்க
நொருங்கிச் சிதறுகிறது என்மனது
கழற்றிவைத்த மாலையில் இருந்து
கழன்று விழுந்த பூவாக
கால்களிலே நசிகிறது என் உரிமம்.
எதிர்காலமும் நிதர்சனமற்று கழிகிறது
இழுத்துப் பிடித்திருக்கும் என்
உயிருக்கும் உத்தரவாதமற்று
இருளில் தேய்கிறதென்யுகங்கள்
இது இன்னமும் எத்தனை நாட்களுக்கு?
ஏறிமிதிக்கும் கால்களை
உதறிநான் எழுவேன்
வல்லவன் தான் வாழ்வானெனில்
நானும் வல்லமை பெறுவேன்
என்னவர்களை அடைவேன் என்
இறைமைகளுக்காய் ஊழியென எழுவேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூத்த தளபதி லெப். சீலனின் இருபதாம் ஆண்டு நினைவெழுச்சி நாள்



விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும், முதல் தாக்குதல் பிரிவுத் தளபதியுமான மாவீரர் லெப்டினன்ட் சீலன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவெழுச்சி நாள் நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், கலந்து கொண்டார். வன்னியில், ஒழுங்கு செய்யப்பட்ட நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்ட தேசியத் தலைவர் அவர்கள், லெப்டினன்ட் சீலனின் பெரியளவிலான உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்து, ஈகச்சுடரேற்றி தனது நினைவுவணக்கத்தைச் செலுத்தினார். மாவீரர் லெப்டினன்ட் சீலனின் தாயாரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net












www.tamilarangam.net



யோகவதி



இப்போதெல்லாம் மகனின் அந்தப் பிடிவாதச் சிணுங்கல் கூடித்தான் போய் விட்டது. அப்பா இல்லாத பிள்ளை, அப்பா இல்லாத பிள்ளை என்று இல்லையில்லை அப்பா உயிரோடு இருக்கும் போது இப்படி நினைக்கக் கூடாது அவள். அப்பாவின் அரவணைப்பின்றி வளரும் குழந்தை என்று அவள் மகனின் விருப்பிற்கேற்ப இசைவாகி, ஆயிரம் செல்லங் கொடுத்து வளர்த்திருந்தாள். பிள்ளை கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுகப்பாள். சொன்னதெல்லாம் செய்தாள்.

"அம்மா வா போவம்... வாம்மா..."

குழந்தை சிணுங்கி அழைத்தபோதெல்லாம் அவனின் கைப்பிடிக்குள் விரல் கொடுத்து நடந்தாள்.... மகனோடு சேர்ந்து மண் விளையாடினாள்.....

"அம்மா... ம்... தூக்கு.... தூக்கு அம்மா..." நள்ளிரவில் விழித்துக்கொண்டு தன்னைத் தூக்கும்படி பிடிவாதம் பிடித்துச் சிணுங்கும் மகனைத் தூக்கிக் கொண்டு நடப்பாள்..... தோளில் போட்டு முதுகுதட்டி இசைப்பாள். கைவலிக்க, வலிக்கத் தோள் கனக்கக் கனக்க பிள்ளை உறங்கும் வரை முதுகில் மெல்ல மெல்லத் தட்டி நின்றும் நடந்தும் விழித்திருந்து உறங்க வைப்பாள்....

"அம்மா! சோச்சி வேனா..." மகனின் விசுக்கல்.

"கொஞ்சம் சாப்பிடுங்கோ செல்லம்"

"ம்... வேனா.... வேனா.... இல்ல.... வேனா...."

"ஆ.... சரி.... பிள்ளைக்கு வேணாம். பிக்கா சாப்பிடுவம் என்னய்யா..."

"எனக்கு பிக்கா வேனா.... பிக்கா.... வேனா..."

"அப்ப பிள்ளைக்கு என்ன வேணும்"

"கடைக்கு.... அம்மா கடைக்கு... போவம் கடைக்கு...."

பிள்ளை இப்படி அடம் பிடிக்கும் பொழுதுகளைச் சமாளிப்பதுதான் மிகவும் கடினமாய்ப் போகும் அந்த இளம் விதவை இல்லையில்லை அந்த இளம் தாய்க்கு.

பிள்ளைக்கு உணவூட்டி, நித்திரையாக்கிவிட்டுத் தையலைத் தொடங்குவோமே என்ற திட்டம், கண்களில் கண்ணீர் வரும்படி பிள்ளை கதறுவான்...

"போவம்... அம்மா.... போவம்...."

இனிக் கடைக்கு அவ்வளவு தூரம் போவதென்றால்.... இப்படியே வீட்டில் நின்ற ஆடையோடே, பிள்ளை சீச்சா அடித்த ஆடையோடு, சமையலின் போது வியர்வையால், கரி புகையால் அழுக்கான ஆடையோடு வெளியே செல்லலாமா?

"இஞ்சேய்யா.. என்ர தம்பிக் குட்டியல்லோ.. இஞ்சே! அம்மான்ர சட்டையெல்லாம் ஊ.... த்தையாக் கிடக்கய்யா... அம்மா.... பிள்ளைக்கு நாளைக்கு...."

"இல்ல.... இல்ல... இல்ல.... இப்பப் போவம்.."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படி எத்தனை நாட்களின் மாலைப் பொழுதுகளில் பிடிவாதமாயே கதறியழும் மகனின் அழுகையை நிறுத்துவதற்காய், வேறு உடை மாற்றி, நீண்ட தூரம் நடந்து பிள்ளை கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்திருந்தாள்.

"சீ இவர் இருந்திருந்தால்" என்கிற நினைப்பு பிள்ளையின் பொருட்டு அடிக்கடி வரும். ஆனாலும் முன்பு கோபம், பிடிவாதம், ஏனோதானோ போக்கெல்லாம் இப்போது அவளிடம் இல்லை. சுமதி நிறையவே மாறிவிட்டாள். பிள்ளையின் பிடிவாதக் குணங்களைப் பார்த்து அயலவர்களும், உறவினர்களும் "அப்பரப்போல, அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு" என்று சொல்லும் போதெல்லாம் இவளுக்குள் வேதனையாகத்தான் இருக்கும்.

பிடிவாதக்காரக் கணவனோடு இருக்க வேண்டாம் பிரிந்து வாழ்ந்தாலும் பரவாயில்லை என்று ஆயிரம் குடும்பத் தகராறுகளின் பின் பிரிந்து விட்டு, இன்று அதே, இல்லை இதைவிடப் பிடிவாதமுள்ள மகனைச் சமாதானப்படுத்தச் சுமதி எவ்வளவெல்லாம் மாறிவிட்டாள். சுமதி இப்போதும் சின்னப்பெண் இல்லையே.... குடும்பம், அனுசரிப்பு, விட்டுக் கொடுப்பு, பொறுமை, நிதானம் என்று எதையுமே அறியாத இளவயதில் மனைவிப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டதன் அவசரக்குடுக்கைத் தனத்தை எண்ணித் தன்னையே நொந்து கொள்வாள் சுமதி.

நானும் அன்பிற்கும் பாசத்திற்குமாக என்னை எவ்வளவோ விட்டுக் கொடுக்க இப்போதெல்லாம் பழகித்தானே கொண்டேன். ம்... பிள்ளை தன் பிடிவாதத்தால் என்னை எப்படியெல்லாம் மாற்றிவிட்டான். அவரின் பிடிவாதம் மட்டும் ஏன் என்னை மாற்றவில்லை...? இப்போது கூட அவர் என்னுடன் சேரக்கூடாது என்று பிடிவாதமாகத்தான் இருக்கிறாரா? உரிமையுடன் என்னோடு கதைப்பவர்கள் எல்லாம் சொல்கின்றார்கள். "உனக்குப் பிடிவாதம் சுமதி. என்னதான் இருந்தாலும் அவன் ஆம்பிள. நீதான் விட்டுக் கொடுத்து வலியப் போய்க் கதைக்க வேணும்"

இந்த வியாக்கியானங்கள் சுமதிக்குள் வெப்பியாரத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை. அதென்ன ஆம்பிளை, பொம்பிளை... அன்பு காட்டுறதுக்கும், விட்டுக் கொடுக்கிறதுக்கும் கணவன் மனைவிக்கையும் ஆம்பிள பொம்பிள பாக்க வேணுமே....

ஓ! பாக்க வேணும். அப்படிப் பாக்காததாலதான் நீ இப்ப, இப்படி இருக்கிறாய். அவளின் மனச்சாட்சி அவளைச் சுட்டதாய் உணர்வு.... என்ன! என்னிலதான் பிழையே? நான்தான் அவரோட வாழத்தெரியாமல் இருந்திட்டேனோ.... அதாலதான் என்ன விட்டிட்டுப் போனவரோ... இப்ப நான்தான் போய்க் கேக்க வேணுமோ.... ஏன் அவர்தானே எனக்குப் பின்னாலையும் முன்னாலையுமா திரிஞ்சு திரிஞ்சு என்னை விருப்பம் கேட்டவர். அதுக்குப் பிறகு நான் என்ன அவருக்காக விட்டுக்கொடுத்துதானே ஓமெண்டன்...

ஊரில எல்லாம் பிள்ளையின்ர அப்பா எங்கயெண்டு பிள்ளையிட்ட கேக்கிற ஒவ்வொரு கணமும் மனதுக்குள் எழுகின்ற தவிப்பைவிட, இப்போது வேதனை மிகுந்தது. பாவம்தான். ஒரு இளவயது மனிதனை, எதிர்காலம் பற்றிய ஆயிரம் கனவுகளோடு தன்னை விரும்பிக் கைப்பிடித்தவனை அதுவும் ஒரு குழந்தைக்குப் பெற்றவர்கள் என்றான பின் இருவரும் பிரிந்தது தவறுதான். எப்படியும் சேர்ந்துவிடவே வேண்டும். சமூகத்தின், பாவமென்ற, கெட்ட, பரிதாபமான, எரிச்சலான, வீணான பார்வைகளில் இருந்தெல்லாம் நானும் தப்பலாம். அவரும் தப்பலாம். இதே தவிப்பு அவருக்கும் இருக்குமே.... சுமதியின் தவிப்புக் கூடுதலானது.

சுமார் இரண்டு வருடங்கள் கடந்து சேரவேண்டும் என்ற தவிப்பு அவளுள் ஏற்பட்டிருக்கின்றது. ஏன்? அந்த ஏன் என்ற கேள்விக்குப் பதிலாக 'பிள்ளைக்காக' எனும் பதில் முதலில் வருகின்றது. உண்மையும் அதுதான். இன்னும் பலநூறு பதில்கள் அதன் பின் நிற்கின்றன.

"என்னைக் காதலிச்சுத் திருமணம் செய்தவர். என் குறை, நிறைகளோடு என்னை ஏற்றுக் கொள்ளவில்லையே...! ஏன் அவருக்கு மட்டும்தான் பிடிவாதம் பிடிக்கத் தெரியுமா? நானும் பிடிவாதக்காரிதான்? என்று அவரின் காதுபடக் கூச்சலிட்ட உணர்வெல்லாம் இப்போது சுமதியிடம் இல்லை. அவர் வீட்டை விட்டுப் புறப்பட்ட போது "போனால் போகட்டுமே எனக்கு அம்மா இருக்கிறா, நான் அப்பாம்மாவோட இருப்பன். என்ர பிள்ளைய வளர்ப்பன்" என்று விட்டேத்தித்தனமாகக் கூறியதை, தனக்குள் கர்வமாய் நினைத்ததை இப்போது நினைக்கையில் அவசரப்பட்டு விட்டேனோ என்ற நினைப்பு வருகிறது....

அவர் மட்டுமென்ன என் மனம் நோக நடந்து கொள்ளவில்லையா என்ற காரணத்தைப் பரிவின் சமாதானப்படுத்தலாய் நினைக்க இப்போது சுமதியால் முடியவில்லை.

பெற்றோரால் கூடத் தரமுடியாத அன்பை, பாசத்தை, அரவணைப்பை கணவனால் தர இயலும் என்ற உண்மை சுமதிக்கு நன்கு புரிந்தது. மகனும் கொஞ்ச நாட்களாய் கேட்கத் தொடங்கி விட்டான். "அம்மா! அப்பா எங்கே?" மகனிடமிருந்து மெல்ல மெல்ல எழுந்த கேள்வி பிடிவாதமாக மாறி "அப்பாட்டப் போப்போறன் அம்மா! அப்பாட்டப் போப்போறனம்மா...." என்ற அழுகையாய், நச்சரிப்பாய், தொந்தரவாய் மாறிவிட்டது. நினைக்கும் போதெல்லாம் "அப்பாட்டப் போறன்" என்ற அழுகைதான்.

யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் . புறப்பட்டுப் போகவும் தயக்கமாகப் பயமாக இருந்தது சுமதிக்கு. ஒன்றுவிட்ட சகோதரியுடன், மகனையும் தூக்கிக்கொண்டு கணவன் நிற்குமிடம் தேடிப் புறப்பட்டு விட்டாள் சுமதி. மனதுள் ஒரே படபடப்பு. "அவர் என்ன சொல்லப் போகிறார்?"

"இவ்வளவு நாளும் பிரிந்திருந்தது போதும் சுமதி. நீ என்னட்ட தம்பியோட வந்திடு.... நாங்களினிச் சந்தோசமாக இருப்பம் சுமதி..."

"சுமதி, வந்திட்டாய். என்னைத்தேடி வந்திட்டாய்... மகனத்தாவன். நீ இனிப் போகவேணாம் சுமதி. இப்பவே இப்படியே என்னோட நில்லு. நான் உன்னைப் பார்ப்பன். நில்லு என்ன"

"சுமதி! என்னண்டடி இரண்டு வருசமா என்னைத்தேடி வராமல் உன்னால இருக்க முடிஞ்சுது...." இப்பவெண்டாலும் என்னைத்தேடி என்னட்டவர மனம் வந்ததே... எனக்குத் தெரியும் சுமதி. நீ வருவாயெண்டு எனக்குத் தெரியுமடி. காதலிச்சு கலியாணம் செய்ததில அர்த்தமில்லாமலா போகும்..."

இப்படி ஏதாவது அவன் கூறவேண்டும். "நீங்கள் தான் இனி என் எல்லாமும்" என்று அவனிடம் கதற வேண்டும். அவனை விட்டு இனியும் பிரியக் கூடாது என்றுதான் நினைத்தபடி வந்தாள் சுமதி. அப்பாவைப் பார்க்கும் ஆவலோடு தாயின் தோளில் சாய்ந்திருந்தான் மகன். ஆனால் கண்டவுடனேயே அவன் கோபமாய்க் கேட்டான். குரலில் கோபம் கொப்பளித்தது. கண்கள் சிவந்தன....

"எங்க வந்தனி" இதுதான் நீ என்னைத் தேடி வாற முதலும் கடைசியுமா இருக்கவேணும். இனிமேல் நீ என்னைத் தேடி வரவே கூடாது. ஆனால் என்ர மகனை மட்டும் என்ர கண்ணுக்கு முன்னால வைச்சிரு... அவன நான் பார்க்கோணும்.... எனக்கு முன்னால மகனை வச்சிரு. நான் பார்க்கணும் அவன.... போ.... வெளிய போ.... போ வெளிய..."

ஆங்காரமாய் கைகாட்டிக் கலைத்தான் அவன். சுமதி தன் கௌரவம், விருப்பம் எல்லாமும் பொடிபட அப்படியே நின்றாள். மகனோ அவளின் தோள்களை இறுகக் கட்டிக் கொண்டு அப்பாவையே பார்த்தான்.

"வாங்கோ தம்பி.... அப்பாட்ட வாங்கோ..." நீட்டிய அவனின் கைகளில் மகன் தாவிப் போகாமல் தாயின் கழுத்தில் முகம் மறைத்தான்.

"அம்மா போவம் அம்மா! வீட்ட போவம்..."

"அப்பாட்ட ஒருக்காப் போயிற்று வாங்கோ..."

"இல்லம்மா போவம்"

"ஒருக்கா போயிற்று வாங்களன் தம்பி..."

"இல்ல இல்ல போவம்"

"இல்லம்மா இப்பப் போவம்"


"அப்பாக்கு போயிற்று வாறன் சொல்லுங்கோ..."

மகன் தகப்பன் முகம் பார்க்காமலே டாட்டா சொன்னான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நேசராச்சியம்

மலைமகள்

நட்பு
நாலு நாளோ
நாலு யுகமோ
பேசிப் பழகிப் புரிந்து கொண்டால்தான்
வருமென்று
இப்போது நான் நினைக்கவில்லை.
ஏனென்றால்
யார் சோலிக்கும் போகாமல்
தானும் தன் பாடுமாக
ஆற்றலுடன் இயங்கும்
யாரைப் பார்த்தாலும்
எனக்கு நேசம் வருகிறதே.
எதையும்
கதைக்கலாம் போல் இருக்கிறதே
அவர்களுக்காக
ஏழுமலை கடந்து
ஏழு கடல் நீந்தவும்
மனம் துணிகிறது.
ஒரு முறை கூட
ஒரு சொல்தானும் பேசியதில்லையே
பின் எப்படி இப்படி?

நிதானம், நேரான பார்வை,
அலட்டிக் கொள்ளாத தன்மை,
இயல்பான பேச்சு,
பெரிய மனது,
மனிதம்
இவைதான்
என்னை அவர்களிடம்
ஈர்த்திருக்க வேண்டும்.
இத்தனையும் கொண்ட மனிதர்கள்
என்னிலிருந்து
எத்தனை ஒளியாண்டுகள் தொலைவிலிருந்தாலும்
உடனேயே
என் நேச சாம்ராஜயத்துக்கு
வருகை தரக் கடவது
உங்களுக்காக
என் சிம்மாசனத்தின்
சரியாசநனங்கள் காத்திருக்கின்றன.



# அம்மா

மலைமகள்

நான்
எரிமலையிலிருந்துதான்
தோன்றியிருக்கவேண்டும்.
ஆம். அப்படித்தான் இருக்கும்.
இல்லையேல்,
எனக்குள்ளிருக்கும் நெருப்பு
எங்கிருந்து வந்தது?
அம்மாவிடமிருந்தா?
இருக்காது – அவள்
ஊருக்கெல்லாம் சோறு போட்டு
தன் பசியாறுபவள்
என் சிரிப்புக்காகவே
உயிர் வாழ்பவள்.
அவளிடம் நான்
எரி நெருப்பை
ஒரு போதும் கண்டதில்லை.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓ! ஒரு வேளை
அவள் ஒடுக்கப்பட்ட ஒவ்வொருமுறையும்
அடக்கி வைத்த ஆத்திரம்தான்
என்னிலிருந்து
பெரும் பொறியாய் எழுகிறதோ?
அவளது உரிமைகள் மறுக்கப்பட்டதால்தான்
நான் சிலிர்த்தெழுந்தேனோ?
அவள் குரல்வளை நசுக்கப்பட்டதால்தான்
என் குரல் ஓங்கி ஒலிக்கின்றதோ?

யார் காலில் மிதிபடவும்
தயாரில்லாமல்,
எனை எவரும் வேரோடு பிடுங்கியெறிய
அநுமதியாமலும்
நான் செய்யும் போரின் வேர்
உன்னுடையது தானேயம்மா.
உரிமைப் போரில்
உன் குஞ்சு
தோற்றுப் போகாதிருக்க,
எந்த வேளையிலும்
என்னை இழக்காமலிருக்க
என்னை
ஆசிர்வதி அம்மா.



# அவள் ஒன்றுக்கும் அசையாள்

மலைமகள்

**வா**னமே கிழிந்தது போல்
வாரி வாரி மழை பெய்தது.
காவலரணையும் மேவி வெள்ளம்
கால் பரப்பி நடந்தது.
கடும் பயிற்சி எடுப்பதால்
தேய்ந்து நைந்து கிழிந்த
கால் சட்டை ஒன்றை
தைத்தவாறிருந்தாள் ஒருத்தி.
ஊசியில் நூல் கோர்த்தவாறு
அவள் மெல்லச் சொன்னாள்.
‘வானமும் பீத்தலாய்ப் போச்சுது.
இது முடிய அதையும் நான்
பொத்தித் தைக்கப் போறன்’

நிலமெல்லாம் ஊறி தடியெல்லாம் பாறி
பொறிந்து விழப்போன
கொட்டிலுக்கு முட்டுக் கொடுத்த
அடுத்தவள் முணுமுணுத்தாள்,
‘சனமெல்லாம் பாவம்
நனையப் போகுதுகள்’

சாக்குத் தொப்பியில் மழைநீர் ஊறி
தலையெல்லாம் கனக்க,
கருவியோடு தானும் நனைந்தே
குளிரில் பல் கிடு கிடுக்க,
மரத்தின் மறைவிலிருந்து
பகைத்தளம் நோக்கித் தன்
விழி விரித்த வீரி ஒருத்தி
சற்றும் அசைந்தாளில்லை.
மழை வெள்ளமென்ன,
பகை வெள்ளம் வந்தாலும்
அவள் அசையாள்! வெல்வாள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சமாதான காலத்தில் சிறீலங்காக் கடற்படையினரின் யுத்த நிறுத்த மீறலால் சர்வதேசக் கடற்பரப்பில் 14.06.2003 அன்று விடுதலைப் புலிகளின் வணிகக்கப்பல் தாக்கி அழிக்கப்பட்டபோது வீரச்சாவைத் தழுவிக்கொண்டோரை நினைவிற்கொள்வோம்.**



லெப். கேணல் செந்தமிழ்/ வீரமணி
(சின்னராசா சிவரூபன் - வெற்றிலைக்கேணி, வடமராட்சி கிழக்கு))



லெப். கேணல் அன்புக்குமரன்
(வல்லிபுரம் சிவகுமார் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)



லெப். கேணல் கஜேந்திரன்
(நல்லையா கிருஷ்ணன் கபில்தினேஷ் - கிளிநொச்சி)



மேஜர் வீரநாதன்
(தியாகராசா தயாநிதி - முல்லை வீதி, மாங்குளம்)



மேஜர் கன்னிநாடான்
(பொன்னம்பலம் கிருபாகரன் - பேராளை, பளை)



மேஜர் மணியரசன்
(முத்துலிங்கம் லவக்குமார் - வின்சன் வீதி, நெடுங்கேணி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவில் கொள்வோம்



லெப். கேணல் கதிர்
(செல்வரெட்ணம் சசிந்திரன் -மீசாலை தெற்கு, சாவகச்சேரி)



மேஜர் நிர்மலன்
(ரணராஜா ரகுநாத் - நெடியகாடு தெற்கு, வல்வெட்டித்துறை)



மேஜர் நிமால் / நிமல்
(தங்கராசா செல்வகுமார் - பரந்தன்)



மேஜர் வள்ளுவன்
(துரை சைலேஸ்வரன்- மயிலங்காடு, ஏழாலை தெற்கு)



கப்டன் செழியன் / அன்புவெற்றி
(சொக்கலிங்கம் ஜெகன் - செல்வா வீதி கிளிநொச்சி)



நாட்டுப் பற்றாளர் மோகன்
- நாரந்தனை, ஊர் காவற்துறை)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூனைகளின் சொர்க்கம்

**எமிலிசோலா**

தமிழில்—சு.மகேந்திரன்



■ எமிலிசோலா
Emile-Zola
பிரான்ஸ்

1840 இல் பிரான்சில் பிறந்த சோலா 'நச்சுரலிச' இலக்கியத்தின் பிதாமகரென அழைக்கப்படுகிறார். தொடர்ச்சியானவை எனத்தோன்றும் 27 நாவல்களை எழுதினார். 'நாநா' 'யேர்மினல்' என்பன அவரது முக்கிய படைப்புக்கள். 'நாநா' தமிழில் வெளிவந்துள்ளது.

எனக்கு அப்போது இரண்டு வயது இருக்கும். மிகவும் கொழுத்துப்போய் இருந்தேன். அந்தச் சிறிய வயதில் வீட்டுச் சௌகரியங்களை, இகழ்ச்சியுடன் நினைக்கும் மனோநிலை எனக்கு இருந்தும்கூட, அவற்றை எனக்கு ஏற்படுத்தித்தந்த எஜமானியிடம் மிகுந்த நன்றியுடையவனாக இருந்தேன். சிறகுகளான சிறியமெத்தையும், மூன்று மடிப்புகளுடைய விரிப்பும் கொண்ட சிறந்த படுக்கை அறைபோன்ற ஒன்று அலுமாரியின் அடித்தட்டொன்றில் எனக்கென இருந்தது. உணவுகூட முதற்தரமானதுதான். ஒரு போதும் பாணோ, சூப்போ நான் சாப்பிடவில்லை. எப்போதும் சிவந்த இறைச்சித் துண்டுகள்தான் எனக்கு உணவாகத் தரப்பட்டது. இந்த வசதிகளுக்கு நடுவே எனக்கு ஒரு ஆசையும் இருந்தது. மெதுவாக யன்னல்வழியாக நழுவி, அடுத்தவீட்டுக் கூரையில் ஏறிவிடவேண்டும் அங்கு ஒரு பூனைக்கூட்டமே இருந்தது. சூரிய ஒளியில் வீட்டு ஓடுகள்மேல் அவை புரண்டுகொண்டிருந்தன. உண்மையான சந்தோசம் அங்கு நிலவியது. அப்படியான ஓர் அசாதாரண நிகழ்ச்சியை, நான் சிந்தித்துக்கூடப் பார்த்ததில்லை, நான் முழுநம்பிக்கையுடன் அங்கு போகவேண்டுமென்று இருந்தேன், எப்போதும் பூட்டிவைத்திருக்கும் அந்த யன்னலுக்கு சற்றுத் தள்ளியிருக்கும் அந்த வீட்டின் கூரையிலேயே உண்மையான சந்தோசம் இருக்கிறது. அவர்கள் இப்படி யன்னலையே எப்போதும் சாத்திவைத்திருப்பதிலிருந்து, எப்படிக் கவனமாக இறைச்சி வைக்கும் அலுமாரியைப் பூட்டிவைத்திருப்பார்கள் என்பது நிருபணமாகிக் கொண்டிருந்தது.

நான் ஓடிவிடுவதற்கான ஒரு திட்டம் போட்டேன். இந்த இறைச்சித்துண்டுகளைவிட வாழ்க்கையில் வேறு எதுவோ இருக்கிறது. புரியாத அதுதான் மிகவும் உயர்வானது. ஒருநாள் எதிர் வீட்டுக்காரர்கள் சமையல் அறையில் யன்னலைப் பூட்ட மறந்து விட்டிருந்தனர். நான் அதற்குச் சற்றுக்கீழே இருந்த சிறிய கூரை மேல் பாய்ந்தேன்.

## 2

அந்தக் கூரைகள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. அதன் ஓரத்திலிருந்த சாக்கடைகளில் இருந்து எழுந்த மணம் எனக்கு வாயில் நீரை உண்டாக்கியது. நான் அதனருகே சென்றேன். எனது பாதங்கள் சேற்றில் அமிழ்ந்தன. அதில் ஒரு வர்ணிக்க முடியாத சந்தோசமும், சூடும் இருந்தது. எனக்கு வெல்வேற்றின்மேல் நடப்பதுபோல் இருந்தது. சூரியன் நல்ல வெப்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தான். அது எனது கொழுப்பைக் கரையப் பண்ணிக் கொண்டிருந்தது.

எனது கால்கள் அப்போது நடுங்கின என்பதை மறுக்க நான் விரும்பவில்லை. எனது சந்தோசம் பயம் கலந்ததாக இருந்தது. எனக்கு இப்போதும்கூட, திடீரென உண்டான பயத்தால் நடைபாதையிலிருந்து தடுக்கி விழுந்ததை நினைவு படுத்தக்கூடியதாகவே உள்ளது. ஒரு வீட்டின்மேல் இருந்து உருண்டு வந்த மூன்று பூனைகள் என்னை நோக்கி, வேனில் காலத்தில் நாங்கள் போடும் பலமான சத்தத்துடன் வந்தன. அதைக்கேட்க எனக்கு மயக்கம் வந்தது. என்னை ஓர் முழுமடையன் எனக்கூறிய அப்பூனைகள், என்னைக் கேலிசெய்யவே தாங்கள் அப்படிச் சத்தம் போட்டதாகக் கூறின. நானும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவைகள் போட்டதுபோல் சத்தம் செய்தேன். அப்போது மந்திரவசப்பட்டதுபோல் இருந்தது.... வெய்யிலால் சூடாகியிருந்த நாகத்தகடுகளின்மேல் பந்துபோல் உருண்டேன். அவை என்னைப் பார்த்துப் பரிகாசம் செய்தன. தோழமை உணர்வுகொண்ட ஒரு கிழட்டு ஆண்பூனை என்னுடன் சினேகிதமாகியது. எனக்கான பயிற்சிகளைச்செய்து முடிப்பதற்கு தான் உதவுவதாக அதுகூற, நானும் நன்றியுடன் அதனை ஏற்றுக் கொண்டேன்.

எஜமானி எனக்குத்தந்த அரவணைப்புகளிலிருந்து அப்போது எவ்வளவு தூரத்திலிருந்தேன். நான் தெருக்கரை நீரைக்குடித்தேன். சீனிபோட்ட பாலில்கூட அத்தனைசுவை இருந்ததில்லை எல்லாமே மகிழ்ச்சி ததும்புவதாகவும், அருமையானவையாகவும் இருந்தன.

### 3

ஒரு மணிநேரம் அலைந்தபின் எனக்கு அகோரப்பசி எடுத்தது. "கூரையின்மேல் சாப்பாட்டுக்கு என்ன கிடைக்கும்" என்றேன் நான். "எது கிடைத்தாலும் அதைச் சாப்பிடவேண்டியதுதான்" என ஞானியைப்போல் அது கூறியது. இந்தப்பதில் எனக்குத் துன்பத்தைத்தந்தது. ஆயினும் நன்றாகவே தேடினேன். எதுவுமே கிடைக்கவில்லை. கடைசியில் மாடியறை ஒன்றில் ஒரு இளம்பெண் மதிய உணவு செய்துகொண்டிருப்பதைக் கண்டேன். யன்னலுக்குக்கீழே இருந்த மேசையில் வைத்திருந்த சிவந்தகட்லெட் எனது பசியைக் கூட்டியது. "உனக்குத் தேவையானது இங்கே இருக்கிறது" என எனக்குள்ளே கூறிக்கொண்டேன். அதை எடுப்பது இலகுவானது எனஎண்ணினேன். மேசைமேல் பாய்ந்து கட்லெட்டை எடுத்தேன். தும்புத்தடியால் எனது முதுகில் அடி ஒன்று விழுந்தது. நான் கட்லெட்டைப் போட்டுவிட்டு பீதியூட்டும் வகையில் கத்திக்கொண்டு ஓடினேன். "உனக்குரிய இடத்தில் இருக்காமல் அங்கெல்லாம் ஏன் போனாய்" என எனது நண்பன் கூறினான். "மேசையில் வைக்கப்பட்டிருக்கும் இறைச்சி எமக்குரியதல்ல" " நீ சாக்கடைகளிலே உணவைத் தேடவேண்டும்" என்றது அந்தப் பெரியபூனை.

சமயலறை ஒன்றில் இருக்கும் இறைச்சி எனக்குரியதல்ல என்பது புரியவேயில்லை. உண்மையில் நான் பசியால் அவதியுற்றிருந்தேன். அந்தப் பெரிய பூனை "இரவு வரும் வரை பொறுக்க வேண்டும்" என்று கூறியது. எனக்கு நம்பிக்கை இன்மையை உருவாக்கி இருந்தது. இருட்டிய பின்பு தெருக்களில் கிடைக்கும் குப்பைக் குவியல்களைத் துருவித் துருவிப் பார்க்கவேண்டுமென எனது நண்பன் கூறினான், ஒரு முதிர்ந்த தத்துவஞானியின் தோரணையுடன் அது கூறியது. அதைக்கேட்டபோது, பசியுடன் நீடித்து இருக்கவேண்டுமென்ற நினைப்பால் எனக்கு மயக்கம் ஏற்பட்டு விடும் போலிருந்தது.

### 4

இரவு மெதுவாகவே வந்தது. அன்று தூறலாக இருந்ததால் அது என்னை நடுங்கச்செய்தது. அதன்பின் பேய்க்காற்றுடன் கூடிய மழை பெய்யத் தொடங்கியது. மழைத்துளிகள் விசையாகவும் உடலைத் துளைத்துவிடுவது போலும் இருந்தன. நாங்கள் மாடிப்படிகளால் கீழே இறங்கினோம். வீதிகள் மிக அழுக்காக இருந்தன. பெரிய சூரியனும், அது தந்த வெப்பமும் சூரியனின் வெளிச்சத்தாலான கூரையும் இப்போது இல்லை. அங்கு பகற்பொழுது முழுவதும் சுகமாகக் குளிர்காயக்கூடியதாக இருந்தது. எண்ணைப்பிசிறு எனது கால்களை வழுக்கப்பண்ணியது. எனது மூன்றுமடிப்புடைய போர்வையையும் சிதகிலான மெத்தையையும் நினைத்துக்கொண்டேன்.

பயத்துடன் நாங்கள் வீதியை அடைந்தபோது, எனது தோழன் நடுங்கிக்கொண்டிருந்தான். அவன் தனது உடம்பை ஒடுக்கியபடி சென்றான். அவனது உருவம் மிகவும் சிறிதாகி இருந்தது. சத்தம் ஏதும் செய்யாமல் வீடுகளுக்கூடாக விரைவாக என்னைப் பின்தொடர்ந்து வருமாறு கூறினான். நண்பன் அங்கிருந்த நான்கு சக்கரவண்டியின் கதவருகே அவசரத்துடன் சென்று மறைந்து கொண்டான். பூனைகள் தாம் திருப்தியுறும்போது போடும் சத்தம் அவனிருந்து கேட்டது.

"இப்படிப் பயந்ததற்கு காரணம் என்ன?" என எனது நண்பனைக்கேட்டேன். "கூடையுடனும் வளைந்த தடியுடனும் நின்ற ஒருவனை நீ காணவில்லையா?" "ஆம்" என்றேன். "நல்லது அவன் எம்மைக் கண்டிருந்தால், எமது தலையில் தடியால் அடித்துக்கொன்று, பின் உடலை வறுத்துத் தின்றிருப்பான்" என்றான் எனது நண்பன். "வறுத்துத் தின்பானா" என நான் கத்தினேன்.

மனிதர்கள் குப்பைகூளங்களை தங்கள் வீடுகளுக்கு முன் கொட்டியிருந்தது என்னவோ உண்மைதான். நான் குப்பைக்குவியல்களைக் கிளறி கிளறிப் பார்த்தேன். அடுப்புச்சாம்பல் பட்டிருந்த இரண்டு மூன்று சிறிய எலும்புத் துண்டுகள் கிடைத்தன. அவற்றில் இறைச்சியே இல்லை.

இரத்தம் சொட்டச் சொட்ட இருக்கும் ஈரல் எவ்வளவு மென்மையானது என எனக்கு அப்போது புரிந்தது. எனது நண்பன் தொழில் அனுபவம் பெற்றவன் போல் குப்பைக் குவியல்களை பிறாண்டிக் கொண்டிருந்தான். அவனுடன் நானும் காலைவரை, அலைந்து திரிந்தேன். ஒவ்வொரு நடைபாதைக்கும் நாம் போனோம். இதனை மிக ஆறுதலாகச் செய்தோம். எனக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. வீதிகளை வெற்றிகண்டுள்ளேன்! விடுதலை அடைந்துள்ளேன், சரிதான், ஆனால் நான் எனது சிறைக்கூடத்துக்குப் போய் விட வேண்டும்.

விடியற்காலையில் நான் தளர்ந்து நிற்பதைப் பார்த்த எனது நண்பன், "நீ காணவேண்டியது எல்லாவற்றையும் கண்டுவிட்டாயா" என என்னை புதுமையாகப் பார்த்தபடி கூறினான்.

"ஆம்" என்றேன் நான். "நீ உன்னுடைய வீட்டுக்குப் போக விருப்புகிறாயா?" என நண்பன் கேட்டான்.

"எனது வீட்டை எப்படிக் கண்டு பிடிப்பேன்."

"என்னுடன்வா, காலையில், கொழுத்த பூனையாகிய உன்னைக் கண்டபோதே நீ கடினமான காரியங்களுக்குப்பின் கிடைக்கும் சுதந்திரத்தின் இனிமையை அனுபவிப்பதற்கு படைக்கப்பட்டவன் அல்லவென எண்ணினேன். எனக்கு உனது வதிவிடம் தெரியும். நான் உன்னை உனது வீட்டின் வாசலருகில் கொண்டுபோய் விடுகிறேனென" அந்த மதிப்புக்குரியவன் வெகு சாதாரணமான முறையில் உணர்வுகள் எதுவுமின்றிக் கூறினான்.

"இல்லை நாங்கள் இப்படியே விடைபெற்றுவிட முடியாது நீ என்னுடன் வரவேண்டும். படுக்கையையும் உணவையும் பங்கிட்டுக்கொள்ள முடியும்" என்றேன் நான், எனது எஜமானி ஒரு நல்ல பெண்மணியும்கூட, நான் பேச்சை முடிக்க அவன் விடவில்லை. "ஒன்றும் பேசாதே" என உறுதியான குரலில் அவன் கூறினான், "நான் உனது இறுகுகளாலான குசனின் நடுவில் அகப்பட்டு இறந்துவிடுவேன். உனது வாழ்க்கை கலப்பினப் பூனைகளுக்கே பொருந்தும், விடுதலை உணர்வை உடைய பூனைகள், அதனை விலையாகக்கொடுத்து உணவையும் சௌகரியங்களையும் பெற்றுக்கொள்ளமாட்டா, போய்வருகிறேன்" என்றான் நண்பன்.

நான் வீட்டுக்குள்ளே போனதும் சவுக்கால் இரண்டு தட்டுத் தட்டினாள் எஜமானி. அவள் தரப்போகும் இறைச்சித்துண்டு பற்றிய நினைவுடனேயே அடிகளையும் வாங்கிக்கொண்டேன்.

யன்னலால் பார்த்தேன். எனதுநண்பன் கீச்சிட்டுக் கத்தியபடி அடுத்த வீட்டுக் கூரையில் ஏறிச்சென்றான். உதயமாகிக் கொண்டிருந்த சூரியனின் ஒளியில், அவனது நிழலுருவம் சந்தோசத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அ.காந்தா

“இந்த ரோடு போகும் இடங்களை ஒருக்காப் பாக்க வேணும். இதை விளங்கப்படுத்தி விடுங்கோ” எண்டு அவள் கேட்டாள்.

அப்பத்தான் என்னுடைய கோல்சருக்க மடிச்சபடி வைத்திருந்த வரைபடத்தை எடுத்து விரிச்சன். எங்கடை கொம்பனிப் பொறுப்பாளரும் அந்த இடத்துக்கு வந்திட்டா.

“அடியேய், நீ அந்தச் சண்டைக்கு நிண்டனியே?”

எந்தச் சண்டை எண்டு கேக்கிறதுக்கு முதலிலேயே எனக்கு விளங்கிற்று இதுக்காலதான் எங்கட பமிலாக்கான்ர கொம்பனி நிண்டு சண்டை பிடிச்சது. பேந்து பின் வாங்கிப் போச்சிது. வரைபடம் பாத்து இடங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிச்சினம். பழையபடியே வரைபடம் இருந்த இடத்துக்குப் போனது.

என்ர நினைவுகள் வரைபடத்தில் பார்த்த இடங்களைச் சுற்றியது

அப்படி எண்டா நான் நிக்கிற இடத்தில இருந்து இன்னும் கொஞ்சத் தூரம்தான் இருக்கும் அந்த இடத்திற்கு. இது கச்சாய் சாவகச்சேரி ரோட் எண்டா... அந்தச் சந்திக்கு அப்பால வெட்டை ஓ... ஓ.. அந்த இடத்திலதானே மைதிலி வாயில காயப்பட்டவள். ஒரு எட்டில அந்த இடத்துக்குப் போயிடலாம் முகத்துக்கு நேர கிடக்குது. வலது பக்கம் அங்கால கடற்கரை என்ன..

என்னவோ தெரியாது, மைதிலி அடிக்கடி இந்தச் சம்பவத்தைச் சொல்லுவாள். கடைசியாக எப்ப சொன்னாளெண்டா ஓ.. விளக்குவைச்ச குளத்தில வைச்சு சண்டை நடந்து கொண்டிருக்கேக்க.

அவவின்ர வாய் சிழிஞ்ச சண்டைதானே. அதுதானே வாய் ஓயாது அடிக்கடி சொல்லுறவள்.

அவள் கடைசியாகவும் சொன்னது இப்பவும் கண்ணுக்க வந்து நிக்குது. புரட்சிக்குளம் எண்டு பேர் சொல்லிச் சண்ட பிடிச்ச இடத்திற்குப் போயிட்டம். மனசில சிந்தனை ரேகைகள் ஒன்றன் பின் ஒன்றாக மின்னி மறைந்தன.

இந்த இடம் ஓ.. செண்பகத்தின் R.P.G யால் டாங்கி அடிச்சது ஆ.. அதில தாட்சாயினியக்கா வீரச்சாவடைந்தவ. அந்தா.. அதுக்குள்ளதான்.. ஓ.. பரணிதாவும் திரேசாவும் ஒரு பங்கருக்குள்ள வீரச்சாவடைந்தவை..

இவள் மைதிலியைச் சும்மா நாளிலையே கண்டுபிடிக்கிறது கடினம்.. அதுவும் இப்ப இந்த வெற்றியின் முழுப் பூரிப்பில் அவனை இன்னும் துரத்த வேணுமெண்டு எந்த எந்த மூலைக்க யார் யாரை விட்டுட்டு எங்கெங்கே நிற்கிறாளோ...

ஆறேழு ஆண்டா வேவு பார்த்தவள் எதிரியின்ர வளைவு, சுழிவு, பலம், பலவீனம் எண்டு அக்குவேறு, ஆணிவேறா அலசி வைச்சிருக்கிறவள். எப்ப பார்த்தாலும் எதிரிக்கு நடுவில் நிண்டு தொல்லை கொடுக்கிறதையே சிந்தித்துக் கொண்டிருப்பாள்.

இவளைப் போய் இந்தச் செல் மழைக்க எங்க நான் தேடிப்பிடிக்கிறது... விழுந்து படுக்கிறதும் எழும்பி ஓடுகிறதும் நடக்கிறதுமா இயல்பா செல்களுக்குக் கவரெடுத்தபடி போய்க் கொண்டிருக்கும் என்ர சிந்தனைமட்டும் அவளைச் சுத்திச் சுத்தித்தான் போகுது.

போன வருசம் மாங்குளத்தில நிக்கேக்க அவவின்ர ரீம் பிள்ள ஒண்ட ஆமி சினைப்பண்ணிப் போட்டான் எண்டு, அவன்ர பொயின்ர வேவு பார்த்து இரண்டு நாளில மூன்று பேரை முடிச்சாப்பிறகுதான் அவளின்ர முகத்தில மகிழ்ச்சி தெரிஞ்சிது.

இப்பவே அவளின்ர சொத்திவாய் முகத்தைப் பார்க்க வேணும் போல கிடந்தது. ஒருமாதிரி முன்னணி நிலைகளிட்டை போயிட்டம். விளக்கு வைச்ச குளம் வரைக்கும் வந்திட்டம் எண்டு சொன்னவை.. அப்படியெண்டா இது அந்த இடமாகத்தான் இருக்க வேணும்.

ஆமி ஏவிக்கொண்டிருந்த செல் எல்லாம் பின்னுக்குப் போய் விழுந்து கொண்டிருந்தன. அவன்ர அஞ்சு இஞ்சி செல்லும், டொங்கான் செல்லும் எங்களத்தான் உரசிப் பார்க்கிறது எண்டு பக்கங்களில் வந்து விழுந்து கொண்டிருக்கு.

வெற்றிகரமாக துரத்தியடிச்சுக்கொண்டு வந்திட்டினம். மறிச்சு வைச்சுக் கொண்டிருக்கும் பிள்ளைகளைக் காண ஆசையாக இருந்திச்சு.

கண்டதுதான் தாமதம் ஐயோ...

ஓண்டு ஓடிவந்து கையைப் பிடிச்சது. ஒருத்தி “ஹாய்” எண்டு தன்னையும் மறந்து, எதிரி முன்னுக்கு எண்டதையும் மறந்து கத்திக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். பிருந்தா அப்பத்தான் ஓ.பியில் இருந்து வந்து சாப்பிட்டிருக்க வேணும். அந்தக் கையால என்னப் பூசி.. அவள் ஸ்பெசல் ரீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எண்டு உடன சுவையான தேத்தண்ணியோட வந்தாள். எட்டிப் பார்த்தன். உடைஞ்ச பங்கருக்குள் இருந்து ஒருத்தி பூஸ்ரரை எரிச்சு ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தாள்.

"என்ன பார்க்கிறியள்? இந்த தொண தொணத்த மழைக்க விறகேது? அத்தான் உடைஞ்ச ஆட்டி பூஸ்ரரைக் கொண்டு ரொட்டி சுடுறன்"

பிள்ளைகளோட கதைச்சன். ஆனா கண் மட்டும் அவளையே தேடியபடி எங்க மைதிலி போட்டாள் எண்டு கேக்க நினைக்கேக்க, பின் பக்கம் இருந்து ஒரு கை என்ர தோளில் விழுந்தது.

"ஹாய்..!" என்றதும் கூய் என்று பக்கத்தில் ஒரு 60 எம்.எம். செல்வந்து விழுந்தது. என்னையும் விழுத்தி தானும் படுத்துக்கொண்டாள்.

எழுந்த உடனே கைகளைக் குலுக்கிக்கொண்டோம். மகிழ்ச்சி ரேகைகள் மட்டும் முகம் முழுக்கக் கொட்டிக் கிடந்திச்சிது.

"ஹாய்.. எப்பிடி சண்டை.."

"பேந்தென்ன. இதுவரைக்கும் வந்திட்டம்"

"இனி அங்கால.."

"அது இருக்கட்டும் சரி. இந்தா இதைப் பிடியன்"

"ஏன் இது?"

"முதலில இதுகளைப் பிடி"

"உனக்கேதும் விசரோடி? தொடர்ந்து சண்டைதானே. செல்லடிக்குள்ள நிண்டு மூளை ஏதும் பிசகிட்டோ? உன்ர அத்தியாவசியப் பொருட்களை எனக்கேன் தாறாய் ஏதோ உயில் எழுதித் தாறது போல.."

"சிலவேளை நான் அடுத்த சண்டையில உயிரோட இருக்கிறேனோ தெரியேல்ல. அதுதான்"

அவள் தனது இடுப்புப் பட்டி, மழைக் கவசம், குறிப்புப் புத்தகம் எண்டு எல்லாத்தையும் தந்தாள்.

இப்ப பொழுது நன்றாகப் போய் விட்டிருந்தது. மெல்லக் கேட்டன்.

"இண்டைக்கு இங்க நிண்டிட்டு நாளைக்குப் போறன். என்ன?"

"இதுவெல்லாம் நடக்காது. பதிவுகள் இல்லாமல் இஞ்ச ஒருத்தரும் நிக்கேலாது. உடனையே நடையைக் கட்டலாம்"

இப்படிப் பதில் கிடைச்சிது.

கொஞ்சத்தால,

"இரவுச் சாப்பாட்டு வாகனம் வரும்வரைக்கும் நிண்டு கதைக்கலாம்" எண்டாள்.

"அமுதாக்கா, பங்கருக்குப் போய் ரோச்சை எடுத்து வாங்கோ.. நீ கோல்சருக்கால நோட்புக்க எடன்"

இனி என்ன? இவள் கதை சொல்லத் தொடங்கினா அது படமாகத்தான் போகும்.

அதோட வேவுக்கதைகள் பற்றி சுவாரசியமாகச் சொல்லுறவள் இண்டைக்கு விடுவாளா? ம்.. பெண் பிள்ளைகள் பிடிக்கிற சண்டையெல்லாம் பதிய வேணும் எண்டுறவள் சொல்லப் போவதை வேகமாக மனம் அளந்து எடுத்துக்கொண்டது.

ரோச்சு குறிப்புப் புத்தகத்தை நொக்கிப் பாய்ச்சியபடியே சொல்லத் தொடங்கினாள்.

"சண்டை ஆரம்பமாகி ஆறாம் நாள் எங்கட வேவு அணியில் ஐந்து பேர் எதிரி எங்கெங்க நிலை கொண்டிருக்கிறானெண்டு பார்க்கிறதுக்கு உள்ளுக்கே போனம்.

இடது பக்கமாய் வெட்டை வெளி. முன்னுக்குப் போனால் கச்சாய் ரோட், வெட்டையை மேவி ஒரு பக்கமாய் ஆமி. அவன் எங்களுக்குப் பின்னுக்கு வந்திட்டான். நான் உடனேயே நிலைமைகளைச் சொல்லச் சொல்ல, செல்களைப் போட்டிச்சினம். அதே நேரம் வேவுக்குப் போய் ஆயத்த நிலையில் நிண்ட நாங்கள் முன்னுக்கு ஓடி ஆமியை அடிச்சித் துரத்தினம்..

ரவுன்ஸ் முடிஞ்சு போச்சுது. இப்ப இடது பக்கமுள்ள ஆமியைத் துரத்தவேணும். உடனே பமிலாவின்ர ரீமை எடுத்து அடிபட விடுவம் எண்டு வோக்கியில கதைத்தபடியே நிமிர்ந்தன். முன்னுக்கு ஆமி. பார்த்துக் கொண்டிருந்த ஒருத்தன் என்னைச் சுட்டிட்டான். வாயில காயம்.

இப்ப ஆமிக்கு பின்னுக்கு ஐந்து மீற்றருக்குள்ள நாங்கள். உடனேயே ஆமியப் பார்த்தபடியே குண்டிண்ட கிளிப்பைக் கழட்டிட்டன். இறுகப் பிடித்தபடி கையிக்குள்ள வைச்சுக்கொண்டன்.

என்னத் தூக்கவெண்டு எங்கட ஆக்களில ஒருத்தர் ஓடி வந்தார். அவரையும் ஆமி சுட்டிட்டான். எனக்கு மேலதான் விழுந்தார். நல்லாய் இரத்தம் போய்க்கொண்டிருக்க எனக்கு அவரின்ர இரத்தமும் சேர்ந்து தலை முழுக்க நனைஞ்சு போயிட்டுது.

எங்கட ஆக்கள் ஓடி வந்து வெப்பன் போட்டு அடிச்சவை. பிறகு ஆமிய வரவிடாது கொஞ்ச நேரம் மறிச்சினம்.

அதுக்கிடையில் எங்களிட்ட இரண்டு பேர் வந்திச்சினம். இதில இரண்டு பொடி கிடக்குது தூக்குவம் எண்டு குனிஞ்சினம். அந்த நேரம் நான் சொல்லுறன் "கையில குண்டு இருக்குது.. கிளிப்பைக் கழட்டிட்டன்.. ஐயோ விடுபட்டா வெடிக்கப் போகுது. குண்டை எடுங்கோ... அதிலதான் கிளிப்பைப் போட்டனான். எடுத்துப் பூட்டுங்கோ... "

எண்டு திரும்பத் திரும்ப அதையே சொல்லுறன். அது அவைக்குக் கேட்டமாதிரித் தெரியேல்ல.

"குண்டு கழட்டி வைச்சிருக்குது"

எண்டு கையப்பிடிச்சு வேகமாக பறிச்சு ஆமியின்ர பக்கம் எறிஞ்சிட்டினம் என்ர காயத்தைக் கட்டுறதாக இல்லை. கொற கொற எண்டு இழுத்துக் கொண்டு வந்து பின்னுக்குப் போட்டிச்சினம்.

நான் நினைக்கிறன், செத்திட்டன் எண்டு சொல்லினம். செத்திட்டனோ..? அப்படி எண்டா ஏன் கண்ணத் திறப்பான்? செத்தாலும் கூட எல்லாம் தெரியுமோ..?

இரத்தத்தால தோய்ந்திருந்த முகத்தைத் துடைக்கக் கைய எடுக்க வேணும்போலக் கிடக்குது. அந்த நேரம்,

"இஞ்ச.. இதுக்கு உயிர் கிடக்குது. உடனே ஏத்துங்கோ"

இப்படி யாரோ சொல்வது கேட்டது.

"சீரியஸ் சீரியஸ் உடனே தூக்கிக்கொண்டு ஓடுங்கோ..."

மைதிலி அக்சன் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

"அட இதுவே கதை? இதைப் போய் எத்தனை தரம் சொல்லிப் போட்டாய். பத்திற்கு மேல இருக்கும்.' எண்டன். அப்ப அவளின்ர சொத்தி வாயால ஒரு அழகான சிரிப்பைச் சிரிச்சாள். அத இப்பவும் நெஞ்சுக்க...

அங்க அந்த ரோட்டுக்குப் பக்கத்தில நிக்கிற வடலியோட நிண்டு மைதிலி சிரிக்கிறமாதிரிக் கிடக்குது. அட அவள்தான்.

இது என்ன இது விசர்? ஒருவேளை கனவு கண்டிட்டேனோ.. சீ. அவள் மாதிரித்தான் தெரிஞ்சிது. இல்ல இது என்ர பிரமையாகத்தான் இருக்கும்.

அந்த இடம்தானே அவளின்ர வாய சொத்தியாக்கினது.

பக்கத்தில் இருந்தவள் மெல்லத் தட்டினாள். பட்டெண்டு திரும்பினன்.

"என்ன இதுக்க உத்து உத்துப் பார்க்கிறியள்? நானும் பார்க்கிறன் ஆமி அசையிறதாத் தெரியேல்ல. ஆனா கனநேரமா பாக்கிறதும், உங்களுக்குள்ள கதைக்கிறதும் சிரிக்கிறதும் உம்மெண்டு மூஞ்சிய வைச்சிக் கொண்டு யோசிக்கிறதுமா இருக்கிறியள். என்ன நடந்தது"

எண்டாள்.

எனக்குப் படு வெக்கமாய் போச்சிது. அவளைப் பார்த்து அசடு வழியச் சிரிச்சன். போற போக்கப் பாத்தா, நானும் இந்த வாய் கிழஞ்ச கதையைப் பத்துத் தடவைக்கு மேல் சொல்லிட்டன்போல கிடக்குது.

கண்ணைச் சிமிட்டி அவளைப் பார்த்துச் சிரிச்சுக்கொண்டே கோல்சருக்க கையை விட்டன்.

"இதுக்குள்ளதான் சூரியக்கதிர் ரெண்டு சண்டையில.."

வரைபடத்தை எடுத்து அந்த இடங்களையும் சம்பவத்தையும் விளங்கப்படுத்தத் தொடங்கினன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனமாய் பேசும் நேரம்

யோ . புரட்சி




அந்த நாட்கள்
எவ்வளவு ஆனந்தமானவை.....
அந்த நாட்களில்
நான்
கண்டு கொண்ட புதுமைகள்
எத்தனை....... எத்தனை.....
மானிட வர்க்கத்துள்
வாழ்ந்து கொண்டிருக்கும்
புதுப்பிறவிகளுள்
அவன் வித்தியாசமானவன்
அவனோடு
நான் வாழ்ந்த பொழுதுகளை
மறந்திடத்தான் முடியுமா?
எந்த நேரமும்
என்னை அணைத்துவைத்திருக்கும்
அவனின் உணர்வுகளை
அப்பப்பா.......
எத்தனை முறைதான்
எடுத்துச் சொன்னாலும்
நானும் அவனும்
நண்பர்கள் ஆனகதை
ஒரு புதுமை
அவனுக்கு என்னில்
அளவில்லா பாசம்
எனக்கும் அவனில்
அப்படித்தான்
அவனோடு கூடவிருந்து
வாழ்வது
யாவருக்கும் முடிந்திடா
ஓர் விடயம்
எந்த நேரமும் அவன்
இதயத்தில் நெருப்போடு இருப்பான்

எந்த நாளுமே
ஏதோ ஒன்றை
இழந்தவன் போல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏமாற்ற முகவாய்
அந்த வதனம்
வாடிக்கிடந்ததை
நான் கண்டிருக்கிறேன்
ஓர் பொழுது
சோகக் கண்ணீரும்
மறு பொழுதில்
ஆனந்தக் கண்ணீரும்
அழகிய
அந்த விழிகளிலிருந்து
வழிந்ததைக் கண்டு
எத்தனை தடவைகள்
கண்ணீர் சுரந்திருப்பேன்
எந்தன் கண்ணீரை
அவன் அறியவில்லை
அவனின் கண்ணீர்த்துளிகளை
நான் அறிந்தவனே
இன்று வரை அவன்
என்னுடன் எதுவும்
பெரிதாய் பேசியதில்லை
நானும் அப்படித்தான்
மௌனங்கள் பாசங்கள்
மனதுள் இருந்தன
அன்றோடு நான் மட்டும்
அவன் என்னை பார்த்து
இப்படிச் சொன்னான்
எப்போது நீ
எந்தனது இன்பத்திற்கு
இணங்கப் போகிறாயோ?
நான்
மௌனமாக இருந்துவிட்டேன்.

எந்தப் பதிலைத்தான் நானும்
கூறி முடிப்பது
இந்தப் பேச்சு மட்டுமே
திரும்பத் திரும்ப அவன்
என்னோடு பேசியது
வேறோர் தோழனுக்கவன்
விளம்பிய பேச்சு சில
எந்தனுக்கும் கேட்டதுண்டு
அவன் உறவுகளின் கதைகள்
உளத்தை நெகிழச் செய்துவிடும்
அவனின் குடும்பம்
வறுமைப்பட்டதாம்
அவன் அப்பாவுக்கு
கண்ணிரண்டும் தெரியாதாம்
அம்மாவுக்கு.....
மூட்டு வருத்தமாம்
தங்கையொன்று மட்டுமே
கொஞ்சி விளையாட அவனுக்கு
கூடப் பிறந்த உறவாம்
அம்மா செய்திடும்
கூலி வேலையில் தான்
குடும்பத்து சீவியமாம்
மழைக்காலம் என்றால் அந்த
மண் குடிசையில் வாழும்
மூன்று ஜீவன்களும்

படுகின்ற வேதனையை
தோழனிடம் உரைத்த போது
காட்டாற்று வெள்ளமென
கண்ணிர் வடித்தேன்
மௌனமாக நகர்ந்து கொண்டிருந்த
இந்த
எரிமலையை எண்ணியபடியே
என் பொழுதுகள் கழிந்தன.....

குருடன் எனவறிந்தும்
குடும்பத்துத் துணையாய் அவனை
சேர்த்துக் கொண்ட அன்னை
ஐயிரண்டு மாதம்
சுமந்தெடுத்த இவனும்
அன்னையைப் போலவே
அர்ப்பணிப்பில் பெரியவனே
அன்றும் அப்படித்தான்
அவன் இருந்தான்
இருவகை
கண்ணீர்த் துளிகளிலும்
ஆனந்தக் கண்ணீர்தான்
அதிகமாய் சுரந்தது
அவன் என்னைவிட்டு
பிரிந்து செல்லப் போகிறான்
அவனின் இன்பத்திற்கு
இணங்கிப் போகும் நாள்
இதோ வந்தவிட்டது
அந்தவோர் அதிகாலைப் பொழுது
பூவுலகில் நான் பார்த்த

பொன் மனம் போய்விட்டது
அவனின் இன்ப வாழ்வுக்கு
எந்தனது பங்கும்
இருக்கவில்லை என்றில்லை
இருந்தது.......இருந்தது......
அவன் ஆவி பிரிந்தது
அப்படி ஒரு மனிதனை
எப்போது நான் காண்பேன்
அந்த் தொண்டனின் தொண்டுகள்
யாவரும் அறியவில்லை
அவனின் உணர்வுகளை
அதிகமாய் அறிந்தவர்
பலர் இல்லை.

நான் அறிந்தவன்
பெருமையை விரும்பிடா
பெருங்குணம் அவனுக்கு
நேற்றுவரை முழுவுருவாய்
நான் இருந்தேன்
நிலத்தடியில் இன்று
சிறு துண்டாய் கிடக்கிறேன்
அவன் உடலோடு
ஒட்டியிருந்த வெடிகுண்டின்
சிறு துண்டு நான்
அவனை மீண்டும்
நான் காணமாட்டேன்
அதை எண்ணி அழுகிறேன்
ஆனாலும் பலவுளங்கள்
அவன் செய்த பணியாய்
சிரித்துக் கொண்டிருக்கின்றன...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்னம் பிள்ளை



தமிழவள்

“அண்ணாவை வெளிநாட்டில் இருக்கும் மாமாவிடம் அனுப்பக் கூட்டிக்கொண்டு போன அம்மா வருவாவோ தெரியாது. நாளைக்குப் பிறந்தநாளை அப்பாவும் நானும் தனியத்தான் கொண்டாட வேணும்” என நினைத்தபடியே படித்து முடித்த கொப்பிகளை அடுக்கி விட்டு படுக்கை விரிக்க ஆயத்தமானவளை வீட்டின் பின்புறக் கதவு வழியே வந்த

“வாணி வாணி... அப்பா!”,

என்ற இரகசியக் குரல் ஒருகணம் திடுக்கிட வைத்தாலும் மறுகணம் எதையோ உணர்ந்தவளாய் சட்டென்று விளக்கை அணைத்தவள்.

“யாரது”?

“வாணி! அது நான்.”

எத்தனை நாட்களின் பின் கேட்டாலும் மறக்காத அந்தக் குரல் அவளை மகிழ்ச்சியில் துள்ள வைத்தாலும் சமாளித்தபடி எச்சரிக்கையோடு

“சுரேந்தினி அக்கா!”

என ரகசியமாக அழைத்தவள் அதே குரலில் தந்தையையும் அழைத்துவிட்டு வெளியே வந்தாள். இருளில் இருவர் நிற்பதைக் கண்டு கொண்டாள்.

“அக்கா! எவ்வளவு நாளுக்குப் பிறகு வந்திருக்கிறியள் ஐயோ முக்கியமானதை விட்டிட்டுக் கதைக்கிறன். சாப்பிட்டீங்களா அக்கா. உள்ளே வாங்கோ.”

“சாப்பிட்டிட்டம் வாணி. அப்பா! அவசரமா ஒரு உதவி தேவை. எங்களுக்குரிய பொருட்கள் கொஞ்சம் கொண்டு வந்தனாங்கள். அதை இங்க எங்காலும் மறைச்சு வைக்க வேணும். இரண்டு மூன்று நாளில எடுத்திடுவம்.”

“அதுக்கென்ன பிள்ளை வைக்கலாம். ஆனா அவங்கள் திடீர் திடீரென்று வீடுகளுக்க பூந்து செக் பண்ணுவாங்கள். வீட்டுக்கை வைக்காமல் வெளியில எங்கையாலும் தாட்டு வைச்சா பிரச்சனையில்லையே?”

“பிரச்சினை இல்லையப்பா. மண்வெட்டியைக் கொண்டு வாங்கோ.” என்றவளிடம் “என்னண்டு பிள்ளை அந்தக் சனியன்களின்ரை ஆந்தைக் கண்ணைத் தாண்டி இவ்வளவையும் தூக்கிக் கொண்டு வந்தனீங்கள். நான் வெட்டுறன் பிள்ளை.” என்று சொன்னவரிடம்

“இல்லைத் தாங்கோ நான் வெட்டுறன் நீங்கள் சத்தம் கேளாமல் வெட்ட மாட்டியள்” என்று மண்வெட்டியை வாங்கிக்கொண்டாள்.

தேர்ந்தெடுத்த இடத்தில் இருந்த மேற்புறம் காய்ந்த மண்ணைக் கைகளால் வழித்து ஒரு பக்கமாக வைத்துவிட்டுச் சத்தமே இன்றி மிகவும் லாவகமாக வெட்டத் தொடங்கினாள். கொண்டு வந்த அந்தப் பெரிய பொதியை அணைத்தபடி அந்த இருளிலும் கண்கள் பளபளக்கச் சுற்றுப்புறத்தை அவதானித்தபடி நின்ற மற்றப் பிள்ளையிடம் பார்வையைப் பதித்தவாறே,

“ஏன் சுரேந்தினியக்கா மண்ணை கையால ஒதுக்கிறியள்” என்ற வாணியைப் பார்த்து இருள் தாண்டியும் சிரித்த அந்த வாய்.

“கிடங்கு வெட்டப்பட்டது என்றது தெரியாமலே மூடவும் வேணும் இல்லையா? அதுக்காகத்தான்” என்றவள், “றோட்டு றோட்டா எத்தினை கிண்டி, கிண்டினது தெரியாமல் மூடியிருக்கிறம்” என்றபடி வேலையைத் தொடர்ந்தாள்.

“என்ன மாதிரி, சந்தி வீட்டுக்காரர் என்னவாம்” எனக் கேட்டு அவள் முடிக்க முன்னேயே வாணி வெடித்தாள்.

“அவங்களோ... அவங்களின்ரை இளிப்பும், பாட்டுகளும், அதிகாரமும் தூ... கேடு கெட்ட நாயள்.... ஒவ்வொருத்தனையும் உயிரோடை கொழுத்த வேணும் அக்கா. அதுசரி இருட்டுக்குள்ளேயே இப்படிப் பளிச்சென்று தெரியிறீங்கள். என்னண்டு இரவில சண்டைக்குப் போறனீங்கள்” என்றவளிடம் அதற்கும் ஒரு சிரிப்போடு

“எல்லோரும் கரிதானே பூசுறது. நான் கொஞ்சம் கூடப் பூசுறனான்” என்றவள் அதுவரை அமைதியாகவே நின்ற போராளியைப் பார்த்து “புவி இதை இன்னும் கொஞ்சம் ஆழமாக்குங்கோ” என்றுவிட்டு வாணியின் பக்கமாக நகர்ந்தாள்.

நகர்ந்தவள் எதிலோ மிதித்து ஒரு கணம் தடுமாற “கவனம் அக்கா” என்று வாணி தாங்கிக்கொண்டாள்.

“என்னது தேங்காய் மாதிரி இருக்கு”

“ஓம் அக்கா நாளைக்கு என்ரை பிறந்த நாளுக்கு நடவென்று அப்பா விடியத்தான் தென்னம்பிள்ளை வாங்கி வந்தவர்”

“ஐயோ! நடுற மரத்தையா உழக்கினன்” எனக் கவலைப்பட

“என்னக்கா! உங்கட கால்தானே பட்டது. அது உங்களை மாதிரியே உயரமா வடிவா கெதியில வளர்ந்திடும்” என்றவள்

“நீங்கள் நாளைக்கு என்ர பிறந்தநாளுக்கு என்னோடையே நின்றால் எவ்வளவு நல்லா இருக்கும்” எனப் பெருமூச்சு விட

“இப்பவே பன்னிரண்டு முப்பத்தெட்டாச்சு. பிறந்தநாள் வாழ்த்துக்கள்” என்றபடி வெட்டிய கிடங்கின் ஆழம் அகலம் சரிபார்த்து, கொண்டு வந்தவைகளை உள்ளே வைத்து மூடத் தொடங்கினாள். இறுதியாகக் காய்ந்த மேல் மணலைப் போட்டு அந்த இருளினுள்ளும் நுட்பமாக வேலையை முடித்தவள், வாணி கொண்டு வந்த தேனீரைக் குடித்துவிட்டு “அப்ப வரப்போறம். அப்பா! இரண்டு மூன்று நாளிலை எடுத்திடுவம்”

“கவனம் பிள்ளையள் பார்த்துப்போங்கோ”

என்றவருக்குத் தலையாட்டி விட்டுப் பின் வளவு வழியாக சென்றவர்களின் நிழல் உருக்கள் பார்வையிலிருந்து மறைந்து போன சில நிமிடங்கள் அப்படியே நின்றவர்.

“வா பிள்ளை உள்ளுக்க போவம்” என்று சொல்லி வாய் மூடவும் சடசடவென்ற துப்பாக்கிச் சத்தம் கிழித்தது. சத்தம் கேட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிர்ந்த வாணி அப்படியே வாசல் படியிலேயே இருந்து விட்டாள். தந்தையிடமிருந்து பெருமூச்சொன்று கிளம்பியது. ஆவணி மாதத்து மெல்லிய குளிர் காற்றையும் மங்கலாய் அறிந்த பின்னிலவின் குளிர்ச்சியினையும் மீறி வாணிக்கு வேர்த்துக் கொட்டியது. இதயம் காதுக்குள் வந்து துடிப்பதாய் உணர்ந்தவளின் வாய் "கடவுளே கடவுளே" என்று உச்சரித்துக் கொண்டிருந்தது.

"பிள்ளை விடிஞ்ச பிறகுதான் என்ன நடந்ததென்று தெரியும். அதுகளுக்கு ஒன்றும் நடந்திராது. நல்லதையே நினைச்சுக் கொண்டு போய்ப் படு"

என்ற தந்தையின் வார்த்தைகளையும் மீறி "நிறையக் கரி பூசுவன்" என்ற சுரேந்தியின் வார்த்தைகள்...

விடிய, விடிய விழித்திருந்தவள் பொழுது புலரத் தொடங்கியும் இருந்த இடத்திலிருந்து மெதுவாய் எழுந்து அந்த இடத்தை நோக்கிப் போனாள். "கிண்டியது தெரியாமல் மூடவும் வேணும்" அந்த வார்த்தைகளை மெய்ப்பிப்பதாய் எந்த ஒரு அடையாளமும் இன்றி அந்த இடம். பக்கத்திலேயே கால் பட்டுத் தடக்கிய தென்னம்பிள்ளை.... அதையே பார்த்தபடி நின்ற போது வெளியே நிலவரம் அறியப்போன தந்தை பதட்டத்துடன் வருவது தெரிந்தது.

"ஒரு பொம்பிளப் பிள்ளையை சுட்டிட்டாங்களாம்.. செத்த பிள்ளையின் கைவிரல்களில் எல்லாம் ஈரமண் ஒட்டியிருந்ததாம். எங்கோயோ எதையோ தாட்டு அல்லது கிண்டி வந்திருக்க வேணும் என்று எல்லா வீடுவளவுகள் றோட்டுக்களையும் செக் பண்ணிக்கொண்டு வாறாங்களாம். கம்பியளால நிலத்தைக் குத்திக் குத்திப் பார்த்துக்கொண்டு வாறாங்களாம் பிள்ளை" என்றவர் அந்த இடத்தையே பார்த்தார்.

அவர் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்தவளாக "அது பிரச்சனை இல்லை அப்பா. அடையாளமே இல்லை. ஆனா கம்பியால குத்திப்பார்த்தால் வித்தியாசம் தெரியும்" என்றவள் சட்டென்று மண்வெட்டியை எடுத்து அந்த இடத்திற்கு அருகிலேயே கிடங்கு தோண்டத் தொடங்கினாள். தோண்டிய மண்ணை அந்த இடத்தின் மேல் போட்டவண்ணமாக இருந்தவளின் எண்ணத்தைப் புரிந்தவராக தென்னம்பிள்ளையைக் கையில் எடுத்துக் கொண்டார். அந்தத் தென்னம்பிள்ளை ஏனோ அவர் கண்களைக் கசிய வைத்தது. கிடங்கு வெட்டி முடித்து நிமிர்ந்து தந்தையிடமிருந்து வாணி தென்னங்கன்றை வாங்கவும், வேலிகளைப் பிரித்தும் வாசலாலும் அவர்கள் உள் நுழையவும் சரியாக இருந்தது. வந்தவர்களில் ஒருவன் கூரான கம்பியோடு இவர்களை நோக்கி வர மற்றவர்கள் நிலம் முழுதும் கம்பியால் குத்திப்பார்க்கத் தொடங்கியிருந்தனர்.

"ஆ... தங்கச்சி... தென்னமரம் நடுறது"

என்றபடி அவ்விடத்தை நெருங்கவும் "ஓம் ஐயா இன்றைக்குத் தங்கச்சிக்குப் பிறந்தநாள். அதுதான் நடப்போறம்."

"ஆ... நல்லம் நல்லம் நானும் மண் போடுறது. தங்கச்சி எனக்கும் குரும்பை தரும்தானே?"

என்றவனை நோக்கி

"இது வேர் விடும் வரைக்கும் தன்னும் இருக்கிறியோ தெரியாது" என்று மனதிற்குள்ளாகச் சொன்னபடி, மௌனமாகச் சிரித்தவள் பின் அவனைக் கவனியாதது போல மரம் நடுவதில் ஈடுபட்டாள். காதுகள் மட்டும் நேற்றிரவுச் சம்பவம் பற்றி அவன் ஏதாவது சொல்ல மாட்டானா எனத் துடித்தபடி இருந்தன.

"ஐயா உங்களுக்குத் தெரியுமே? இரவு நாங்கள் ஒரு பொம்பிளைப் புலியை சுட்டோம். நல்ல வடிவான வெள்ளைப் புலி ஐயா" என்று விட்டு "வாறேன் தங்கச்சி" என்றபடி வந்த கம்பிக்கு வேலை எதுவும் கொடுக்காமலே நகர்ந்து போனான்.

வாணியின் கண்கள் கலங்கின. திரும்பி வீட்டுக்குள் நடந்தாள். மண்வெட்டி அந்த இடத்திலேயே கிடந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிமிர்ந்து கொள்

உயிரவன்

நீர்த்து விட்ட
சாம்பல் மேட்டுக்குள்
என் எல்லாமும் தீர்ந்து விட்டன
அடையாளங்கள்
ஆவணங்கள்
முகவரிகள்
பட்டங்கள்
பதவிகள்
எல்லாமும் முடக்கப்பட்டன
எரிதணலுக்குள் தள்ளப்பட்டு
தீய்ந்து போனவர்
பட்டியலிடப்பட்டவர் நாம்
எமக்கான இவ்விடத்தை
அடைவதற்கு தடையாய்
தீக்குச்சியேந்திய கைகள்
எமையிழந்ததினால் நாம்
இன்னல் சுமக்கிறோம்
முடிசுமந்த தலைகள்
ஏன் இன்று நிலைப்படுத்தியுள்ளன
நான்கு சுவர்களுக்குள்
நாக்கில் நெருப்பேற்றிய
மனித மாமிசம்
அலைக்கத் துடித்திடும்
மனிதர்கள் நடுவே
'இருள் அலைக்கும்'
மனிதருள் நாமொருவனாய்
ஒளியைத் தேடி கரைகிறேன்.

# உயிர்த்துணர்வு

பூமி பிளக்கும் பூகம்பமும்
இருள் சூழ்ந்த வேலிகளும்
முட்கம்பி வேலிகளும்
எங்களின் வாழ்விலொரு தடையல்ல
இவையெமக்கு பொருட்டாகவும் தெரிவதில்லை
இலக்கையழிக்கவும்
தடைகளை தாண்டித் தாவவும்
விழி கொண்டு சுட்டெரிக்கவும்
வழிசெல்லும் வல்லமை
எங்களருகில் என்பதால்
கதையளப்பதும்
பூச்சாண்டி காட்டுவதும்
மந்தரித்த மடக்கி வெல்லவும்
எங்களுக்குப் பழக்கமில்லை
சொல்லுக்கு முன் செயலும்
உயிருக்கு மேல் அன்னை பூமியும்
தாங்குகின்ற தலைமை
வாயிருந்த சலசம் வார்த்தைபேசும்
வல்லவர்களையும் வெல்லும் பலம்
எமக்குளெழும்
இருந்தும் அடைகாக்கின்றோம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எப்போது விடியும் என் இரவு

செந்தணல்

வெளியே...
பனித்துளிகள் இலைத்துளிர்களில்
பட்டுத் தெறிக்கின்றன.

என் உள்ளேயோ..
ஆறாத பெருந் தணலின் வெப்பம்.
அணுவணுவாய் எனைத் தீய்க்க,
வெந்து உருகுகிறேன் நித்தமும்..
எப்போது விடியும் என் இரவு?

இந்த நான்கு சுவர்களுக்குள்
சிலுவை சுமப்பது நான் மட்டுமல்ல
ஆணியிலறையப்பட்ட
என் உணர்வுகளும் தான்..
எப்போது விடியும் என் இரவு?

மாற்றமெதுவுமின்றி புலரும் காலைகளும்,
தோலைத் துளைத்து
உயிரைச் சில்லிட வைக்கும்
கொடும் பனியினூடு நகரும்
எனது இரை தேடும் பயணமும்..
எப்போது விடியும் என் இரவு?

நினைவில் வந்து நிழலாடும் - என்
வயோதிப அன்னையும்
மாலைக்காய் காத்திருக்கும்
முதிர்க்கன்னியரான சகோதரியரும்..
நட்சத்திரங்களை வீட்டினுள்
இருந்தவாறே எண்ணவல்ல - எம்
மாற்ற முடியா வறுமையும்...

நித்தமும் வேகுகிறேன்
வெந்துடன் நோகின்றேன்..
எப்போது விடியும் என் இரவு?





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடிவு

கலைச்செல்வி
சுரேந்திரன்

1985ம் ஆண்டு, நவம்பர் மாதம் நள்ளிரவு. மட்டு மாநகரின் எழில் மிகு முகத்துவார வீதியின் வேதாரண்யம் சதுக்கத்தை மிக அண்டிய பகுதி. காலையில் நடைபெற இருக்கும் நிகழ்வு தெரியாமல் பல வீடுகளில் பரவசமாய் படம் ஓடிக் கொண்டிருக்க, சாத்திரியார் ஒழுங்கையை அண்டிய குட்டி வீட்டில் ஜீவா போராடிக்கொண்டிருந்தான். சட்டென்று வாழ்க்கை வெறுத்துப்போனது ஜீவாவுக்கு. எதுவரையில் மீண்டும் மீண்டும் எழுந்திருப்பது? இந்த நாளோடு இதற்கு 'விடிவு' காணலாம். சாகப் போகி...றேன் எனத் துடித்துக் கொண்டிருந்த குப்பி விளக்கினையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு லொக்... லொக்...க்கென்ற உயிர் துடிக்கும் இருமல் சத்தம் உணர்வைத் தந்தது. "என்னம்மா" என்றவனுக்கு "தம்பி..பி மத்தியானக் குழம்பு கொஞ்சமும், தண்ணிச் சோறும்... இருக்குது அப்பு, சாப்பிட்டுப் போ" குரலின் உயிர் இல்லாத தன்மை அப்படியே உறைத்தது.

"சரி... சரி நான் சாப்பிடுகிறேன். நீங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கோ" தனது நான்கு வருட பல்கலைக்கழக வாழ்வின் இறுதி நாளாகிய பட்டமளிப்பு நிகழ்ச்சியன்று. எத்தனை கசப்புக்கள், தடை தாண்டல்கள், அகோர வறுமையின் அடிகள். "ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வில் போராட்டம் உண்டு" என எழுதி வைத்த "எமர்ஸன்" ஞானியை நினைத்தவன். "வாய்விட்டு என் வாழ்க்கையே போராட்டமாகி விட்டதே" எனக் கூறிக்கொண்டான். படிக்கும் நாட்களில் 'மை' முடிந்து போன வேளை தண்ணீரைக்கலந்து எழுதியது நினைவுக்கு வந்து உடன் கண்ணீரும் வந்தது.

நள்ளிரவு கடந்து விடிந்து கொண்டிருந்தது. விரைவாக இயங்கினாள். செம்பை அடுப்பில் சூடாக்கித் தனது மங்கிவிட்ட ஆடைகளை இயன்றளவு நிமிர்த்தினான். திடீரென்று படலையைத் திறந்துகொண்டு வந்த பாக்கியம் மாமியின் நடையில் அவசரம் தெரிந்தது. அவனது தாயிடம் நேரடியாகச் சென்றவள். "கண்மணி, ஓராங்கட்டைச் சந்தியில் இரண்டுபேரைச் சுட்டுப் போட்டுக்கிடக்காம், காட்டிக்கொடுத்தவனுகளாம்" "மாமி உதென்ன ஈழத்தில் நடக்காத கதையோ, உதெல்லாம் நமக்கு சகஜம் தானே" சொல்லியபடியே இயந்திர வேலை செய்யும் ஜீவாவைப் பாக்கியம் மாமி பயந்த பார்வையிலே பார்த்தாள். எவ்வளவு தூரம் சமூகத்தின் கொடூரங்களை இக்கால வாலிபப் பிள்ளைகள் உணவை ஜீரணிப்பது போல பழக்கப்படுத்திக் கொண்டார்கள் என்பதை எதிர்கால சந்ததியினரோடு ஒப்பிட்டுப் பார்க்கவே பயந்த பாக்கியம் மௌன நடை போட்டாள். வழக்கம் போல பழைய உடுப்புகளையே அணிந்து கொண்டு புறப்படும் நேரம் வந்தது. தாயின் பாதத்தருகில் குனிந்து கொண்டு "அம்மா நான் வெளிக்கிடுறன்.... குளிசையெல்லாம் ஒழுங்கா நேரத்துக்குப் போடுங்கோ. இண்டோட எங்களின்ர கஸ்ரமெல்லாம் விட்டுப் போகும். வயிறு நிறைய இனி மூண்டு வேளையும் சாப்பிடலாம்" தாய் கண்மணியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. கண்களின் ஊடாக நினைவுப் பறவைகள் சிறகடித்து எங்கெங்கெலாமோ தொட்டுணர்ந்து வருகிறது என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிந்தது. "மகன்" என அழைத்த அழைப்பில் பாசப்படகு விரைந்தோடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்தது. இத்தனை வருடங்களாக மட்டை இழைத்து, மாவித்து, அப்பம் விற்று வந்த வாழ்விற்கு விடிவா என்பதனை நினைத்துப் பார்க்கவே அத்தாயால் முடியாதிருந்தது. "கவனமாகப் போட்டுவா மகன்" என விடை கொடுக்கும் போதும், தன் மகனைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் போல் எழும் உணர்வையெண்ணித் தனக்குத்தானே மெல்லியதாக வியப்பும் கொள்கிறாள்.

'டேகேஸ்' மாமாவின் சைக்கிளை எடுத்து மிதித்துக் கொண்டு இரண்டு மைல் தூரத்திலிருந்து நகரினை நோக்கி விரைகையில், சனக்கூட்டம் உயிரிழந்த அந்த இரண்டு பேரையும் பார்வையிட்டு, உடன் கலைவதைக் கண்டும் காணாதவன் போல் நகரையடைந்து, தெரிந்தவரின் கடையில் சைக்கிளை வைத்து விட்டு பேருந்தைப் பிடித்து எட்டு மைல் தூரத்திலிருக்கும் 'வாசிற்றி' நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தான். பேரூந்தில் எள் விழுந்தால் எண்ணை எடுக்கும் கூட்டம். நின்று கொண்டிருந்த ஜீவாவின் செருப்பானது தான் ஏற்கனவே ஒருதடவை கட்டப்பட்டுவிட்டேன், ஆகையால் இனி முடியாது என எண்ணியது போன்று அறுந்து தொலைந்தது. கண்கள் பன்னீர் கொப்பளிக்க முயல்கையில் இவனது அவதிநிலையைக் கண்ணுற்ற நண்பி கலைச்செல்வி இருக்கையில் அமர்ந்தவாறே கைகளால் இவனது செருப்பையெடுத்து ஒருவாறு சரிப்படுத்த உதவினாள். "சில சந்தர்ப்பங்களில் சொல்லப்படும் வார்த்தைகளை விட, செய்து காண்பிக்கப்படும் செயல்களின் பெருமைகளை எடுத்தியம்ப முடியாது" என எழுதிவைத்த 'பெஞ்சமின் பிராங்ளினை' நீர்த்திரையினால் நினைத்துக் கொண்டான். 'வாசிற்றி' வந்திறங்கிக் கலைச்செல்விக்கு நன்றி சொல்லி நடக்கையில் கட்டிடங்கள் ஜீவாவை உள்வாங்கிக் கொண்டன.

மகா விஸ்தாரமான மண்டபம்தான். பல்கலைக்கழக உபவேந்தர் முதல் வடகிழக்கு ஆளுனர் வரையில் விருந்தினர் பட்டியலில், தன் சிறுவயது நாட்கள் முதல் இந்நாள் மட்டுமான நினைவுகளை ஒரு தடவை மீட்டிப் பார்த்த ஜீவா தன்னைத்தானே நம்ப முடியாத ஒரு மனோநிலையில் காணப்பட்டான். ஐந்தாவது வயதில் ஈழப்போராட்டத்தில் சகோதரனையும், பதினைந்தாவது வயதில் தகப்பனையும் வன்முறையின் கொடூரங்களுக்குப் பலிகொடுத்த பின்னரும் காலத்தேவதை திருப்தி அடையாமல் தொடர்ந்தும் வறுமையினால் விலங்கு பூட்டி வதைத்த பெருநாட்களை எண்ணும் போது அடிக்கடி அடிவயிற்றில் பகீரென்றிருக்கும். கூடவே தாயின் எதிர்கால ஆறுதல் வாழ்வின் முக்கியத்துவமும் மனக்கண்ணில் எழுந்தவுடன் தன்னம்பிக்கை கல்வியிலே ஓடிவந்து உட்கார்ந்து கொள்ளும். இப்போது ஜீவாவின் மூச்சு எல்லாமே அம்மா..... அம்மா... என்பதுதான். பரிசளிப்பும், பட்டமளிப்பும் ஆரம்பித்தது கூடத்தெரியாமல் கடந்த கால நினைவேட்டில் இருந்தவனை,

"வெளியேறும் பட்டதாரிகளில் மிகச் சிறந்தவரும், முதலாம் இடத்தைப் பெற்றுக்கொள்பவருமாகிய திரு. ஜீவா நவரெட்ணம் அவர்களை மேடைக்கு அழைக்கிறோம்"

கரவொலி விண்ணை முட்டியது. சுதாகரித்துக் கொண்டு மேடைக்குச் செல்லும் போது உணர்ச்சிகள் கடல் நுரையெனப் பொங்கித் தாளம் கொட்டக் கொட்ட அம்மா... அம்மாவென இதயத்தினுள் சொல்லிச் சொல்லிப் போற்றியபடியே சென்று அனைத்தையும் பெற்றுக்கொண்டு படியிறங்கினான்.

தொடர்ந்து மாணவர்களுக்கு சிறியதான விருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மாணவ, மாணவியரிடையே எங்கோ நகரையொட்டிய இடமொன்றிலே அசம்பாவிதமெனப் பேசிக்கொள்வதைக் கேட்டதற்குப் பிற்பாடு அனைத்து மாணவர்களும் கூடுகளுக்குச் சென்றுவிட முயற்சிக்கும் பறவைக் கூட்டங்களின் மனோ நிலையுடனே காணப்பட்டனர். பதட்டத்துடனேயே அனைவரும் பேருந்தேறி நகரையடைந்து பிரிந்து, ஜீவா வழக்கமாகத் தனது சைக்கிளை வைக்கும் கடைக்காரரை அணுகிய போதோ,

"தம்பி... உங்களின்ர பக்கம்தான் ஏதோ பிரச்சனை போல கிடக்கு. கரும்புகையும் சத்தமுமாய்க் கிடந்தது. ஓராங்கட்டைக் கண்டல்ஓரத்தில கண்ணிவெடியில் ஜீப்பட்டு ஆறு பொலிஸ் செத்ததாம் எதுக்கும்.... பார்த்துப்போங்கோ" தொடர்ந்து அவருடன் பேசுவதற்குக் கூட நேரமில்லாமல் விரைந்து எப்படித்தான் ஊர் எல்லையை அடைந்தான் என்றே தெரியாமல் அண்மித்தவனுக்கு, தான் குடியிருந்த பகுதி சுடுகாடாய் இருப்பதைக் கண்டு பேச்சுவர மறுத்தவன் போன்று காணப்பட்டான்.

அடிமேல் அடி வைத்து படலையைத் திறந்த போது கண்மணி தூய வெள்ளைச் சேலையில் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. நிரந்தரத் தூக்கம். எதுவித வேதனையுமே அத் தாயின் முகத்தில் தெரியவில்லை.

"தம்பி.... நீபோய் கொஞ்ச நேரம்தான் இருக்கும். பெரிய குண்டுச் சத்தமும் தொடர்ந்து ஒரே செல்லடியுமாய் இந்த இடம் தடம் புரண்டது. ஏலுமான சனமெல்லாம் போட்டது போட்டபடியே ஓடிற்றுது. பாவம்... வயது போன உன்ர அம்மாவால.... தான் முடிய...ல்லையப்பா, ஆனா நான் திரும்பி வரைக்கவும் இப்பிடியே அமைதியா கண்மணி அக்கா...." மேலே தொடர முடியாது வடிவேலு மாமா. ஜீவா எதுவுமே பேசவில்லை. பேச்சு வரவுமில்லை. தான் வளர்ந்த, தன்னை வளர்த்த இடங்களின் சிதைவுகளையெல்லாம் பார்த்துக் கொண்டே வரும் போது அந்த வெள்ளைக் காகிதம் காற்றில் படபடத்தது அவனுடைய கரங்களில் சரணடையத் துடித்தத்து.

"வா... மகன் உன்ன இப்பிடியா கடதாசி மூலமா வரவேற்கிறன். இத நீ வாசிக்கக்குள்ள, நான் உன்ர அப்பர், தம்பியோட இருந்து உன்னப் பாத்து சந்தோசப்பட்டுட்டிருப்பன். நீ.... போய் கொஞ்ச நேரம் இருக்கும் மகன், ஒரு பெரிய குண்டுச் சத்தம்.... ஓ...ரே செல்லடி மெதுவா வெளிய போறதுக்குள்ள செல்லொண்டு உச்சி மோட்டுல விழுந்திட்டு, கால்ல சரியான அடி, கொஞ்சம் கொஞ்சமா இரத்தமும் வெளியேற, இரத்த அடி காயங்களோட சனமும் இல்லாமப்போக எனக்கு எல்லாமே விளங்கிட்டுது மகன். அதனாலதான் அறிவிச்சிற்று போக வேணுமெண்ட விடாப்பிடியில எழுதுறன். மகன் நம் சனங்கள் ஏழைச்சனங்கள். அதுகளுக்கு இப்ப தங்களைச்சுத்தி என்ன நடக்குதெண்டே தெரியாத நிலை. படிச்ச சனங்களும்.... குறைவு.

மகன்... எங்களின்ர சனங்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ள ஒரு உண்மைப் பங்காளி வேணும். சனங்களுக்காக குரல் கொடுக்க வேணும். அவங்களுக்கு 'விடிவு' பிறக்க வேணும் அந்த 'விடிவு' உன்னாலதான்...

மேற்கொண்டு எழுத முடியாது தவித்து, இறுதிப் பிரியாவிடையைக் கொடுத்திருப்பது ஜீவாவுக்குப் பூரணமாகத் தெரிகின்றது. தாயை மெல்லத் திரும்பிப் பார்க்கிறான். மெல்லிய வெண்ணிறப் புடவை, கால்களின் ஓரத்தில் எட்டிப் பாக்க முயற்சிக்கும் சின்னதான இரத்தஓடை. மௌனமாக வெளியில் வந்து பார்த்த போது சனங்களெல்லோரும் ஒப்பாரி வைத்து அழுது புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள். தாயின் இறுதிக் கடமைகளை வடிவேலு மாமாவிடம் ஒப்படைக்கிறான். அழுது அரட்டிக் கொண்டிருக்கும் சனங்களையெல்லாம் பாடசாலைக் கட்டிடத்திற்குப் போகச் சொல்கிறான். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல சனங்கள் செல்கையில் பெரிதான விம்மல் ஒன்றுடன் வீட்டைத் திரும்பிப் பார்க்கிறான். நடக்கிறான்.

கால தேவனின் ஞானத்தை கண்மணியின் பிள்ளையும் பெற்று விட்டதா என வடிவேலு மாமா வியப்படைந்து மனதுக்குள் நினைக்கையில், அவரது காலடியில் காற்றிலே அடிபட்டு வந்து மோதிநிற்கின்றது, ஜீவா உயிர் கொடுத்து படித்துப் பெற்ற பட்டச் சான்றிதழ். திடுக்கிட்டு ஜீவாவைப் பார்க்கிறார். அவனோ அந்தி வானத்துச் சூரியனைப் போல மக்களோடு மக்களில் ஒருவனாகச் சேர்ந்து சனங்களைத் துரிதமாகப் பாடசாலைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறான். பகல் மீது இருள்மையல் கொள்ளத் தொடங்குகிறது. பகல் அந்த இருளை மௌனமாக ஏற்றுக் கொள்கின்றது. பொறுமையுடன் தனது நாளைய 'விடிவுக்காக' காத்திருக்க ஆரம்பிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாததீபம்



தமிழ் மக்களின் வீட்டு முற்றங்களில் பூத்துப்படர்ந்து நின்ற முல்லைப் பந்தல்களைப் பிய்த்தெறிந்து கொண்டு இரும்புச் சப்பாத்துக்கள் அத்துமீறித்தடம் பதித்தன.

வீட்டின் கதவுகள் எட்டி உதைந்து திறக்கப்பட்டன.

அப்பாவி அப்பாக்களின் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கிக் குழல்கள் நீண்டன. அன்பான அம்மாக்களின் தலைக்கு மேலே துவக்குப் பாத்திகள் உயர்ந்தன. அக்காவும், தங்கைமாரும் அழுத குரல்கள் அர்த்தமற்றுப் போயின. இளைஞர்கள் காரணமெதுவுமின்றிச் சிறைகளில் தள்ளப்பட்டனர். தீ வைப்புக்கள், படுகொலைகள் மேலும் மேலும் தொடர்ந்தன. அதுவரை பரீட்சை மண்டபங்களிலும், நேர்முகப் பரீட்சைகளிலும் பார்வையிடப்பட்ட அடையாள அட்டைகள் இரும்புத் தொப்பிக்காரர்களால் பிறந்த வீட்டினுள் வைத்தே பரிசீலிக்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை.

இவ்வாறு ஈழத்தமிழினத்திற்கு எதிரான வன்கொடுமைகள் சிறீலங்காவிலிருந்து எமது தாயகத்தின் வாயில் கடந்து, வீட்டு முற்றத்தினையும் தொட்டுவிட்ட உச்சக் காலகட்டம். அது 1983ஆம் ஆண்டின் நடுப்பகுதி.

மாற்று வழி ஏதுமின்றி ஆயுதங்களால் செப்பனிடப்பட்ட பாதைவழி தமிழ் இளைஞர்கள் வேகமாக நகரத் தொடங்கினர்.

அப்பாவி ஈழத்தமிழ் மக்கள் மீது கொண்ட மேலான அன்பின் நிமித்தம், தாயக மண் மீது கொண்ட தீராத பற்றின் நிமித்தம், தமிழீழ விடுதலையை இலட்சியமாய் வரித்துக் கொண்ட எம் தலைவர் அவர்களின் தலைமையினைத் தேர்வுசெய்து, தனது வங்கிப் பதவியினை விட்டெறிந்து, வசதி வாய்ப்பு, அந்தஸ்து என்ற போலிகளைப் புறந்தள்ளி, விடுதலைப் பாதையில் இணைந்த 'ஹரி' என்றழைக்கப்பட்ட ஹரிச்சந்திரா எனும் இளைஞன்.

தளபதி ராதாவாகி விடுதலைப் பயிரின் ஆணிவேருக்கு உரமூட்டிய இனிய பொழுதுகளை மீட்டிப் பார்ப்பது காலத்தின் தேவையாகி நிற்கிறது.

யாழ். குடாநாட்டின் சிறீலங்காப் படை முகாம்களிலிருந்து படையினரை வெளியேறவிடாது தடுத்து நிறுத்தி படைமுகாம் வாசலில் முற்றுகையிட்டு நின்ற 1985, 86, 87 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலாலி தளத்திலிருந்து எறிகணைகள், விமானக் குண்டு வீச்சுக்கள் சகிதம் முன்னேற முயன்ற படையினரை எதிர்த்து மிகச் சிறிய அணியைக் கொண்டு விரட்டியடித்த வீரச்சமர் ஒன்றில் தலைமை தாங்கி நின்ற யாழ். மாவட்டத் தளபதி லெப். கேணல் ராதா அவர்கள் வீரச்சாவடைந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்டன.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னே எமது கண்ணிவெடிகளால் சிதைந்துபோன சிறீலங்காப் படையினரின் இராணுவ மனோநிலை, அவர்களால் மிகப் பலமெனக் கருதப்பட்ட பவள் கவச வாகனத்தின் புதிய வருகையோடு சீர் செய்யவென முற்பட்ட வேளை, தளபதி ராதா தலைமையில் நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் மூலம் பவள் வாகனம் சிதைக்கப்பட்டவுடன் படையினரின் மனோ நிலையானது சிதைந்து, சிதைந்தே நகரத் தொடங்கியது.

இன்று 'பவள்'கவச வாகனம் உட்பட ராங்கிகள் படைத்தரப்பால் கைவிட்டு விட்டு புறமுதுகிட்டு ஓடும் இழி நிலை சிறீலங்காப் படையினருக்கு ஏற்பட்டுள்ளமையானது 20 ஆண்டு காலமாக படையினரின் போரிடும் ஆற்றல் சிதைந்து கொண்டே வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதேவேளை, எமது இயக்கத்தின் போரிடும் ஆற்றல் என்பது உலக இராணுவ ஆய்வாளர்களையும், இராணுவ வல்லுனர்களையும் வியப்பில் ஆழ்த்திய பெரும் செயல் என்றே நோக்கத்தக்கதாகவுள்ளது.

இத்தகைய போரிடும் ஆற்றலை நாம் ஒரே தடவையிலோ அல்லது ஓரிரு இராணுவ வெற்றிகளிலிருந்தோ பெற்றுக் கொண்டவை அல்ல. மிகுந்த பக்குவமாய், நுணுகி ஆராய்ந்து பாரிய இடர்களுக்கும், சிரமங்களுக்கும் மத்தியில் நின்று நீண்ட காலமாய் போராடிய எமது போராளிகள், தளபதிகளின் மனத்துணிவினாலும் அயராத உழைப்பினாலும் உயிர் அர்ப்பணிப்புக்களினாலும் பெறப்பட்டதே ஆகும்.

ஆரம்ப கால களங்களை தனது போரியல் அறிவினாலும், நுண்ணாய்வுத்திறனாலும் கையாண்ட தளபதி ராதா போன்றோர் இட்ட உறுதியான அத்திவாரமே இன்று நாம் பாரிய இராணுவ சக்தியாக பரிணமித்து நிற்க காரணமாயுள்ளன.

தனது ஆரம்பப் பயிற்சிப் பாசறையில் ஓர் ஆளுமை மிக்க இராணுவ உயர் அதிகாரிக்குரிய சிறப்பியல்புகளை வெளிக்காட்டி, எமது தலைவர் அவர்களாலும் மூத்த போராளிகளாலும் இனம் காணப்பட்ட ராதாவின் செயற்பாடுகள் அசாத்தியமானவை.

தளபதி ராதாவின் மீது எம் தலைவர் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் பாத்திரமாக, புதிய பயிற்சிப் பாசறை ஒன்றினை நடாத்தும் பாரிய பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது தலைவர் அவர்களின் எண்ணக் கருவினை சுமந்து நின்று முற்றிலும் மாறுபட்ட புதிய வடிவமைப்பிலான பயிற்சித்தளம் ஒன்றை அமைத்தார்.

அதுவரை இந்திய பயிற்சி அதிகாரிகளால் வழங்கப்பெற்ற பயிற்சி முறைகளிலிருந்து மாறுபட்டு, ஒழுங்குபடுத்தலுடன் கூடியதான முழுமையான சீருடை தரித்த நிலையில், தமிழீழப் பிரதேசத்தின் புவியியல் தரைத் தோற்றத்தைக் கருத்திற் கொண்டு தயார்ப்படுத்தப்பட்ட பயிற்சிப் பாசறையாக முழுமை பெற்று உயர் பயிற்சிபெற்ற இராணுவ அணி ஒன்றினை உருவாக்கிக் காட்டினார்.

இன்று பெயர் சூட்டி அழைக்கின்ற பல பயிற்றப்பட்ட சிறப்புப் படையணிகளைக் கொண்டதாக எமது விடுதலை இயக்கம் பரந்து விரிந்து நிற்பதற்கான பலமான முகவுரை ஒன்றினை எம் தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன்பே தளபதி ராதாவினூடாகச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளார் என்பதை நோக்கும் போது எமது விடுதலை அமைப்பின் பரிணாம வளர்ச்சியின் கனம் தெரிகிறது.

தனது பயிற்சிப் பாசறையின் மாணவப் போராளிகளுடன் 1985ஆம் ஆண்டு முற்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் களப் பணியாற்ற தலைவர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டபோது, இருபது பேர் கொண்ட அணியுடன் களமிறங்கிய தளபதி ராதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ராதா நினைவாக...



லெப்.கேணல் ராதா
(கனகசபாபதி ஹறிச்சந்திரா)
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
22.12.1956 - 20.05.1987

அவர்கள் எமது மூத்த தளபதி விக்டர் அவர்களுடன் இணைந்து அவருக்குப் பக்கபலமாக நின்று பல துணிகரமான இராணுவ வெற்றிகளை ஈட்டக் காரணமாக விருந்தார்.

1985ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி மன்னார் மாவட்டத்தின் நகர்ப் பகுதியில் அமைந்திருந்த மன்னார் பொலிஸ் நிலையம் வெற்றிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்ட வரலாற்றுப் பதிவு ஒன்றில் தளபதி ராதாவின் பணி காத்திரமானது.

முற்றிலும் கடலால் சூழப்பட்ட நகர்ப் பிரதேசமொன்றினுள் இரவோடு இரவாக படகுகள் மூலம் பயணித்து, நீண்டதூர நீரோரி பகுதி ஒன்றினைக் கனத்த சுமைகளுடன் கடந்து சென்று மின்னொளியால் போர்த்திய வண்ணம் உயர் பாதுகாப்புடன் கூடியிருந்த சிறீலங்கா பொலிஸ் நிலையத்தை இரண்டு மணி நேரத்துள் வெற்றிகரமாக தகர்த்தழித்ததுடன் பல பொலிசாரைக் கொன்று நூற்றுக் கணக்கான ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியதுடன் இரண்டு பொலிசாரையும் சிறைப் பிடித்துக் கொண்டு தளம் திரும்பிய தீரமிகு தாக்குதலில் தளபதி விக்டரின் பக்கத்துணையாகி நின்ற தளபதி ராதாவும் நினைவு கொள்ளத்தக்கவர்.

இன்று ஆனையிறவுப் பெருந்தள மீட்பு வெற்றிச் சமருக்காக எமது படையணிகள், கடற்புலிகளின் மயிர்க்கூச்செறியும் துணிச்சலுடன் தரையிறங்கி, நீரேரியைக் கடந்து உயர் பாதுகாப்புத் தளங்களைப் பிளந்து நின்று நிலையெடுத்து, வீரப்போர் புரிந்த களச்சூழல்.

அன்று தளபதிகள் விக்டர், ராதா ஆகியோரின் அடிச்சுவட்டிலிருந்து தொடர்வதை நாம் வரலாற்றுப் பெருமையுடனும், வீரசாதனையாகவும் எண்ணிப்பார்க்கக் கூடியதாகவுள்ளது.

1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ். கோட்டை இராணுவத் தளத்தின் உயர் பாதுகாப்பினுள் அமைந்திருந்த யாழ் - பொலிஸ் நிலையம் எமது மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்களின் தலைமையில் துணிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்டது. பின்பு 1987ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அதியுயர் பாதுகாப்புடன் கூடிய யாழ்-பொலிஸ் விடுதி மீண்டும் தாக்கி அழிக்கப்பட்டு ஐந்து பொலிசாரும் சிறைப்பிடிக்கப்பட்டனர். அப்போது தளபதி கேணல் கிட்டு அவர்களின் பக்கபலமாக தளபதி ராதா அவர்களும் அணி சேர்ந்து நின்றதும் இன்னுமொரு வரலாற்றுப் பதிவாகிறது.

இவ்வாறு மன்னார் கோட்டை வாயிலில் வைத்து இரண்டு டிரக் - வண்டியில் வெளியேறிய இராணுவத்தினரை உயர் பாதுகாப்பு வலயத்தினை, பொருட்படுத்தாமல் நின்று சிதைத்து அழித்த துணிகர வெற்றித்தாக்குதலிலும்,

யாழ்- காங்கேசன்துறைமுகத்தினுள் காபர் வியூ ஹோட்டலில் முகாமிட்டிருந்த இராணுவ மினி முகாமினுள் உயர் பாதுகாப்பினையும் ஊடறுத்து அதிரடியாய் உட்புகுந்து பல இராணுவத்தினரைக் கொன்றழித்து பல நவீன ஆயுதங்களையும் கைப்பற்றிய துணிவு மிக்க வெற்றித் தாக்குதலையும் தளபதி ராதா அவர்களே தலைமையேற்று நடாத்தினார்.

இவ்வாறு 18 வருடங்களுக்கு முன்பே சிறிய அணியைக் கொண்டு இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களை ஊடறுத்து அதிரடியாய் உட்புகுந்து பேரிடியாய் போய் வெடித்து இறுதியாகத் தீச்சுவாலைக்கே தீமூட்டி வென்ற எமது போர்ப்படையணிகளுக்கு முன்னால் இராணுவ அவமானங்களைச் சுமந்து நிற்கும் சிறீலங்காவின் படைத்தரப்பானது,

அடி அத்திவாரங்கள் சிதைக்கப்பட்டு, உருக்குலைந்த தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட நிலையில் உயர் பாதுகாப்பு வலயம் என்று இன்றைய சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்ட வண்ணம் பம்மாத்துக் காட்டுவது வேடிக்கைக்குரியதொன்றாகும்.

ஆரம்ப காலங்களில் பதுங்கித் தாக்குதல்களிலும் சரி, கண்ணிவெடித் தாக்குதல்களிலும் சரி, எதிரியின் முன்னேற்ற முயற்சிகள் மற்றும் சுற்றிவளைப்புக்களை முறியடிப்பதிலும் சரி, பொலிஸ் நிலையங்கள், இராணுவ மினிமுகாம்கள் மீதான தாக்குதல்களிலும் சரி சிறிய அணிகளைப் பயன்படுத்தி, மரபுவழிப் போருக்கு நிகரான போர்க்களங்களை எதிரிக்கு முன்னால் வரித்து எதிரியைத் தடுமாற வைத்த சாதனை மிகு களங்களில் நின்று வழிகாட்டிய வீரத்தளபதிகளில் லெப். கேணல் ராதாவின் பணியும் மெச்சத்தக்கது.

எமது இயக்கத்தின் பலம் என்பது எமது போராளிகளின் நெஞ்சுரத்தில் இருந்தே பிறக்கிறது என்ற எம் தலைவர் அவர்களின் உயிர்த் துடிப்புமிக்க வைர வரிகளுக்கு அன்று தொட்டு இன்றுவரை கடந்த 20 வருட கால ஆயுதப் போரில் எமது போராளிகளும் தளபதிகளும் காட்டிவரும் நெஞ்சுரம் என்பது வாழையடி வாழையென இரத்தமும், சதையுமான வரலாறாகி எம்மையும் எமக்கூடாக விடுதலைப் போராட்டத்தையும் இயக்கிக் கொண்டிருப்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

தனது இடது கையினால் இதமாகத் தலை தடவி, அப்பன்... என்று அன்பு மொழிபேசி தாயாய், தந்தையாய் தளபதியாய் இவ்வாறு போராளிகளின் தளபதியாய் நிலைமைகளைப் புரிந்து தன்னைப் பற்றி எம் நெஞ்சில் ஈரம் கசியவைக்கும், நினைவுகள் வீரம் பிறக்கவைக்கும்.

ஐசே! சிறி நாத்தை சுட்டுப்போட்டான் ஐசே! நாம் ஐ சுட்டுப்போட்டான். வார்த்தைக்கு வார்த்தை ஐசே, அப்பன்

**லெப்.கேணல் ராதா அவர்கள் குறித்த தனது மனப்பதிவுகளைப் பகிர்ந்துகொள்கிறார் தளபதி கேணல் பானு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பன் என்றும் வாழ்ந்து, நடத்திய தளபதி ராதாவின் நினைவுகள் என்றும் அழியாதவை.

18 வருடங்களுக்கு முன் எமது இயக்கம் திம்பு பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளை எமது போராளியான லெப். சாம் என்பவரை சிறீலங்காப் படையினர் சுட்டுக் கொன்றுவிட்டனர். அப்போது தளபதி ராதாவின் உளக்கொதிப்பும், சிங்களப் படையினரின் அத்துமீறிய போக்கும்,

பல வருடங்களுக்கு இடைவெளியின் பின் 5வது தடவையாக சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் எமது இயக்கம் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும்போது சர்வதேச கடற்பரப்பில் 11 போராளிகள் தமது உயிரை இழந்த துன்பகரமான சம்பவத்தையிட்டு நாம் அடைந்த உளக்கொதிப்பினையும் சிறீலங்கா கடற்படையினரின் அத்துமீறிய போக்கினையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது சிங்களப் படையினரின் அத்துமீறிய மன நிலைகளில் மாற்றம்வரக்கூடிய சான்றுகளைக் காண முடியாதுள்ளது.

லெப். சாம் என்ற போராளி அநியாயமாகச் சுடப்பட்டபோது, தளபதி ராதா அவர்களின் தலைமையில், மறுநாள் ஒரு சிறீலங்கா இராணுவ ஜீப் வண்டி 7 சிப்பாய்களுடன் தகர்க்கப்பட்டு பழிதீர்க்கப்பட்டது.

தமிழீழ தேசத்திற்கு எதிராக சிங்களப் படையினரால் ஒன்று செய்ய முடியுமாயின், அதை விட பல மடங்கு மிகச் சிறப்பானதாய் எங்களாலும் செய்ய முடியும் என்பதற்கான வரலாற்றுத் தடங்கள் கடைசிவரை இவ்வாறு தான் நகர்ந்துள்ளன.

ஆனாலும், இன்று நாம் அமைதி காத்து நிற்கின்றோம். புதிய மாற்றம் வேண்டிக் காத்துக் கிடக்கிறோம். சிறீலங்காவின் போக்கில் மாற்றம் வருமா? அதன் படைத்தரப்பு தன் பலவீனத்தை அறியுமா? சர்வதேச சமூகம் நிலைமைகளைப் புரிந்து கொண்டும் வாளாதிருக்குமா? எமது அளப்பெரிய அர்ப்பணிப்புக்களுக்கு நியாயமான பதில் வேண்டும். தளபதி ராதா போன்றோரின் கனவு ஈடேற வேண்டும்.

தளபதி ராதா யாழ்- இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் நாட்களில் சிரேஷ்ட மாணவத்தலைவனாகவும், கடேற் படையணியின் அணித் தலைவனாகவும், சாரணிய இயக்கத்தின் அணித் தலைவனாகவும் தேர்வு செய்யப்பட்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்.

கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் பெயர் பெற்று விளங்கி ஆளுமையுள்ள சிறந்த மாணவனாக கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள், சக மாணவர்கள், கல்லூரி சமூகம் என அனைவராலும் பண்புடன் பாராட்டப்பட்ட சிறந்த தலைவனாகவே வாழ்ந்தார் என்பது எங்கள் தளபதி ராதாவின் பிரகாசமிக்க இன்னுமொரு வரலாற்றுப் பக்கமாகவும் அமையப்பெற்றுள்ளது.

அத்தகைய உயர் பண்பு கொண்ட ராதாவால் இனங்காணப்பட்ட தலைமையில், விடுதலை இயக்கத்தில் இன்று வரை ஆயிரமாயிரம் இளைஞர்கள் இணைந்து விடுதலைக்காக தம் இன்னுயிர்களை அர்ப்பணித்ததில் நியாயம் இருக்கின்றது.

மன்னார் மாவட்ட தளபதியான லெப் கேணல் விக்டர் அவர்கள் வீரச்சாவடைந்தபோது ஏற்படப்போகும் இடைவெளியானது தளபதி ராதாவால் மிக விரைவாகவே நிவர்த்தி செய்து வைக்கப்பட்டது.



இவ்வாறு யாழ். மாவட்ட தளபதியான கேணல் கிட்டு அவர்கள் ஆபத்தான காயங்களுக்குள்ளானபோது அவரது பணியினை மிக விரைவாக செய்து முடித்த தளபதி ராதா அவர்களின் இழப்பானது ஜீரணிக்க முடியாத இடைவெளி ஒன்றினை ஏற்படுத்தியதுடன் இன்றுவரை அது நெஞ்சை அழுத்துவதாகவே தெரிகிறது.

இவ்வாறு தனது அசாத்தியமான திறமைகளினால் எதிரியைத் தோற்கடித்து போராளிகள், மக்களின் மனங்களை வென்று எம் தலைவர் அவர்களின் மனதில் நீங்கா இடம் ஒன்றைத் தக்கவைத்த ராதா அவர்களின் எண்ணம் நிறைவாக வேண்டும்.

தளபதி விக்டர் அவர்களின் வீரச்சாவின் பின் எமது மகளிர் படையணியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். சகல துறைகளிலும் தாமே தம்மை வழிப்படுத்திச் செல்லக்கூடிய ஆளுமைபெற வேண்டும் என்பதில் கருத்தூன்றி செயற்பட்டார்.

ஆயுதங்கள் தொடக்கம் வாகனங்கள் வரை தாமே தேறிவரும் ஒரு சூழலை உருவாக்கி எதிர்காலத்தில் பெரும் மரபுப் படையணியாக நிற்பதற்கான நம்பிக்கையினை ஊட்டியவர் தளபதி ராதா.

சமூக மற்றும் மத ரீதியிலான முரண்பாடுகளையும், மாற்று இயக்க உறுப்பினர்களுடன் ஏற்படுகின்ற முரண்பாடுகளையும் மிகவும் மென்மையான அணுகுமுறையினூடாக சீர்செய்வதில் அக்கறை காட்டினார். நேர்மையான அணுகுமுறையைப் பிரயோகித்தார், கற்பித்தார்.

சமூக மற்றும் மதத் தலைவர்களைச் சந்திக்கும் போதும், மாற்று இயக்க குழுத்தலைவர்களைச் சந்திக்கும் போதும் உயர் பண்புகளை வெளிக்காட்டினார்.

ஊருக்கு ஊர் பேசுகின்ற பேச்சு வழக்கினையும், நகைச்சுவைக் கதைகளையும் உன்னிப்பாகக் கேட்டு மகிழ்ந்து, மெய்மறந்து சிரிக்கும் தளபதி ராதா, போராளிகளின் இழப்பு மட்டுமல்லாது, மக்களின் இழப்பினையும் சமமாக மதித்து வேதனையோடு கண்கலங்கி நிற்கும் போது அவரிடமிருந்து குழந்தை உள்ளத்தை, சூழநின்ற நண்பர்களால் மட்டுமே அறிய முடிந்தது.

தளபதி ராதா அவர்களின் வரலாறு நீண்டது. சமகாலத்தோடு பின்னிய வரலாற்றுடன் அவரது 16ஆவது ஆண்டு நினைவு நாளில் சில குறிப்புகள் மட்டுமே இங்கு பதிவாகின்றன.

இன்றைய அமைதிக்கான பொழுதுகளுக்காய் ஆயிரம் ஆயிரம் நம்பிக்கை நட்சத்திரங்களை எம் விடுதலை வானில் விதைத்துவிட்டோம்.

இனிமேலும் புலிகளைப் போரில் வெல்ல முடியாது என்பதைப் படைத் தரப்பினருக்கும், சிங்கள பேரினவாதிகளுக்கும் உணர்த்திய பின்பே அவர்களால் யுத்த நிறுத்தமும், சமாதானமும் விரும்பப்பட்டன.

தம்மால் விரும்பியபோதெல்லாம் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை சுற்றிவளைக்கலாம் கைது செய்யலாம் என்ற நிலை மாறி,

தமிழ் மக்கள் துணிந்தால் எமது மண்ணிலேயே எதிரியைச் சுற்றி வளைக்கவும், சரணடையச் செய்யவும் கூடிய எமக்குச் சார்பான போர்ச் சூழல் உருவாகியுள்ளது என்ற பேருண்மை புரியவேண்டும்.

பேரினவாதிகள் தமது இனவாதப் போக்கினைக் கைவிட வேண்டும். படைத்தரப்பு தமது வரட்டுப் பிடிவாதத்தைக் கைவிட வேண்டும். அதுவரை நாம் பொறுமை காப்போம். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகள், அமைதி வழியே நிறைவேற்றப்பட வேண்டும். தளபதி ராதா போன்று ஆயிரம் ஆயிரம் வீரர்களின் கனவு நனவாக ராதா வான்காப்பு அணியோடு இணைந்த எமது ஏனைய படையணிகளும் அமைதிக்கான அணிவகுப்பில் வலம் வரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குற்றச்சாட்டுகளை மறுத்து பழ.நெடுமாறன் அளித்த வாக்குமூலம்:

பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் 12.08.2003 அன்று பழ. நெடுமாறன் மற்றும் சுப. வீரபாண்டியன், புதுக்கோட்டை இரா. பாவாணன், மருத்துவர் அ. தாயப்பன், சாகுல் அமீது ஆகியோர் மீது குற்றப்பதிவு நடைபெற்றது, பொடா சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததாகவும், அக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசியதாகவும் பழ. நெடுமாறன் மீது குற்றம் சாட்டப்பட்டது. தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்து பழ. நெடுமாறன் அளித்த வாக்குமூலம்:

அ-1. குற்றச்சாட்டு

இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களான நாகலாந்து, மிஜோரம் ஆகியவற்றில் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் தலைவர்களுடன் இந்திய பிரதமர் வாய்பாய், துணைப்பிரதமர் அத்வானி ஆகியோர் அல்பானிலும், டில்லியிலும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தப் பேச்சு வார்த்தை அதிகாரிகள் மூலம் தொடர்கிறது. தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதே குற்றம் என்றால் பிரதமரும், துணைப்பிரதமரும் செய்தது என்ன?

எனவே அரசியல் உள்நோக்கத்துடனும், பழிவாங்கும் போக்கிலும், சனநாயக உரிமைகளை நசுக்கவும் எங்கள்மீது இந்த வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களின் மேல் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

அ-2. குற்றச்சசாட்டு

இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்கள் எங்களோடு இரத்த உறவு பூண்டவர்கள். சிங்களவரின் இரத்தவெறி இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு அவர்கள் துயரக்குரல் எழுப்பும் போது நாங்கள் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடியாது. மனிதநேய உணர்வு கொண்டவர்கள் அனைவரும் அப்படி இருக்க முடியாது.

விடுதலைப்புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல. ஈழமக்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற இயக்கம். இந்திய விடுதலைக்காய் போராடிய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் இந்திய தேசிய இராணுவம் போன்று பிரபாகரன் அவர்கள் தலைமையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தங்கள் மண்ணை மீட்கப் போராடி வருகிறது.

எங்கேதான் 51க்கு மேற்பட்ட உலக நாடுகள் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துமாறு சிங்கள அரசை வற்புறுத்திச் சம்மதிக்கவைத்துள்ளன. இதன்மூலம் ஈழத்தமிழர்களின் ஏகபிரதிநிதியாக விடுதலைப்புலிகள் இயக்கத்தை அங்கீகரித்துள்ளன.

மறைந்த பிரதமர் அன்னை இந்திரா அவர்கள் கூறிய அறிவுரைகளை ஏற்க சிங்கள அரசு மறுத்த காரணத்தினால் புலிகளுக்கும், பிற போராளிகளுக்கும் ஆயுதப்பயிற்சி அளித்து ஆயுதம் வழங்க பிரதமர் இந்திரா ஏற்பாடு செய்தார். ஆனால் தாழ்வுணர்ச்சியுடனும், உள்நோக்கத்துடனும் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக நடாத்தப்பட்டுள்ளது.

வங்காள தேசமக்கள் விடுதலைக்காகப் போராடிய போது இந்திய அரசியல் கட்சிகளும் மக்களும் இந்திய இராணுவத்தை அனுப்பி உதவ வேண்டும் என வற்புறுத்தியதை பிரதமர் இந்திரா ஏற்று வங்க விடுதலைக்கு உதவினார். அதைப்போல ஈழத்தமிழர்களுக்கு தமிழக இந்திய அரசுகள் உதவ வேண்டும் என்பதைத்தான் நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.

ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டிய கடமையை நான் செய்ததற்காக பொடா சட்டம் என்மீது ஏவப்பட்டுள்ளது. ஈழத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் வாழவேண்டிய வயதில் தங்கள் மண்ணை மீட்க தங்களின் இன்னுயிர்களைத் தியாகம் செய்யும் போது அவர்களுக்கு ஆதாரமாக இந்த வயதில் சிறைசெல்லும் இறுதியாகம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது குறித்துப் பெருமைப்படுகிறேன்.-

-பழநெடுமாறன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட...

சுழிபுரம். த. பிரபாகரன்

'டும். டுடுடும். டும்'

'ணங்' கென்று ஒருமுறை கோயில் முழுவதும் குலுங்கி அதிர்ந்து அடங்கியது.

'என்ர அம்மாளாச்சி! நீதான் காப்பாத்த வேணும்' வயோதிபக் குரலொன்று மூலையிலிருந்து பதற்றமாய் எழுந்தது. என்ன செய்வதென்று புரியாமல், நகத்தை கடித்துத் துப்பியபடி தன் பயத்தைப் போக்க ரவி வெகுவாக முயன்றும் முடியவில்லை. இன்னமும் அவன் காதுகளில் குண்டுச் சத்தங்கள் எதிரொலித்துக்கொண்டேயிருந்தன. பகல் வேளையிலும் அந்தக் கோயில் மண்டபம் இருண்டு கிடந்தது.

சண்டையில் அகோரங்களுக்குப் பயந்து சூரியன் கூட பாதுகாப்பாய் மேகக்கூட்ட பதுங்கு குழிக்குள் ஒளிந்து விட்டது போலத் தோன்றியது.

'மலர்! விசர் வேலை செய்து போட்டன்'

'என்னப்பா? 'பாங்க்' புத்தகமென்னத்தையாவது விட்டிட்டு வந்திட்டியளே?'

'சீச்சி! அதெல்லாம் கொண்டந்தனான். காயப்போட்ட நெல்லை உள்ளுக்க தூக்கி வைக்காமல் வந்திட்டன்.'

யாரோ ஒரு பிரகிருதி அந்த நேரத்திலும் மனைவியிடம் காயப்போட்ட நெல்லைப் பற்றிக் கவலைப்பட்டான். ரவிக்கு எரிச்சல் வந்தது.

'இஞ்ச எல்லாரும் விடியப்பிறத்திலயிருந்து வயித்தைக் காயப்போட்டிட்டு எப்ப உயிர் போகுதோவெண்டு ஏங்கிக் கொண்டிருக்கிறம். இவரென்னெண்டால் காயப்போட்ட நெல்லைப்பற்றிக் கவலைப்படுகிறார்.' யாரோ ஒருவர் சற்றுப் பலமாகவே முணுமுணுத்தார்.

'சொச். சொச். சொச்'

எங்கோ பசியால் ஓலமிடும் பல்லியின் ஒலி கேட்டது.

'உச்சத்துப் பல்லி சொன்னா அச்சமில்லை ஒருத்தரும் பயப்பிடாதையுங்கோ. எங்களுக்கு ஒண்டும் நடக்காது.' அங்கிருந்த அறுபது பேருக்கும் ஆறுதல் கூறுவது போல் 'அறுபது வயது' தன் மேதாவித் தனத்தைக் காட்டிக் கொண்டது. ரவியின் வயிற்றுக்குள் உணவு வேண்டுமென்று சிறுகுடல் பெருங்குடலுக்கு அவசரமாக மகஜர் கொடுத்தது.

பொழுதுபுலரு முன்னரே - நாற்புறமும் வெடியோசைகளால் அதிர - என்ன நடக்கிறதென்பதே புரியாமல் கையில் அகப்பட்ட சாமான்களோடு அம்மன் கோயிலில் அடைக்கலமானோரில் ரவியின் குடும்பமும் ஒன்று. குடும்பமென்றால் ரவியும் தாயும் மட்டுந்தான். காலையில் எழும்பியதும் பல்துலக்கிய பின்பே ஏதாவது சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டவன் இன்று வழமைக்கு மாறாக வாய்கூடக் கழுவாமல் உரைப்பையை அவிழ்த்து சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பிஸ்கற்றுக்களை' சாப்பிடத் தொடங்கினான்.
'டும். டுடும். டும்'

மீண்டுமொருமுறை கோயிற் சுற்றுப்புறம் அதிர்ந்து போய் அடங்கியது. ரவியின் கையிலிருந்த பிஸ்கற்றுக்கள் பயத்தில் வாய்க்குள் செல்வதற்குப் பதிலாக வழிமாறிக் கீழே விழுந்து வீணாகின. ஆதரவாய் அவன் தலையை ஒரு கரம் வருடியது. தொட்டது யாரென்று திரும்பிப் பார்க்காமலேயே அவனுக்குத் தெரிந்தது.

'அம்மா!!'
'என்னப்பு சரியாப் பயந்து போனியோ?'
'இல்லையணை'

நம்பவில்லையென்பதை தாயின் முகம் துல்லியமாக காட்டியது. கையிலிருந்த 'பிஸ்கற்றில்' இரண்டைத் தாயிடம் நீட்டினான்.
'இந்தாணை! விடியத் தொடக்கம் நீயுமொண்டுஞ் சாப்பிடேலை'
'வேண்டாமப்பு ! ஆறுதலாய் வீட்ட போய் சாப்பிடுவம்'
'வீடு?'

'நாங்கள் திரும்பிப் போகேக்க வீடு வீடாத்தான் இருக்குமோ? இல்லாட்டி உருக்குலைஞ்சு போய் '.. வெறுங்கற்குவியலாய் 'மண்மேடாய் ?'

அப்படி நினைக்கவே ரவியால் முடியாமலிருந்தது. வியர்வைத் திட்டுக்களால் உடம்பு பிசுபிசுத்தது. பொதுவாக சனநெருக்கடியென்பது ரவிக்குப் பிடிக்கவே பிடிக்காத விசயம்.

ஆனால் இப்போது -

அம்மன் கோயிலுக்குள் அறுபது பேரோடு ஒருவனாய்- மற்றவர்களின் மூச்சுக்காற்றின் உஷ்ணத்தை உணரக்கூடிய நெருக்கத்தில் நசிபடுவதை உயிராசையால் பொறுத்துக் கொண்டான்.

கொஞ்சம் தூரத்தேயிருந்த தூணோரமாய் சாய்ந்தபடி தன்னையே பார்த்துக் கொண்டிருந்த கனகரோடு கதைத்தாவது மனம் கொஞ்சம் இறுக்கம் தளர்ந்து இதமாகும் போல ரவிக்குத் தோன்றியது.

'என்னண்ணை' அப்படி உத்துப் பாத்துக்கொண்டிருக்கிறியள்'

'இல்லையடா தம்பி ! நானும் காலமையில இருந்து ஒண்டும் சாப்பிடேலை' கனகர் எதற்கு அடிகோலுகிறாரென்று ரவி புரிந்து கொண்டு, கொஞ்ச பிஸ்கற்றுக்களை அவரிடம் நீட்டினான். அரைநொடியில் அத்தனை பிஸ்கற்றுக்களும் கனகரின் வயிற்றுக்குள் புகுந்து பதுங்கிக் கொண்டன.
'தம்பி ரவி! இந்தச் சத்தங்களெல்லாம் எப்ப ஓயும்?' வயிறு குளிர்ந்த சந்தோசத்தில் வம்பளப்பதற்குக் கனகர் எத்தனித்தார்.

'எனக்கெப்படியண்ணை தெரியும்' நானும் உங்களை மாதிரித்தானே ஓடியந்து இந்தக் கோயிலுக்குள்ள இருக்கிறன்.'

'ரண்டு பகுதிக்கும் சரியான இழப்பாம். 'ரவுண்' பக்கம் அறம்புறமா அம்புலன்சுகள் ஓடித்திரியுதாம். எல்லாமறிந்த வல்லவராய்த் தன்னை இனங்காட்டுவதற்காக கற்பனையில் உதித்தவற்றைப் புதிய வதந்திகளாக உலவவிட்டார் கனகர்.

'ஆஆய்ங்ங் ..... ஆஆய்ங்ங்'

சின்னக்குழந்தை ஒன்றின் அழுகை ரவியின் கவனத்தை அதன்பக்கமாய் ஈர்த்துக் கொண்டது.

அகலவிரித்த அழகிய கரிய இமைகளோடு கூடிய தன் சின்னவிழிகளால் சுற்றுமுற்றும் பார்த்தபடி தளிர்க்கால்களை உதைத்துத் தன் ஆத்திரத்தை வலியுறுத்தியபடி அந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தது. ரவிக்கும் குழந்தைப் பிள்ளைகளென்றால் கொள்ளை ஆசை. அந்த ஆசை உயிருக்குப் பயந்து தஞ்சம் புகுந்திருக்குமிடத்திலும் அவனை விட்டகலாததால் அந்தக் குழந்தையை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

தன்னோடு கதைத்துக் கொண்டிருந்த ரவி சட்டெனக் கவனம் கலைந்து, குழந்தையைப் பராக்குப் பார்ப்பதைக் கண்டார் கனகர், பக்கத்திலிருந்த ஒருவரிடம் நடக்கும் சண்டையை பற்றித் தான் உண்டாக்கிய 'வதந்தி வைரசை' பரப்புவதில் அதி தீவிரமாய் ஈடுபடத் தொடங்கினார்.

நீண்ட நேரமாகியும் தாயின் அணைப்பிலிருந்த அந்தக் குழந்தையின் அழுகை நிற்கவில்லை. 'தினேக்ஷிகுட்டி! என்ர செல்லமெல்லோ! இப்ப என்னத்துக்கப்பு அழுகிறாய்?' தாயின் ஆறதலான விசாரிப்பினை விளங்காத அந்தத் 'தினேஷ்குட்டி' இன்னும் அழுது கொண்டிருந்தது.

'ஆராராராரோ ........!
ஓர்ரோரோரோ.......!

தாயின் தாலாட்டினைக் கேட்டுத் தூங்குவதற்குப் பதிலாக குழந்தை தன் அழுகையை இரட்டிப்பாக்கியது. பச்சிளங்குழந்தையொன்று இப்படி அழுவதைக் கண்டு ரவியால் சகிக்கமுடியவில்லை. தாயின் அணைப்பில் இருந்தும் அந்தக்குழந்தை அழுகின்றதென்றால் அதற்குப் பசியைத் தவிர வேறொன்றும் காரணமாக இருக்க முடியாது.

அந்நியனான தனக்கே அந்தக்குழந்தை பசியால்தான் அழுகின்றதென்பதை ஊகிக்க முடிகின்ற போது பெற்றதாய் ஏன் இன்னும் உணராமல் இருக்கிறாளென அவன் எண்ணிக்கொண்டான். அது தவறென அடுத்த நொடியே அவனுக்குப் புரிந்தது.

'கலா ! உவன் அப்போதையிலியிருந்து கத்திக்கொண்டே இருக்கிறான். உம்மால சமாளிக்க ஏலாட்டி என்னட்டத் தாரும் கொஞ்ச நேரம் நான் வைச்சிருக்கிறன் ' அவளுக்கு உதவி புரியக் கணவன் முன் வந்தான்.

'இல்லையப்பா! பிள்ளைக்குச் சரியான பசி . விடிய வெளிக்கிடேக்க குடிச்ச பாலோட எவ்வளவு நேரந்தான் பிள்ளையும் இருக்கும்' அது தான் அழுது கொண்டிருக்கிறான்.'

பதில் கூறிவிட்டு அந்தப் பெண் சுற்றுமுற்றும் நோட்டமிட்டாள். 'இவ்வளவு சனத்துக்கு முன்னால பிள்ளைக்கு எப்படி பால் குடுக்கிறது?' என்ற எண்ணம் குழந்தைக்குப் பால் கொடுக்க நினைத்த அவளின் -கலாவின்- முயற்சியை ஓரங்கட்ட வைத்தது. என்றாலும் அவள் மனந்தளராது 'சூப்பிப்போத்தலில்' தயாராய் வைத்திருந்த 'லக்டோஜன்' பாலை குழந்தைக்கு புகட்டத் தொடங்கினாள்.

ஆரம்பத்தில் தன் அழுகையை தற்காலிகமாக மூட்டை கட்டி வைத்துவிட்டுப் பாலைக்குடித்த குழந்தை 'அது தன் தாயின் பாலல்ல!' என்பதை உணர்ந்து கொண்டதும் - அந்தப் பாலைத் தொடர்ந்து குடிக்காது அடம் பண்ணி மீண்டும் தன் அழுகையை அரங்கேற்றத் தொடங்கியது.

'என்ர செல்லமெல்லே! குழப்படி செய்யாமல் குடியப்பு! ' தாயின் கெஞ்சலை தினேக்ஷி என்கின்ற அந்தக் குழந்தை கொஞ்சமும் கேட்டதாய் தெரியவில்லை. அந்தப்பெண்-கலா- மீண்டுமொருமுறை சுற்றியிருந்த சனங்களை நோட்டமிட்டாள் . உயிருக்கு உத்தரவாதமில்லாது அங்கு குழுமியிருந்த வேளையிலும் - மீசைவைத்திருந்த சில ஜென்மங்களின் கண்கள் கலாவையே கண்கொத்திப் பாம்பாக பார்த்துக்கொண்டிருந்தன. இதையெல்லாம் தூரத்தேயிருந்து கவனித்துக்கொண்டிருந்த ரவியால் பொறுக்க முடியவில்லை. உள்ளூர எழுந்த ஆத்திரத்தை வெளிப்படுத்த வழிபுரியாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மனதுக்குள்ளேயே புழுங்கத்தொடங்கினான்.

'உந்த எளியதுகளுக்கு உயிருக்குப் பயப்பிடுகற நேரத்திலையும் பூந்து பூந்து பாக்கிற நாய்ப்புத்தி விட்டுப் போகலை' என்று எண்ணிக்கொண்டே மெதுவாய் வேறுபக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டான் ரவி.

'கலா! தினேசை என்னட்டத் தாரும்!'

கலாவின் கணவன் பிள்ளையைக் கையேற்றுக் கொண்டான். தான் கைமாற்றப்பட்ட போது தன்பசி தீர்க்கபடலாமென்ற எண்ணத்தில் கொஞ்ச நேரம் அமைதியாய் இருந்த குழந்தை கொஞ்சநேரத்தில் பழையபடி அழுகைப் பல்லவியை உச்சஸ்தாயில் பாடத் தொடங்கியது.

சிறிது நேரம் சமாதானப்படுத்தி அழுகையை நிறுத்தமுயன்று கணவன் தோற்றுப் போனதைக் கண்ட கலா, பிள்ளையை மீண்டும் வாங்கிக் கொண்டாள்.

பிள்ளையின் அழுகையை நிறுத்திக் காட்டும் வீம்போடு முதலில் குழந்தையைத் தூக்கிய கணவன், ஒன்றும் பேசாமல் தன் தோல்வியை ஒப்பக்கொள்பவனைப் போல குழந்தையை கொடுத்துவிட்டு துணோடு சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

நீண்ட நேரமாய் அதிர்வுச் சத்தங்கள் எதுவும் கேட்காததால் கோயிலில் கூடியிருந்த சனத்திடையே நிம்மதிப் பெருமூச்சுக்கள் எழத் தொடங்கின.

'சண்டையெல்லாம் முடிஞ்சுது போல கிடக்குது'

'அப்பிடிச் சொல்லேலாது திடீரெண்டு துவங்கினாலும் துவங்கும். எதுக்கும் ஆயித்தமாய் இருக்கோணும்'.

'இவ்வளவு நேரமும் ஒரு அசுமாத்தமும் இல்லை இனிச் சண்டை துவங்குமெண்டே நினைக்கிறாய் எனக்கெண்டா அதில நம்பிக்கையில்லை'

'எங்கட நாட்டில எப்ப சண்டை துவங்கும். எப்ப முடியும் எண்டு வடிவாய்ச் சொல்லேலாது . எதுக்கும் கொஞ்ச நேரமிருந்து பாப்பம்.'

குண்டுச்சத்தங்கள் கேட்காததால் ஏற்பட்ட அமைதி இவ்வாறான உரையாடல்கள் உருவாவதற்கு ஏதுவாகியது.

என்றாலும் இன்னும் ரவியின் மூளையில் ஓர் ஓரத்தில் மெல்லியதாய் அதிர்வின் எதிரொலிகள் கேட்டுக்கொண்டேதானிருந்தன. அவன் சில மணித்துளிகளிற்கு முன்பு வெடித்த குண்டுச்சத்தங்களின் தாக்கத்திலிருந்து முழுவதுமாய் மீளமுடியாது நனவும், நனவிலியும் கொண்ட இரட்டைச் செயற்பாடுடையவனாய் , தூணோடு சாய்ந்திருந்த தன் தாயின் மடியில் ஆதரவாய் படுத்துக்கொண்டான்.

தினேஷ் என்ற அந்தக் குழந்தையும் பசி மயக்கத்தில் அமிழ்ந்துபோய், அழுகையை நிறுத்திவிட்டு தன்தாயின் தோளில் சாய்ந்திருந்தது.

'பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்.....'

ரவியின் மனசுக்குள் அந்தக் குழந்தையைப் பார்த்ததும் காரணமில்லாது அந்தப்பாடல் ஒலித்தது.

'முந்தித்தானா கோயில்ல பசியால அழுத குழந்தைக்குப் பாற்கடலையே குடுத்த கடவுள், இந்த பிள்ளையின்ர பசி தீர என்ன செய்யப் போகுது....?'

அவன் சிந்தனையில் கேள்வி எழுந்தது.

'எல்லாரும் நெடுகக் கோயிலுக்குள்ள அடைஞ்சு கிடக்கிறதெண்டு முடிவு பண்ணிட்டியளே? சத்தங்களும் கனநேரமாக்கேக்கேலை இனியொண்டும் நடக்காது வாங்கோ! எல்லாரும் அவரவற்ற வீடுகளுக்குப் போவம்'

வீறாப்பு வசனம் பேசியபடி கனகர் புறப்பட, ஆட்டு மந்தையாய் அடைபட்டிருந்த சனங்கள் தத்தம் மூட்டை முடிச்சுக்களோடு வீடுகள் நோக்கிப் புறப்படத் தொடங்கினர்.

மாலை மங்கிக் கொண்டிருந்தது. காலையில் நடந்த யுத்தத்தின் கோரத்தாலோ என்னவோ மேற்குத்திசைவானம் சிவப்பாய் விரிந்திருந்தது. சனங்களைப் போலவே பறவைக்கூட்டங்களும் தத்தம் இருப்பிடங்களுக்கு வேகமாய் விரைந்து கொண்டிருந்தன.

'சில வேளையில அதுகள் கூட சண்டைக்குப் பயந்து இடம்பெயர்ந்திட்டு, இப்ப திரும்பவும் தங்கட இடத்துக்குப் போகுதுகளோ?' என்று ரவியின் மனது எண்ணிக்கொண்டது.

'உங்கா! உங்க..... மேலே பாருங்கோ!!!'

மெதுவாய் நகர்ந்து கொண்டிருந்த சனக்கூட்டம் சட்டென சலசலத்தது. எதற்காய் அந்த அவலக்குரல் என்று அறிவதற்காய் ஒரு செக்கன் மௌனத்தில் கரைந்து போனது. அப்படிக் கழிந்து போன ஒரு செக்கனில் தம்மை நோக்கி வரும் ஆபத்தை அவர்களனைவரும் உணர்ந்து கொண்டனர்.

'உய்ங்ங்ங்..... உய்ங்ங்ங்.....'
வானத்திரையைக் கிழித்தபடி -
இயந்திரக்கழுகுகள் திடீரெனத் தோன்றி -

'உய்ங்ங்.......உய்ங்ங்.....'
வேகமாகக் குத்தி -
'ஊஊஊஊய்ங்ங்.ங்.....'
நிமிர்ந்து-
'உய்ய்ய்ய்ய்ங்ங்......'
தன் வயிற்றிலிருந்து குண்டுகளை எச்சமிட
'டுடுடும்!!'
'என்ர ஐயோ!!!!'

நிலம், மரம், கோயில் ....... எல்லாமே அகோரமாய் ஆடி அதிர்ந்தது அடங்குவதற்கு அதிக நேரம் பிடித்தது. மரக்கிளை முதல் மண்திட்டிவரை தசைப்பிண்டங்கள் அங்குலத்திற்கொன்றாய்-





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்குவேறு ஆணிவேறாகப் பிய்ந்து
விதவிதமாய் அணிவகுத்துச்
சிதறிக்கிடந்தன.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை
சிவப்பாய் ரத்தம் படர்ந்திருந்தது -
'என்ர ஐயோ! என்னை விட்டிட்டுப்
போட்டியளே!!'
'அம்மா! அம்மா!! என்ரையம்மா!!!'
'கடவுளே! இப்படி வலிக்குதே!'
'ஐயோ! என்ர கால்.....என்ர கால் எங்கே'

கூக்குரல்கள் செவிப்பறையைக்
கிழிக்கும் வேகத்தோடு பரவின.
ரவிக்கு மூச்சு முட்டியது.
முதுகு எரிந்தது.
எழும்பவே முடியவில்லை.
மிக அதிகமாய் தான்
காயப்பட்டிருப்பதையும், இன்னும்தான்
உயிரோடிருப்பதையும் உறுதிப்படுத்திக்
கொண்டதும். அவன் மனம் அடுத்த
தேடலில் குதித்தது.
'அம்மா எங்கே?'
விழிகளுக்கு வீரியமூட்டிச் சுற்றுமுற்றும்
பார்த்தான்.

அதோ! அதோ! ஈனஸ்வரத்தில்
முனகியபடி வெள்ளைச் சீலையால்
முகத்திலிருந்து இரத்தத்தை துடைத்தபடி
இருப்பது யார்?
ரவியின் அம்மாவா? ஆம் அது ரவியின்
அம்மாவே தான்! ரவியும் தன் தாயைக்
கண்டு கொண்டான்.
'கடவுளே! உமக்கு நன்றி!'

தாயை அழைத்து தான்
உயிரோடிருப்பதை உணர்த்துவதற்காய்
கொஞ்சம் தலையை உயர்த்தினான்.
இப்போது அவனால் தாயை நன்றாகப்
பார்க்க முடிந்தது. அத்தோடு இன்னும் சில
காட்சிகளும் எதேச்சையாக அவன்
கண்ணில்பட்டன.

கொஞ்ச நேரத்திற்கு முன்பு
குழந்தையின் அழுகையை நிறுத்தப்
போராடிய கலா என்ற பெண்ணும், அவள்
கணவனும் மூலைக்கொன்றாய் அங்கங்கள்
சிதறிச் சிதைந்திருந்தார்கள்.

'ஆஆங் ...... ஆஆங்!'
இதென்ன சத்தம்?

அந்தக் குழந்தை தினேஷ்
மெல்லமெல்லத் தவழ்ந்து வந்தது. அந்தக்
குழந்தை என்ன செய்யப் போகின்றதெனப்
பரபரப்போடு பார்த்தான்.

குழந்தை தன் தாயின் சடலத்தை
அணுகியது.
மெதுவாய் நகர்ந்து தாயின்
நெஞ்சுப்பகுதிக்கு வந்து -
மார்பினில் வாயினைப் பதித்து -
பாலினைப் பருகத் தொடங்கியது.
இப்போது அந்தப் பெண்ணின்
மார்பழகை எவனும் உற்றுப்
பார்க்கவேயில்லை. ரவிக்கு அழுகை,
ஆத்திரம், அனுதாபம் எல்லாமே ஒன்றாய்க்
கலந்து வந்தன.

'பாலுக்குப் பாலகன்
வேண்டியழுதிட ......'
மீண்டும் அந்தப் பாடல் மனதில்
ஒலித்தது. ரவி குழந்தையைப் பார்த்து
பார்த்து அழத்தொடங்கினான். குழந்தை
இப்போது தான் அழுகையை நிறுத்தித்
தாயின் பாலைக் குடிப்பதில் தீவிரமாய்
ஈடுபடத் தொடங்கியது.



# மனமாற்றம்

காற்றும் வருகிறது
மழையும் தூறுகிறது
வடக்கும் மேற்கும்
அண்டமும் கண்டமும்
எல்லாம் வருகிறது
சுகமா என்கிறது
உண்டீரா
உடுத்தீரா படுத்துறங்கினீரா
படுவேகமான
குசல விசாரிப்புகள்
கோயிலுக்கு நேர்ந்துவிட்ட
மிருகக் கூட்டமென
நீள் வரிசையில் நிற்க வைத்து
வாள் தீச்சொற்களால்
சுட்டெரித்த போது
ஏன் சரித்தீர்
ஏன்தொலைகின்றீர்
வாய்ப்பூட்டு நிலையிலிருந்த
அத்தனை விலாசங்களும்
இன்றென்ன புது அரிப்பு
விந்தையான விசாலமடிப்பு

மனம் பேதலித்து
சித்தப்பிரமை ஏந்திய முகம்களாய்
வைத்தியரை நேர்ந்து
சுகமெதிர்பார்த்து நின்றபோது
கரைசேர்க்க கப்பலாய் இல்லை
பழுச்சுமந்தோம்
நிமிர்ந்தோம்
வானத்தில் ஒளியேற்றினோம்
இருளைத் தொலைத்தோம்
ஊன்று கோல்களின்றி
கண்ணாடி கவசமின்றி
மனதுக்குச் சரியெனப்பட்டதை
இதயத்தில் பதித்து
முண்டுகொடுத்து முன்னேறினோம்
காலம் எமதானது
நேர்காணலுக்கு முண்டியடிப்பு
அலைவரிசைகளில்
அழகிய அலங்கரிப்பு
காலமாற்றத்தின்
கைங்கரியம் கச்சிதமாயுள்ளது
எல்லாம் இருக்குமிடத்தில்
இருந்து கொண்டால் சுகமே!

மிருசுவிலூரான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவுக்குறிப்பு

தமிழர் விடுதலை வரலாற்றில் ஒகஸ்ட்

## குடியுரிமை பறிப்பு

தமிழர்கள் என்னும் காரணத்துக்காக குடியுரிமைச் சட்டம் என்னும் போர்வையின் கீழ் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை 1948.08.20 அன்று சிங்களப் பேரினவாத ஆட்சி பீடத்தினால் பறிக்கப்பட்டது.



## சுதுமலைப் பிரகடனம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 1987.08.04 அன்று முதன்முதலில் தமிழீழ மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனமாகும்.

"இந்திய—இலங்கை ஒப்பந்தமானது எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது" என்பதை மிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந்தார் தலைவர் அவர்கள்.

## வல்வெட்டித்துறைப் படுகொலை

1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2,3,4 ஆகிய திகதிகளில் யாழ்.குடாவின் வல்வெட்டித்துறைப் பகுதியில் வீடுகளிலும், வீதிகளிலும் நின்ற மக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதேவேளை, இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களும் அடித்துக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைச் சம்பவத்தில் சிறுவர், மாணவர், வயோதிபர், பெண்கள் உட்பட 64 தமிழ் மக்கள் கொல் லப்பட்டதோடு, சொத்துக்கள், உடமைகள் என்பனவும் பெருமளவில் நாசமாக்கப்பட்டன.

## வீரமுனைப் படுகொலை

அம்பாறை மாவட்டத்தில் 1990.08.10 அன்று கோவில் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லீம் காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டனர். 100 தமிழ் மக்கள் வரை கொல்லப்பட்ட இத்தாக்குதல், ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களது ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்டது.

## அராலிக் கண்ணிவெடித் தாக்குதல்

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிங்களப்படைத்துறையின் வடபிராந்திய தலைமையை ஒரே தாக்குதலின் மூலம் இல்லா தொழித்தது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித்தாக்குதல். சிங்கள ஆட்சியாளர்களையும், படைத்தலைமையையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய இத்தாக்குதல் 1992.08.08 அன்று நிகழ்த்தப்பட்டது.

## மயிலந்தனைப் படுகொலை

மட்டக்களப்பு மயிலந்தனைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்குப் பயந்து பதுங்கச் சென்றவேளை, அங்கு பதுங்கியிருந்த சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் அப் பொதுமக்களை வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர். 1992.08.09 ஆம் திகதி நடத்தப்பட்ட இத் தாக்குதலில் 50 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## சண்டிலிப்பாய் படுகொலை

1995.08.21 அன்று 'ரெகன் பயர்' என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிறீலங்கா படையினரின் எறிகணை வீச்சில் 12 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

அம்பாறை மத்திய முகாம் (சென்றல் காம்ப்) பொலிஸ் நிலையம் மீது 2001.08.20 அன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குத லில் 25 ற்கும் மேற்பட்ட சிறீலங்காப் பொலிசார் கொல்லப்பட்டதுடன், பெருமளவு ஆயுதங்களையும், விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜூன் - ஜூலை

### 06.06.2003

06.06.2003 அன்று தமிழீழப் பகுதி எங்கும், தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன. யாழ் குடாநாட்டிலும், மாணவர் எழுச்சிப் பேரணிகள், பொதுக்கூட்டங்கள் என்பன நடைபெற்றுள்ளன.

### 14.06.2003

விடுதலைப் புலிகளின் சரக்குக்கப்பல் ஒன்று, சர்வதேசக் கடற் பரப்பில் வைத்து சிங்களக் கடற்படையினரால், 14.06.2003 அன்று காலை, தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

### 27.06.2003

யாழ்ப்பாணத்தில், 27.06.2003 அன்று, பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சி, வரலாறு காணாத பெருந்திரளான மக்கள் கலந்து கொள்ள மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்கள் காலையில் இருந்து, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தை நோக்கி சாரைசாரையாக படையெடுக்க ஆரம்பித்தனர். தமிழீழத் தேசியத் தலைவரின் பெரியளவிலான உருவப்படத்தைத் தாங்கியபடி பேரணிகளாகவும் மக்கள், மைதானத்தை நோக்கிச் சென்றனர். மைதானத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான, மேடையில், இராணுவச் சீருடையில் தமிழீழத் தேசியத் தலைவர் தோன்றும் பெரியளவிலான உருவப்படம் நடுநாயகமாக விளங்கியது. சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 05.07.2003

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் காத்திரமான ஒவ்வொரு வளர்ச்சிப்படிநிலையையும் தம்மின்னுயிரை அர்ப்பணித்துப் படைத்த அதிஉன்னத தியாகிகள் கரும்புலிகளை, எமது தேசம் 05.07.2003 அன்று வணங்கி நிற்கின்றது.

தமிழீழத்தின் அனைத்துப்பகுதிகளிலும், கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. நெல்லியடியில், கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த பகுதியில், சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில், ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். இதுபோன்று அனைத்துப் பகுதிகளிலும், நினைவுநாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

### 12.07.2003

ஜூன் மாதம் 14ம் திகதி, அதிகாலை, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து, விடுதலைப் புலிகளின் வணிகக்கப்பலை சிங்களக் கடற்படையினர் தாக்கி மூழ்கடித்த சம்பவத்தில் வீரச்சாவடைந்த போராளி மாலுமிகளின் பெயர்விபரங்களை விடுதலைப் புலிகள் 12.07.2003 அன்று வெளியிட்டுள்ளனர். லெப்டினன்ட் கேணல் அன்புக்குமரன் (வல்லிபுரம் சிவக்குமார், ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), லெப்டினன்ட் கேணல் செந்தமிழ்(சின்னராசா சிவரூபன், வெற்றிலைக்கேணி), லெப்டினன்ட் கேணல் கதிர் (செல்வரட்னம் சசிதரன், சாவகச்சேரி), லெப்டினன்ட் கேணல் கஜேந்திரன்(நல்லையா கிறிஸ்ணன் கபில் தினேஸ், கிளிநொச்சி), மேஜர் நிர்மலன்(ரணராஜா ரகுநாத், நெடியகாடு, வல்வெட்டித் துறை), மேஜர் கன்னியநாடான்(பொன்னம்பலம் கிருபாகரன், பளை), மேஜர் வள்ளுவன்(துரைரட்னம் சைலீஸ்வரன், ஏழாலை), மேஜர் நிமால்(தங்கராஜா செல்வகுமார், பரந்தன்), மேஜர் மணியரசன் (முத்துலிங்கம் லவகுமார், முல்லைத்தீவு), மேஜர் வீரநாதன்(தங்கராஜா தயாநிதி, மாங்குளம்), கப்டன் செழியன் (சொக்கலிங்கம் ஜெகன், கிளிநொச்சி), மோகன் (முல்லைத்தீவு) ஆகியோரே இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்தவர்கள் என விடுதலைப் புலிகளின் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 15.07.2003





விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும், முதல் தாக்குதல் பிரிவுத் தளபதியுமான மாவீரர் லெப்டினன்ட் சீலன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவெழுச்சி நாள் நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், கலந்து கொண்டார். வன்னியில், பிரத்தியேகமான ஓர் இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்ட தேசியத் தலைவர் அவர்கள், லெப்டினன்ட் சீலனின் பெரியளவிலான உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்து, ஈகச்சுடரேற்றி தனது நினைவுவணக்கத்தைச் செலுத்தினார். மாவீரர் லெப்டினன்ட் சீலனின் தாயாரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

லெப்டினன்ட் சீலன், மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை, ஆனந் ஆகியோரின் நினைவுத் தூபி, 15.07.2003 அன்று மீசாலையில் திறந்துவைக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### ஓயாத அலைகள் ஒன்று இராணுவ நடவடிக்கையின் ஏழாம் ஆண்டு நினைவு:

ஓயாத அலைகள் ஒன்று இராணுவ நடவடிக்கை மூலம், சிங்களப்படையின் முல்லைத்தீவு பெருமுகாமை, தமிழரின் போரணி வெற்றிகொண்ட வரலாற்றுப் பெருநிகழ்வின் ஏழாம் ஆண்டு நினைவு, 19.07.2003 அன்று முல்லைத்தீவில் கொண்டாடப்பட்டது. முல்லைத்தீவு பொது மைதானத்தில், நடைபெற்ற இவ்வெற்றிவிழா நிகழ்வில், போராளிகள், பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

பொதுச்சுடரினை அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. சோ. தங்கனும், தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசையும், வெற்றிச் சுடரினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசாவும் ஏற்றிவைத்தனர்.

வெற்றிவிழா நிகழ்வில் உரையாற்றிய வடமுனைத் தளபதி கேணல் தீபன், முல்லைத்தீவு முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கிக் கைப்பற்றப்பட்டதானது, தமிழ்மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பாரிய திருப்பத்தை ஏற்படுத்தியது எனத் தெரிவித்தார். 1890ம் ஆண்டு, பிரிட்டிஷ் படைகள் வசமிருந்த முல்லைத்தீவுத் தளத்தை பண்டார வன்னியன் வெற்றிகொண்டு பீரங்கிகளைக் கைப்பற்றினான் எனத் தெரிவித்த கேணல் தீபன், 1996ம் ஆண்டு, தேசியத் தலைவரின் திட்டமிடல் வழிகாட்டலில், சிங்களப்படை வசமிருந்த முல்லைத்தீவு முகாம் மீட்கப்பட்டு, பீரங்கிகள் கைப்பற்றப்பட்டன எனவும் தெரிவித்தார். இந்த வெற்றியானது, தமிழரின் போர் வரலாற்றில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது எனவும் தெரிவித்தார்.

### கிழக்கில் பூரண கதவடைப்பு, கடமை மறுப்புப் போராட்டம்:

விடுதலைப் போராளிகள் சிங்களப்படையினரால் கண்மூடித்தனமாக கைதுசெய்யப்படுவதைக் கண்டித்தும், ஜூலை11ம் திகதி, பூதூரில், வேலுப்பிள்ளை பரணீதரன் என்ற பொதுமகன் சிங்களப்படையின் கைக்கூலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்தும், 21.07.2003 அன்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில், பூரண கதவடைப்பு கடமை மறுப்புப் போராட்டத்தை மக்கள் நடத்தியுள்ளனர். இரு மாவட்டங்களிலும், இயல்புச் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பித நிலையடைந்தன. பொதுப்போக்குவரத்துக்கள், பாடசாலைகள், நீதிமன்றங்கள், வர்த்தகச் செயற்பாடுகள் யாவும் நடைபெறவில்லை. அரச, தனியார் அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. மட்டக்களப்பு பிரதேச செயலகமும் மூடப்பட்டிருந்தது.

### சிங்கள அமைச்சர் மாணவர்களாலும், பொதுமக்களாலும் வழிமறிக்கப்பட்டு திருப்பிஅனுப்பப்பட்டார்:





யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், நடைபெறவிருந்த வைபவம் ஒன்றில் கலந்துகொள்ளச் சென்ற சிங்கள அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா, மாணவர்களாலும், பொதுமக்களாலும் வழிமறிக்கப்பட்டு திருப்பிஅனுப்பப்பட்டுள்ளார். இச்சம்பவம் 22.07.2003 அன்று இடம்பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், ஜேர்மனிய புவுணு எனப்படும் பொது அமைப்பினால், புனரமைக்கப்பட்ட 55பாடசாலைகளை மீண்டும் அரசிடம் கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொள்ளச் சென்ற ஜெயலத் ஜெயவர்தனாவே, மாணவர்களாலும் பொதுமக்களாலும் பலாத்காரமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். சர்வதேச பொதுநிறுவனங்களால் திருத்தப்பட்டு ஏற்கெனவே பாடசாலைகளின் அதிபர்களிடம் பாடசாலைகள் கையளிக்கப்பட்டுள்ளன எனவும், ஆனால், அரசியல் லாபம் கருதி சில அரசியல்வாதிகளால், திட்டமிடப்பட்ட நிகழ்வே தம்மால் எதிர்க்கப்பட்டதாகவும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் கிறிஸ்ணதாஸ் தெரிவித்துள்ளார். உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், எத்தனையோ பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லமுடியாத அவலம் இன்றும் இருப்பதாகத் தெரிவித்த கிறிஸ்ணதாஸ், பாடசாலைகள் கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொள்ள எந்த அமைச்சர்களுக்கும் அருகதைகிடையாது எனத் தெரிவித்துள்ளார். இந்தப் பாடசாலைகள் புனரமைக்கப்பட்டதற்கும் ஜெயலத் ஜெயவர்த்தனாவுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்த அவர், இப்படியானவர்கள் இவ்விழாக்களில் கலந்துகொள்வதை மக்கள் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

### போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கடற்கண்காணிப்புப் பிரிவின் அதிகாரி, புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் சந்திபபு:






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




செல்லக்கிளி அம்மானின் நினைவுத்தூபி, தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் திறந்துவைக்கப்பட்டது:









போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கடற்கண்காணிப்புப் பிரிவின் அதிகாரி, 23.07.2003 அன்று விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். விடுதலைப் புலிகளின் கடற்பயணம் மற்றும் கடற்புலிகளின் கடற்பயிற்சி, கடற்செயற்பாடு குறித்து, உருவாக்கப்பட்ட வரைவு குறித்தே பேச்சப்பட்டதாகத் தெரியவருகின்றது.

1983ம் ஆண்டு, யூலை மாதம், 23ம் திகதி, தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில், மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய, திருநெல்வேலித் தாக்குதலை, தலைமையேற்று நடத்தி, அதன்போது வீரச்சாவடைந்த லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபி, தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் 23.07.2003 அன்று திறந்து வைக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதேவேளை, நினைவுத்தூபி திறக்கப்படுவதை முன்னரேயே அறிந்து, மதியம் அவ்விடம் விரைந்த சிங்களப்படையினர், கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில், அதனைச்சுற்றி தகரமறைப்பு அடிக்க முற்பட்டதுடன், அங்கு காவலரண் அமைக்கும் முயற்சியிலும் ஈடு பட்டனர். இதனையடுத்து, அங்கு நூற்றுக்கணக்கில் திரண்ட பல கலைக்கழக மாணவர்கள் பொதுமக்கள், எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து, அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. சிங்களப்படையினர் உடனடியாக அங்கிருந்து சென்றுவிடவேண்டும் எனவும், செல்லக்கிளி அம்மானுக்கு தூபி அமைப்பது தமது உரிமை எனவும் வாதிட்ட மாணவர்களும் பொதுமக்களும், தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததுடன், இதனைக்குழப்ப சிங்களப்படையினர் முற்பட்டால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் எனவும் எச்சரித்தனர். இது போர் நிறுத்த மீறல் என, இராணுவத்தினர் வாதிட்டபோதும், தனியார் காணி யில் நினைவுத்தூபி அமைப்பது, ஒப்பந்தத்தை மீறும் செயல் அல்ல என, அங்கு சென்றிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் எடுத்து விளக்கினர். இதனை ஏற்றுக்கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, இரா ணுவத்தினரை அங்கிருந்து செல்லுமாறு பணிக்குமாறு கேட்டுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டுச் சென்றனர். திட்டமிட்டபடி அன்று மாலை, செல்லக்கிளி அம்மானின் நினைவுத்தூபி, பெருந்தொகையான பொதுமக்கள், போராளிகள், மாணவர்கள் கலந்துகொள்ள திறந்துவைக்கப்பட்டது.

**புலனாய்வுத்துறையைச் சேர்ந்த இருபத்தைந்துபேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்:**

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின், புலனாய்வுத்துறையைச் சேர்ந்த இருபத்தைந்துபேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என, சிறீலங் காவின் பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். 04.08.2003 அன்று, பாராளுமன்றத்தில், எதிர்கட்சியினரின் கேள்வி ஒன் றிற்கு, பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்த அவர், கொல்லப்பட்ட புலனாய்வுப் பிரிவினரில், நால்வர் இராணுவ அதிகாரிகள் எனவும், எட்டுப்பேர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும், பதினொருபேர் இராணுவத்திற்கு தகவல் தரும் பொதுமக்கள் எனவும், இருவர் பொலிஸார் எனவும் தெரிவித்துள்ளார்.

**பன்னீராயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் முப்படைகளையும் விட்டு தலைமறைவாகியுள்ளனர்:**

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், இதுவரை பன்னீ ராயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் முப்படைகளையும் விட்டு தலை மறைவாகியுள்ளனர் என, சிறீலங்கா தரப்புச் செய்திகள் தெரிவிக் கின்றன. இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதத்தில் மாத்திரம் 4337 படையினர் படைகளைவிட்டு தப்பி ஓடியுள்ளனர் எனவும், தப்பியோடும் படையினர் தென்பகுதிகளில், குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரு கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**இளநிலை அதிகாரிகள் பயிற்சிநெறி நிறைவுநாள் நிகழ்வு:**

இளநிலை அதிகாரிகள் பயிற்சிநெறி நிறைவுநாளில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியதோடு, பயிற்சியை நிறைவுசெய்த போராளிகளுக்கு சான்றிதழ்களையும் வழங் கிக் கௌரவித்தார்.

26.07.2003 அன்று, வன்னியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பயிற்சிப் பாசறை ஒன்றில் ஒரு தொகுதி இளநிலை அதிகாரிகள், தமது பயிற்சி நெறியை நிறைவுசெய்துகொண்டனர். இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், கருத்துரை வழங்கிய தோடு, விசேட பெறுபேறுகள் பெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசில் களையும், தேர்ச்சிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார். இந்நிகழ்வில் கேணல் தீபன், கேணல் சூசை, கேணல் பானு, கேணல் சொர்ணம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், கேணல் விதுசா, கேணல் துர்க்கா ஆகியோருடன், பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு பணிமனை மீது தாக்குதல்:**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு பணிமனை மீது, 06.08.2003 அன்று, கூலிக்குழுக்களைச் சேர்ந்தோர் என நம்பப்படுபவர் கள், கைக்குண்டு வீசித் தாக்கியுள்ளனர். மட்டக்களப்பு மகிழடி வீதியில் அமைந்திருக்கும், புனர்வாழ்வுக்கழக பணிமனைமீது அன்றிரவு 8.30 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கைக்குண்டை வீசிய கூலிகள் ஓடித்தப்பித்துள்ளனர். இக்கைக்குண்டுத் தாக்குதலில், பணி யக வளாகத்தில் நின்ற, பிரித்தானியாவைச் சேர்ந்த மிதிவெடியகற்றும் நிறுவனம் ஒன்றின் வாகனம் ஒன்று கடுமையாகச் சேதமடைந்துள்ளது. மட்டக்களப்பில், தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிமனை மீது நடத்தப் பட்ட இரண்டாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதமும், இத்தகையதொரு தாக்குதல் நடத்தப்பட் டுள்ளமை தெரிந்ததே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்










## 'உலைக்களம்' கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா:

01.08.2003 அன்று, யாழ் பல்கலைக்கழகத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரையின், உலைக்களம் என்ற கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா நடைபெற்றது. சிறப்புற நடைபெற்ற இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன் அவர்கள் சிறப்புரை ஆற்றியிருந்தார்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜூலை -23.2003, கறுப்பு ஜூலையின் இருபதாம் ஆண்டு நினைவுநாள்







சுவிஸில் நினைவுகூரப்பட்ட கறுப்பு ஜூலையின் இருபதாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுப் பதிவுகள் இவை.












ஜேர்மனியில் நினைவுகூரப்பட்ட கறுப்பு ஜூலையின் இருபதாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுப் பதிவுகள் இவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை

www.erimalai.com

Fax: (33) 1 43 58 11 91

Email: erimalai@erimalai.com

ERIMALAI, C/O T.C.C France,
341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்